
விலை: ரூபா 20 பக்கங்கள் 28

சொந்த மண்ணில் சுருண்டது இலங்கை



பக். 27

# உதயன்

வானிலை
கூ.வெ. 30 °C
கு.வெ. 29 °C
தெளிவான வானிலை

சுடர் 30 | கதிர் 237 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆடி 5, செவ்வாய்க்கிழமை 21.07.2015


# சிங்கள மக்களின் அனுதாபம் பெற போலியான போர்க்குற்ற அறிக்கை

## தேர்தல் பரப்புரையில் மஹிந்த அணியின் ஆகப் பிந்திய யுக்தி

கொழும்பு, ஜூலை 21

நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்களின் கவனத்தைத் திசை திருப்பி, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான அனுதாப அலையைத் தோற்றுவிக்கும் நோக்கில், போலியான ஐ.நா. போர்க்குற்ற அறிக்கை ஒன்றை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயர்மட்ட அரச பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி, டெய்லி நியூஸ் ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.



அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் - அதாவது, நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு வாரங்கள் முன்னதாக, இந்தப் போலியான போர்க்குற்ற அறிக்கை வெளியிடப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இந்த அறிக்கையில் சுமார் 50 பேர் போர்க்குற்றவாளிகளாகப் பிரகடனப்படுத்தப்படலாம். இவர்களில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைகளினதும் முன்னாள் தளபதிகள், இறுதிக் கட்டப் போரில் முக்கியமான பங்களிப்புச் செய்த இராணுவத் தளபதிகளின் பெயர்கள் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுதாப அலையைத் தோற்றுவிக்கவே இந்தப் போலி அறிக்கை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பின்னர், போர்க்குற்ற அறிக்கை

பக்கம் 24

## சிவாஜிலிங்கத்தை பிரபாகரனின் மைத்துனராக்கிய மஹிந்த

கொழும்பு, ஜூலை 21

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மைத்துனருக்குத் தேர்தலில் போட்டியிடும் சூழலை தானே ஏற்படுத்திக் கொடுத்ததாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

[illegible]த்கமவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மைத்துனரான எம்.கே. சிவாஜிலிங்கம் தேர்தலில் போட்டியிடும் சூழலை எனது அரசே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கும் எனது அரசே சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது என்றும் அவர் கூறியுள்ளார்.

எம்.கே. சிவாஜிலிங்கமும், மஹிந்த ராஜபக்ஷவும் பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(த-5)

## யாராலும் அழிக்கமுடியாத புலிகளை நான் அழித்தேன்

### குருநாகலில் மஹிந்த பெருமிதம்

கொழும்பு, ஜூலை 21

யாராலும் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்ற கொலைகார அமைப்பான விடுதலைப் புலிகளை அழித்தோம். எங்கள் வீரர்களின் சடலங்கள் தினம் தோறும் தென்பகுதிக்கு வரும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவந்தோம்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷ, போர் வெற்றியைப் பிரதானப்படுத்தியே தனது பரப்புரைகளை முன்னெடுத்துள்ளார். நேற்றுமுன்தினம் கல்கமுவ தேர்தல் தொகுதியில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

போர் நடந்த காலத்தில் குருநாகல் மாவட்ட பிள்ளைகள் தான் அதிகளவில் போருக்குச் சென்றனர். தோல்வியடையச் செய்ய முடியாதவர்கள் என்று உலகில் முதலிடத்தில் இருந்த கொலைகார

பக்கம் 24

ரம்ழான் மாதத்தில் ஐயாயிரம் பேர் சாவு



ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதல்களின் எதிரொலி

பக். 13

## சடலமாக மீட்கப்பட்ட சிறுமி யாரென தெரியாது

கிளிநொச்சி, ஜூலை 21

குஞ்சுப்பரந்தன் பகுதியில் நேற்றுமுன்தினம் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சிறுமி யார் என்பது நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பொறிக்கடை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள குஞ்சுப்பரந்தன் வயல்வெளியில் மேல் ஆடையுடன் உருக்குலைந்த

பக்கம் 24

## சுகாதாரத் தொண்டருக்கு 6 மாதங்கள் பணி நீடிப்பு

### தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சென்ற முன்னாள் எம்.பி. சரவணபவன் நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 21

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைத் தொண்டர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டமையால் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த நிலையில், அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கான பணியைத் தற்காலிகமாக 6 மாதங்கள் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சர வணபவன்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அது தொடர்பில் நாடாளு

பக்கம் 24

## உடற் தகுதியீனம் உள்ளவர்கள் வாக்களிக்க போக்குவரத்து வசதி

### 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஜூலை 21

உடற்தகுதியீனம் காரணமாக நடந்தோ அல்லது பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தியோ வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்ல முடியாத ஒருவர், தான் வசிக்கும் மாவட்டத்தின் அரச அதிபருக்கு (தெரிவத்தாட்சி அலுவலர்) போக்குவரத்து வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

குறித்த நபரே நேரடியாக விண்ணப்பிக்க முடியும் எனவும் அவ்வாறு இல்லாவிடின் அவருக்குப் பதிலாக வேட்பாளர் அல்லாத வேறொருவர் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல்கள் ஆணையாளர்

பக்கம் 24

## நீதியான தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்க

### ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜூலை 21

நீதியானதும் - சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

அரச நிறுவனங்கள் மற்றும் அவற்றுக்குச் சொந்தமான சொத்துகளை சட்டவிரோதமாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

செயலாளர் பி.பீ.அபயகோனுக்கே இந்த ஆலோசனையை ஜனாதி

பக்கம் 24

## 10 வருடங்களுக்கு ஐ.தே.க. மக்களுக்கு சேவையாற்றும்


### நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

பொதுத் தேர்தலின் பின்னர் அமையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு தொடர்ந்து 10 வருடங்களுக்கு நாட்டு மக்களுக்கு சேவையாற்றுமென விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹற்றன், கினிகத்தேனை நகரில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசில் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய ஓர் அமைச்சுப் பதவி தனக்கு வழங்கப்படவில்லை எனவும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் நல்ல அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன என்றும் நவீன் திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.



மேலும், வீதி அபிவிருத்தி என்ற பெயரில் பல மோசடிகளை செய்த மஹிந்த, பொதுமக்களின் பணத்தையும் சூறை

பக்கம் 24

## கே.பி. குறித்து ஆராய்கிறார் சுஜீவ

கொழும்பு, ஜூலை 21

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தராக விளங்கும் கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் தொடர்பில் ஆராயவுள்ளதாக பிரதி

பக்கம் 24



அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதைப் பொருள் எதிர்ப்பு மாதத்தை முன்னிட்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் ஆள்கடத்தல் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகத்தை வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் நடத்தி வருகின்றனர். குறித்த வீதி நாடகம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நடத்தப்பட்டது. (ற-9)

# ஐ.நாவின் போதைத் தடுப்பு அலுவலகம் இலங்கையில்

**இலங்கையை மையமாகக் கொண்டு கப்பல்கள் மற்றும் படகுகள் மூலமாக ஐரோப்பிய நாடுகளுக்கு கடல்மார்க்கமாக போதைப்பொருள் விநியோகம் தாராளமாக இடம்பெற்று வருகின்றது என்று ஜனாதிபதி போதைப் பொருள் நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளர் கீர்த்தி பண்டார தெரிவித்தார்.**

கொழும்பு, ஜூலை 21

ஐரோப்பாவுக்கு போதைப் பொருள்களை விநியோகிக்கும் கேந்திரஸ்தானமொன்றாக இலங்கை பயன்படுத்தப்பட்டு வருவதை அடுத்து போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதானமான நடவடிக்கை அலுவலகத்தை கொழும்பு நகரில் நிறுவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே, அது தொடர்பாக பேச்சு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி போதைப் பொருள் நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளர் கீர்த்தி பண்டார தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் உற்பத்தி செய்யப்படும் ஹரோயின், ஹசீஸ், மர்ஜுவானா போன்ற போதைப் பொருள்கள் தளமார்க்கமாக ஆசியாவின் ஊடாக இதுவரை காலமும் ஐரோப்பிய நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டு வந்திருந்தாலும் கூட உலக போதைப் பொருள் தடுப்பு செயற்றிட்டத்தின் ஊடாக அந்த விநியோக வலையமைப்பு பெருமளவு முடக்கப்பட்டுள்ளது.

அதனால், இலங்கையை மையமாகக் கொண்டு கப்பல்கள் மற்றும் படகுகள் மூலமாக ஐரோப்பிய நாடுகளுக்கு கடல்மார்க்கமாக போதைப்பொருள் விநியோகம் தாராளமாக இடம்பெற்று வருவதாக கீர்த்தி பண்டார தெரிவித்துள்ளார். (ற-22)

## விபுலானந்தர் நினைவு தினம்




கிளிநொச்சி, ஜூலை 21

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும், கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் வவுனியாவில் 2ம் குறுக்குதெரு, கண்டி வீதி இணையும் சந்தியில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தர் சிலை முன்றலில் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு தமிழ் மணி அகளங்கன் தலைமையில் கோலாகலமாக இடம் பெற்றது .

இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்கள் ஜி.ரி.லிங்கநாதன், து.ரவிகரன் ,முன்னாள் உபநகர பிதா சந்திரகுலசிங்கம் (மோகன்) ,ஓய்வு பெற்ற பிரதேச செயலாளர் க.ஐயம்பிள்ளை, கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், எஸ் .எஸ்.வாசன், வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்க தலைவர் சந்திரகுமார் (கண்ணன் )தமிழ் தேசிய இளைஞர் கழக தலைவர் சு.காண்டீபன், நகரசபை ஊழியர் யோ.பபிந்தன், கச்சேரி ஊழியர் நாகராசா, சமூக ஆர்வலர்கள் தியாகராசா, சுரேஸ் உட்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர் .(21,421)

## மாணவிகள் கௌரவிப்பு





தென்மராட்சி, ஜூலை 21

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண நிலை தமிழ்த் தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவிகள் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

பிரிவு 1 இசையும் அசைவும் போட்டியில் முதலிடம் பெற்ற ம.சண்மிகா மற்றும் பிரிவு 4 க்கான சிறுகதைப் போட்டியில் மூன்றாமிடம் பெற்ற செல்வி வி.வினோஜா ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர்.(ற 9)

# யாழ்.தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு

## பணிப்பாளர் மீது மாணவர்கள், விரிவுரையாளர்கள் சரமாரியாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 21

கொக்குவிலில் உள்ள யாழ். தொழினுட்பவியல் கல்லூரியில் நிலவும் சுகாதார சீர்கேட்டுக்கு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பழிவாங்குவதை நிறுத்துமாறு கோரியும் கல்லூரி மாணவர்கள் நேற்று கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்லூரியின் வகுப்பறைகளில் பல மாதங்களாகப் புறா எச்சங்கள், இறக்கைகள் கொட்டிக் கொண்டிருக்கின்றன. வகுப்பறைகளின் மேல்புறமாக இருந்து சில வருடங்களாக அவை அவ்வாறு கொட்டியவாறுள்ளன. இவை இன்னும் சீர் செய்யப்படவில்லை. லெவல் சீற்றுகளாக புறாக்களின் எச்சங்கள், இறக்கைகள் உள்ளிட்ட கழிவுகள் இன்னும் கொட்டிக் கொண்டுதான் இருக்கின்றன என்று மாணவர்களும் விரிவுரையாளர்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

மலசலகூடம் சில நாள்களுக்கு முன்னர் கழுவப்பட்டுள்ள போதும் அதனைப் பாவிக்க முடியாதவாறு அவை இன்னும் நாற்றமெடுக்கின்றன. இந்தப் பிரச்சினை தொடர்பில் பல மாதங்களுக்கு முன்னரும் சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் கல்லூரியின் நிர்வாகத்தினர் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கல்லூரியின் சிற்றுண்டிச் சாலையில் சுகாதார சீர்கேடு நிலவுகிறது. பொதுவாக உணவுத் தரத்தை நிலை நிறுத்தும் வகையில் சுகாதாரத் திணைக்களத்தால் தரப்படுத்தல் அனுமதி உள்ளவர்கள்தான் உணவகத்தை நடத்துகின்றனர். ஆனால் கல்லூரியில் அதனைக் காண முடியவில்லை. தரப்படுத்தல்கள் உள்ள பலரும் கல்லூரி உணவகத்தை நடத்த விண்ணப்பித்த போதும் அவர்களுக்கு அனுமதி வழங்காது அந்தத் தரம் இல்லாதவருக்கே அனுமதி வழங்கியதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். சில வகையான உணவுகள் விற்பனை அனுமதி அட்டையில் குறிக்கப்பட்டதனைவிட அதிக விலைக்கு உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் மாணவர்கள் கூறுகின்றனர்.

அவை பற்றி யாராவது கதைக்க முற்பட்டால் அவ்வாறு கதைப்பவர்களை பணிப்பாளர் யோகராஜன் நன்றாகவே பழிவாங்குவார். அதனால் கல்லூரியில் உள்ள பிரச்சினைகள் பற்றி கதைப்பதைத் தவிர்த்து அனைவரும் பொறுமை காத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இனியும் பொறுக்கமுடியவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். மாணவர்கள் மாத்திரமன்றி விரிவுரையாளர்களும் தாராளமாகவே குற்றச்சாட்டுக்களை அடுக்குகின்றனர்.

கல்லூரியில் உள்ள பிரச்சினைகள் பற்றிக் கதைக்க முற்பட்ட பல விரிவுரையாளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். கல்லூரிக்கு வெளியே பழிவாங்குவது தனக்குப் பெரிய வேலை இல்லை என்று நேரடியாகவே பணிப்பாளர் அச்சுறுத்தினர் என்றும் ஒருவர் கூறுகின்றார்.

இவை தவிர கல்லூரியின் பிரதான மண்டபத்தில் 'மதுப் பார்ட்டி'களும் நடைபெற்றன என்றும், அவை கடந்த சிலமாதங்களாகவே இல்லாதுள்ளன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பணிப்பாளர் முற்பகல் அலுவலகத்துக்கு வந்து கையெழுத்திட்டுவிட்டுச் சில நிமிடங்களில் புறப்பட்டுச் சென்றுவிடுவார். பிற்பகல் வந்து கையெழுத்திட்டுவிட்டுச் சென்றுவிடுவார். அவர் அலுவலகத்தில் இருப்பது மிகக் குறைவு. அவரது கையெழுத்துப் பெறுவது என்றால் மணித்தியாலக் கணக்கில் அவரது அலுவலக வாயிலில் காத்துக் கிடக்க வேண்டும் என்றும் விரிவுரையாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கல்லூரியில் நிர்வாக சீர்கேடுகள் பல இடம்பெற்றுள்ளதனையும் ஆசிரியர்களும் மாணவர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். அது பற்றிய முறைப்பாடுகள் வடக்கிலுள்ள அதிகாரிகளிலிருந்து, மத்திய அதிகாரிகள், ஜனாதிபதியின் அலுவலகம் வரையும் ஏராளமாக அனுப்பியுள்ளதாகக் கூறும் அவர்கள், 3 கோப்புக்களாக உள்ள அவற்றை எடுத்துக் காட்டினர்.

கல்லூரியில் உள்ள முக்கியமான வேலைகளைச் செய்யுமாறு சில ஊழியர்களிடம் கேட்டால் இன்று பணிப்பாளரின் வீட்டில் வேலை செய்து களைத்துவிட்டோம், இன்று செய்ய முடியாது என்று சில நாள்கள் கூறியுள்ளனர் என்று விரிவுரையாளர்கள் கூறினார்கள்.

இவை அனைத்தையும் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து பணிப்பாளர் யோகராஜனுக்கு முன்பாகவே கூறினார்கள்.

இது தொடர்பில் பணிப்பாளர் யோகராஜனிடம் கேட்டபோது, தனது வீட்டில் வேலை வாங்கியமை, பிரதான மண்டபத்தில் மது 'பார்ட்டிகள்' நடந்தன என்று கூறப்பட்டவற்றை முற்றாக மறுத்தார்.

கல்லூரியில் நிலவும் சுகாதாரப் பிரச்சினை தொடர்பில் கொழும்பிலுள்ள தொழினுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளோம். அவர்கள் கல்லூரிக்கு வந்து பார்வையிட்டிருந்தனர். திருத்தம் செய்வதற்கான பண மதிப்பீடு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுவிட்டது.- என்றும் தெரிவித்தார். (ற-1)

## மாவைக் கந்தன் காம்யோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 21

மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோயில் காம்யோற்சவப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

நாளாந்தம் காலை ஆறு மணி தொடக்கம் இரவு ஆறு மணி வரை ஆறு காலப்பூசைகள் நடைபெறும். உசத்காலப்பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்டைப்பூசை, வசந்த மண்டப பூசை ஆகியன நாளாந்தம் இடம்பெறும்.

விசேட தினங்களான திருக்கார்த்திகை அடுத்த மாதம் எட்டாம் திகதியும், தேர்த் திருவிழா ஓகஸ்ட் பதின்மூன்றாம் திகதியும் , தீர்த்தத் திருவிழா ஓகஸ்ட் பதினான்காம் திகதியும் நடைபெறும்.

தீர்த்தத் திருவிழா நாளில் கீரிமலையில் காலை ஆறு மணிக்கு கண்டத் தீர்த்தம் நடைபெறும். முருகப்பெருமான் அங்கிருந்து மாலை ஐந்து மணிக்கு மாவிட்டபுரத்துக்குத் திரும்புவார். (அ)

# இடம்பெயர்ந்த வாக்காளருக்கு உரிய வசதிகள்

## யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ந.வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்குரிய வசதிகள் கடந்த காலங்களைப் போன்று வழங்கப்படும் என்று தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ந.வேதநாயகன் இது தொடர்பிலான அறிவித்தல் மக்களுக்கு காலக் கிரமத்தில் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின், தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங் குகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 50 ஆயிரத்து 146 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்காக 521 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில வாக்களிப்பு நிலையங்கள் மாற்றம் செய்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியைக் கோரியுள்ளோம். அது தொடர்பில் இன்னமும் பதில் கிடைக்கப் பெறவில்லை.

மேலும், இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டதைப் போன்று வசதிகள் வழங்கப்படும். அது தொடர்பில், பின்னர் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

இதேவேளை, தேர்தல் வன்முறைகள், முறைகேடுகள், அத்துமீறல்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகள் இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவத்தாட்சி அலுவலர் குறிப்பிட்டார். (ற-5)

## தியாகிகள் உதித்த மண்ணில் துரோகிகளுக்கு இடமில்லை

### தமிழ்க் கூட்டமைப்புக்கே வாக்கிடுக என்றார் சரசாலை வடக்கு நித்தியா மன்றத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூலை 21

தியாகிகள் உதித்த மண்ணில் துரோகிகளுக்கு இடமே இல்லை. அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே எங்கள் உயிர் மூச்சு என்கின்றனர் சரசாலை மாதர்கள். – இவ்வாறு தெரிவித்தார் சரசாலை வடக்கு நித்தியா மன்றத்தின் தலைவி திருமதி கமலேஸ் வரி ஞானச்சந்திரன்.

கடந்த சனிக்கிழமை மாலை சரசாலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு ஆதரவு திரட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த நிகழ்வில் நித்தியா மன்றத்தின் உறுப்பினர்களும், விளையாட்டுக் கழக இளைஞர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

நிகழ்வுக்கு தலைமை தாங்கிய திருமதி கமலேஸ்வரி அங்கு மேலும் தெரிவித்தாவது:–

தினசரி சூரியன் உதிக்கத் தவறிவிட்டாலும் எங்கள் உதயன் அரியபல செய்திகளுடன் எங்கள் கதவைத் தட்டி எம்மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த தவறியதில்லை. அது ஒரு புதினப் பத்திரிகையாக மட்டுமன்றி தமிழ் மக்களின் உணர்வுகளையும் எமக்கு ஏற்படும் அநீதிகளையும் சர்வதேசத்துக்கும் எடுத்துச் செல்லும் அரிய பணியை செய்கின்றதும் உதயன்தான்.

இவ்வளவு உயர்வான நற்பணியை ஆற்றும் உதயனின் அதிபர் ஈ.சரவணபவன் இந்த சரசாலை மண்ணின் மைந்தன். ஓடி விளையாடிய பூமி என்பதில் பெருமையடைகின்றோம்.

அன்று சிறுவனாக இந்த மண்ணில் ஓடி விளையாடிய சிறுவன் இன்று நாடாளுமன்ற உறுப்பினராக, ஒரு தொழில் அதிபராக வந்துள்ளது இந்த மண்ணின் பாக்கியம். இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன் என்ற உரிமையுண்டு.

நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமல்லாமல் உதயன் மூலம் கிட்டும் ஆதாயங்களில் பெரும் பகுதியை பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும், விதவைகளாக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்துக்கும், கல்வி மற்றும் விளையாட்டு அபிவிருத்திகளுக்கும் பெரிய மனதுடன் செலவிட்டு வருகின்றார்.

எங்கள் மனதில் ஒரு சமூக சேவையாளராக உயர்ந்து நிற்கின்றார். அவரை ஆதரிக்க வேண்டியது எங்கள் கடப்பாடு. அமரர் வி.நவரத்தினம் போன்ற தேசிய தலைவர்களும், தியாகிகளும் தோன்றிய மண் இது. இங்கே துரோகிகளுக்கு இடமே இல்லை.

சிங்களக் கட்சிகளிடம் எங்களை அடைவு வைத்து பிழைப்பு நடத்தும் ஒரு கூட்டம் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வாக்குக் கேட்கின்றனராம். அவர்கள் வெல்லமாட்டார்கள். கூட்டணிக்குக் கிடைக்கும் வாக்குகளை சிதறடிப்பதே இந்தக் கூலிகளின் நோக்கம். எனவே தியாகிகள் பிறந்த இந்த மண்ணில் காட்டிக்கொடுக்கும் துரோகிகளுக்கு இடமில்லை. அவர்கள் விரட்டியடிக்கப்படுவார்கள். எனவே இந்த மண்ணின் மைந்தனாக ஈ.சரவணபவனின் வீட்டுச் சின்னத்துக்கும் 5 ஆம் இலக்கத்துக்கும் வாக்களித்து வெற்றி பெறச் செய்வோம்.–என்றார்.

## சேமக்காலை வீதியை விடுவிக்க இராணுவத்தினர் இணக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

வசாவிளான் மத்திய கல்லூரிக்கு முன்பாக இருந்து, ஒட்டகப்புலம் வரை செல்லும் சேமக்காலை வீதியை முழுமையாக மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கு படைத்தரப்பு இணாங் கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. அத்துடன் கீரிமலை நகுலேஸ் வரர் ஆலயத்துக்கு முன்பாக கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள கடைகள் மற்றும் வீடுகளையும் விரைவில் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாலியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில், மக்களின் தேவைக்குரிய முக்கியமான வீதிகள், மயிலிட்டி துறைமுகம், வளலாயில் ஒரு பகுதியை விடுவித்தல் தொடர்பில் பேசப்பட்டது. அதற்கு இராணுவத்தினர் மறுத்து விட்டனர்.

ஆனால் சாந்தை சந்தியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சில நூறு மீற்றர் நீளமான வீதி, மற்றும் சேமக்காலை வீதி ஆகியவற்றை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

சேமக்காலை வீதி விடுவிக்கப்படுவதன் ஊடாக, வசாவிளான் கிழக்கு மற்றும் பலாலி தெற்கு மக்கள் இலகுவாக பலாலி வீதியை வந்தடைய முடியும். அத்துடன் வசாவிளான் மத்திய கல்லூரியையும் வந்தடைய முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கீரிமலை நகுலேஸ்வரம் கோயிலுக்கு முன்பாகவுள்ள கடைக் கட்டிடங்கள், வீடுகள் சிலவற்றையும் கடற்படையினர் கைப்பற்றி வைத்திருக்கின்றனர். அதில் கடைக் கட்டிடங்களை விரைவில் விடுவிப்பதற்கு கடற்படையினர் இணங்கியுள்ளனர். வீடுகள், மிகப் பிரமாண்டமானவையாக இருப்பதுடன் அவற்றின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் இருப்பதன் காரணமாக, உரிமையாளர்களை பிரதேச செயலாளர் ஊடாக தொடர்பு கொண்டு அதனைப் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை விரைவில் கற்றல் செயற்பாடுகளை முழுமையாக ஆரம்பிக்க அனுமதிப்பதற்கும் படைத்தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. இருப்பினும் பாடசாலைக்கு, எந்தப் பாதையால் மாணவர்கள் செல்வது என்பது தொடர்பில் படைத்தரப்பினர் எதனையும் இன்னமும் தெரிவிக்கவில்லை. பாதை முடிவாகியதும், நடேஸ்வராக் கல்லூரியில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## தேவை ‘பி’ பொசிட்டிவ்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்போதனா வைத்தியசாலையில் பி பொசிட்டிவ் (B+) இரத்த வகைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக, யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அறிவித்துள்ளது.

‘பி’ பொசிட்டிவ் குருதி வகை உடைய, குருதிக் கொடையாளிகள் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு வந்து, குருதிக் கொடை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ற-5)

## கஞ்சாவுடன் கைதானோருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஒரு கிலோகிராம் கஞ்சாவை மோட்டார் சைக்கிளில் எடுத்துச்சென்ற வியாபாரிமூலை, பருத்தித்துறையை சேர்ந்த இரண்டு நபர்களை யாழ்ப்பாண பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர். இவர்களை நேற்று பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். சந்தேகநபர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். (ற-103)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு நோயாளர் காவு சக்கர நாற்காலியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற 2015 2016 ஆண்டுக்கான கழக நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வில் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்தின் இரண்டாவது உப ஆளுநர் லயன் கமிலஸ் பெர்னான்டோ மற்றும் நீர்கொழும்பு ஓரியன்ஸ் லயன்ஸ் கழக பிரதிநிதி லயன் பீற்றர் தேவா ஆகியோர் மருத்துவமனை பொறுப்பதிகாரியிடம் சக்கர நாற்காலியை கையளித்தனர். (ற-9)

## விடுப்பு எடுக்காது போட்டியிடும் சிவாஜி ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் விடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து குருநாகல் மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை தவிர, தேர்தலில் போட்டியிடும் ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் விடுப்பு எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நடப்புத் தேர்தலில் மாகாண முதலமைச்சர்கள், அமைச்சர், உறுப்பினர்கள் எனப் பலரும் போட்டியிடுகின்றனர். வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்களாக உள்ள ஆறு பேரும், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், க.சிவநேசன், க.சிவமோகன், எம்.கே. சிவாஜிலிங்கம், இ.அங்கஜன், ஜயதிலக ஆகியோரே போட்டியிடுகின்றனர்.

மூன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பிலும், ஒருவர் சுயேச்சையாகவும், ஒருவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் மற்றையவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும் போட்டியிடுகின்றனர்.

இவர்களில், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் சிவாஜிலிங்கம் மாத்திரமே, மாகாண சபையிலிருந்து விடுமுறை பெற்றுக் கொள்ளவில்லை. ஏனைய 5 பேரும் விடுமுறை எடுத்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் போது, மாகாண சபை உறுப்பினர் பதவி விலக வேண்டிய சட்ட ஏற்பாடுகள் எதுவுமில்லை. ஆனாலும், அவ்வாறு போட்டியிடும் மாகாண சபை உறுப்பினர்கள், தேர்தல் காலப் பகுதியில் சபை அமர்வுகளிலிருந்து விடுப்பு எடுப்பது வழமையாகும். (ற-5)

# திராட்சை செய்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை ஆரம்பம்

## யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் முன்னெடுப்பு

அச்சுவேலி, ஜூலை 21

பாதிப்படைந்துள்ள திராட்சை உற்பத்தியை மீண்டும் மேல்நிலைப்படுத்துவதற்தற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களம். திராட்சைப் பழப்பயிர்ச்செய்கை தொடர்பான துறைசார் நிபுணர்களின் வழிகாட்டல் ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தனித்துவத்தோடு மேற்கொள்ளப்பட்டுவந்த திராட்சைப் பழப்பயிர்ச் செய்கை அண்மையில் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது. இந்த வருடம் திராட்சைப்பழ அறுவடை பத்து வீதத்துக்கு குறைந்திருந்திருந்த நிலையில் விவசாயிகள் எதிர்பாராத பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

திராட்சைப் பழப்பயிர்ச் செய்கையை மீள் புனரமைப்புச் செய்வதற்கு முதற்கட்டமாக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான முழுநாள் செயற்பட்டறை விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்றது. மேற்படி செயற் பட்டறையில் விவசாயிகள் நடைமுறையில் விடும் தவறுகள் தொழில்நுட்ப குறைபாடுகள் மரபு ரீதியில் கைக்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பாகக் கண்டறியப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக துறைசார் தொழில் நுட்ப நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு திராட்சைப்பழப் பயிர்ச் செய்கை தொடர்பான களஆய்வு மேற்கொள்ளப்படுவதோடு தொழில்நுட்ப நிபுணர்களுக்கும்விவசாயிகளுக்கும் இடையே கருத்துப்பரிமாறல் மேற்கொள்ளப்பட்டு திருத்தமான செயல்முறை தொடர்பான பரிந்துரைகள், ஆலோசனைகள் வழங்கப்படவுள் ளன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம்:–

யாழ். மாவட்டத்துக்கு 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொண்டு வரப்பட்ட திராட்சைப் பழப்பயிர்ச் செய்கை தனித்துவத்தோடு விளங்கியது. இதில் தற்பொழுது பாதிப்பு ஏற்பட்டிருப்பது அவதானிக்கப் பட்டுள்ளது.


காலநிலை முரண்பாடும், வெப்பநிலை அதிகரிப்பும் ஒருவகையில் பாதிப்புக்கு காரணமாக இருந்த போதிலும் விவசாயிகள் நடைமுறையில் மேற்கொள்ளும் மாறுபட்ட நடைமுறைகளும் காரணமாக அமைந்துள்ளன.

குறிப்பாக வருடத்தில் இரண்டு தடவைக்கு பதிலாக மூன்று தடவைகள் திராட்சைக் கொடி கத்தரிக்கப்படுவது, சேதனப்பசளை மற்றும் மாட்டெரு ஆண்டுதோறும் வெட்டிப்புதைப்பதை கைவிட்டு இரசாயன உரப்பசளையைப் பயன்படுத்துவது விவசாயத்திணைக்களம் பயன்படுத்துமாறு பரிந்துரைத்த கிருமி நாசினிகளை குறித்த அளவுப் பிரமாணத்தின்படி பயன்படுத்தாமல் தாங்கள் நினைத்தபடி கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதோடு அளவுப்பிரமாணத்தையும் மடங்குக் கணக்கில் அதிகரித்த அளவில் பயன்படுத்துவது போன்றவற்றாலும் அறுவடை குறைந்திருந்தது.

குறித்த துறைசார் நிபுணர்களின் வழிகாட்டலோடு மீண்டும் திராட்சைப் பழப்பயிர்ச் செய்கையின் தனித்துவம் பேணப்படும்.– என்றார்.

(ற–11)

## வீட்டுத் திட்டத்தில் பாகுபாடு வவு. மக்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள மக்கள் தாம் வீட்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்படுவதாக தெரிவித்து நேற்று காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

புளியங்குளம் தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள குட்டி பிள்ளையார் குடியிருப்பு, கல்மடு குடியிருப்பு, இராமர் புளியங் குளம், புளியங்குளம், பழையவாடி ஆகிய குடியிருப்புக்களைச் சேர்ந்த சுமார் 60ற்கு மேற்பட்ட மக்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

புளியங்குளம் சந்தியில் ஏ9 வீதிக்கு அருகாமையில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் 'எமக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் ஏன் வழங்கப்படவில்லை?' 'அடிப்படை வசதியில் வீடும் வேண்டும் அதில் நாம் வாழவேண்டும்', 'வவுனியா வடக்கில் புளியங்குளம் தெற்கு புறக்கணிக்கப்பட்டது ஏன்?', 'நாமும் இந்நாட்டு பிரஜைகளே எமக்கு வீடுகள் வேண்டும்' என்ற வாசகங் கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அதேவேளை அமைதியான முறையில் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் மனு ஒன்றைக் கையளித்ததுடன் தமக்கு வீடுகளை வழங்குவதற்கு ஏதுவான செயற்பாட்டை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்தனர். ஏற்பாடுகள் திருப்தியளிக் காத பட்சத்தில் தமது ஆர்ப்பாட்டம் வேறு விதமாக அமையும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.(ற–21)

## ரயிலில் மோதி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி நேற்று ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இரவு 9.45 மணியளவில் புளியங்குளம் ரயில் நிலையத்துக்கு அண்மையில் நடந்துள்ளது.

குறித்த நபர் ரயில் கடவையை கடக்க முற்பட்ட போது ரயிலில் மோதுண்டதாக தெரிவிக்கப் படுகின்றது. குறித்த நபர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியிருந்த நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் உடல் அதே ரயிலில் கொண்டு செல்லப்பட்டு புளியங் குளம் ரயில் நிலையத்தில் உள்ள பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தால் கொழும்பு நோக்கி பயணித்த ரயில் 30நிமிட தாமதத்தின் பின்னர் கொழும்பை நோக்கி புறப்பட்டுள்ளது. (ற–101)

## அரச சாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 20

அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் உடைமையில் வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றால் கடந்த புதன்கிழமை 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

(ற–9)

## வளலாய் கடற்கரையில் அந்தியேட்டி மண்டபம்

### நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

அச்சுவேலி, ஜூலை 20

வளலாய் கடற்கரையில் அந்தியேட்டி மற்றும் பிதிர்க்கடன் செய்வதற்கான மண்டபமும், பொது மக்கள் நீராடுவதற்கான ஆடு துறையும் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட உள் ளன. அந்த வேலைத்திட்டத்துக்கான அடிக்கல்லை வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் கடந்த 16ஆம் திகதி நட்டு வைத்திருந்த நிலையில் நிர்மாணப் பணிகள் தற்போது ஆரம்பித்துள்ளன.

வளலாய் வடக்கு சித்திரவேலாயுதர் கோயிலுக்கு அருகிலேயே அந்தியேட்டி மண்டபம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அத்துடன் கடற்கரை யில் நீராடுவதற்கு வசதியாக முதிரைக்கற்கள் அகற்றப்பட்டு கடலின் அலைத்தாக்கம் இல்லாத வகையில் அணை அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அழகான கடற்கரையாகவும் சுகஸ்தலமாகவும் விளங்கியது அச்சுவேலி வளலாய் கடற்கரை. அங்கு புகழ்பெற்ற பாம்பீச் ஹோட்டல் மற்றும் பெரும் தனவந்தர்களின் சுகஸ்தலங்கள் மற்றும் ஆயர் இல்லம் என்பன கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் அமைந்திருந்தன. உள்நாட்டு வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக விளங்கியது. இந்த அம்சங்கள் யாவும் கடந்தகால இராணுவ நடவடிக்கையால் முற்றாக அழிக்கப்பட்டு எந்தவிதமான கட்டுமானங்களும் இல்லாத பகுதியாக தற்பொழுது காணப்படுகின்றது.

வளலாய்க் கடற்கரையில் அமைக்கப்படவுள்ள அந்தியேட்டி மற்றும் பிதிர்க்கடன் நிறைவு செய்யும் மண்டபமும் பொதுமக்கள் நீராடுவதற்கான நீராடுதுறைக்கும் பல லட்சம் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான உதவிகள் உள்ளூர் பிரமுகர்களிடமும் புலம்பெயர் உறவுகளிடமும் கோரப்படவுள்ளன.

தற்பொழுது வேலைத்திட்டங்களுக்கான நிதியாக கிராம அலுவலர் பிரிவுக்கு ஒரு மில் லியன் என வளலாய் கிராம அலுவலர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படுகின்றது.

வளலாய் பிதிர்க்கடன் நிறைவு செய்யும் மண்டபமும் ஆடுதுறையும் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும்போது வலி.கிழக்கு மற்றும் வடமராட்சி மக்களுக்கு வசதியாக அமையும். இதற்கு அண்மையில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் இருப்பதும் சிறப்பாகும். (ற–11)

## பதிவும் பகிர்வும் நூல் வெளியீட்டு விழா



வலி.வடக்கு, ஜூலை 21

இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதனின் பதிவும் பகிர்வும் என்னும் நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் கலாநிதி ஆறு திருமுகன் தலைமையில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார்.

நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் வி.பி சிவநாதனும், ஆய்வுரைகளை அருட்தந்தை ரூபன் மரியாம் பிள்ளை, யாழ்ப்பாணம் பல்கலைக் கழக பேராசிரியர் யோகராசா ஆகியோர் நிகழ்த்தினார்.

நூலை நூலாசிரியாரின் தாயார் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் வெளியிட்டு வைத்தனர். ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்த்தினார். (ற–86)

## சம்பள ஏற்ற விண்ணப்பம் கோரல்

வலிகாமம் கல்வி வலயத்தால் வருடாந்த சம்பள ஏற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பதவி உயர்வை துரிதப்படுத்தும் பொருட்டு வலிகாமம் கல்விவலய பணிப்பாளரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையான சம்பள ஏற்றத்துக்கு உரிய ஆசிரியர்கள் இதுவரை சம்பள ஏற்ற விண்ணப்பப் படிவத்தை சமர்பிக்காதவிடத்து அவற்றை விரைவாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சம்பள ஏற்ற விண்ணப்பங்கள் சமர்பிப்பதில் காலதாமதம் ஏற்படின் பதவி உயர்வு நடவடிக்கைகளும் தாமதமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மக்களின் ஆணையை நாம் நிறைவேற்றினோம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு


கொழும்பு, ஜூலை 21
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்ற முடியாமல் போன பல வேலைத்திட்டங்களை ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு நிறைவேற்றியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹாலிஎல பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அநுராதபுரத்தில் கூட்டமொன்றை நடத்தி மஹிந்தராஜபக்ஷவைமேடையில் ஏற்றி புதிய தேர்தல் அறைகூவலை விடுத்துள்ளனர்.

நாட்டுக்கு உயிர்கொடுப்போம் என்ற தொனிப்பொருளில் தேர்தல் பரப்புரை முன்னெடுக்கப்படுகிறது. கடந்த 10 வருடங்களாக மஹிந்த ராஜபக்ஷ தனது குடும்பத்துக்கு உயிர்கொடுத்தார். நாட்டுமக்கள் மீது தாக்குதல் மேல் தாக்குதல் நடத்தினார். பின்னர் 3 வது முறையாகவும் ஜனாதிபதியாகும் ஆசையுடன் களமிறங்கினார்.



ஆனால் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து சிறப்பான தேர்தல் பணிகளை மேற்கொண்டு மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி 100 நாள் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம். அதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவை மக்களின் உதவியுடன் வீட்டிற்கு அனுப்பி வைத்தோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்ற முடியாமல் போன பல வேலைத்திட்டங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு நிறைவேற்றியுள்ளது.– என்றார். (ற)

# புதிதாக ஆரம்பிக்க புதியவரே வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 21
ராஜபக்ஷவினர் மாறவில்லை எனவும் புதிதாக ஆரம்பிக்க வேண்டியவர் புதியவராக இருக்க வேண்டும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மஹிந்த ராஜபக் ஷ புதிய கோஷம் ஒன்றை முன்வைத்துள்ளார். நாட்டுக்கு உயிரூட்ட புதிதாக ஆரம்பியுங்கள் என்ற கோஷத்தை அவர் முன்வைத்துள்ளார். புதிதாக ஆரம்பிக்க புதியவர் ஒருவர் வேண்டும். எனினும் எந்த விடயமும் புதிதாக வில்லை. மஹிந்த, பஷில், நாமல் இந்த ராஜபக்ஷவினரில் எவரும் மாறவில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்தன, பிரேமதாசவுக்கு தலைமைத்துவத்தைக் கொடுத்தார். அவர் பிரதமர் பதவியையோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவி யையோ கோரவில்லை. சந்திரிகா குமாரதுங்கவும் அப்படித்தான். பின்னால் வந்து பிரதமர் பதவியைத் தருமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குமாறும் கோரவில்லை.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக,அரசின் தலைவராக, அமைச்சரவையின் தலைவராக, முப் படைத் தளபதியாக பதவிகளை வகித்து விட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக முயற்சித்து வருகிறார்.இது தெளிவான அதிகாரப் பேராசை என்றே கூற வேண்டும். – என்றார். (ற)

# மக்களின் காவலன் தேசிய காங்.

## – அதாவுல்லா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21
தேசிய காங்கிரஸ் மக்களின் காவலனாகவே எப்போதும் செயற்படும் என கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல். எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

நோன்புப் பெருநாள் தொழுகையின் பின் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாம் யாருடைய கொள்கையிலும் செயற்படவில்லை. எமக்கு என்று ஒரு கட்சி இருக்கிறது. அதற்கு என்று கொள்கையும் உள்ளது. அதன் வழியில் தான் செயற்படுகின்றோமேயன்றி வேறு எந்த நபர்களின் கொள்கையில் செயற்பட வில்லை.

மக்களுக்காகவே எமது கட்சியேயன்றி கட்சிக்காக மக்கள் இல்லை. தேசிய காங்கிரஸ் என்றும் மக்களின் உணர்வுகளை மதித்து மக்களுக்காகவே செயற்படும். தேசிய காங்கிரஸ் மக்களின் காவலனாகவே எப்போதும் செயற்படும் – என்றும் அவர் தெரிவித்தார். (ற–10)

# வேலை வாய்ப்புக்களை வழங்கும் பொறிமுறை எம்மிடமே உள்ளது

## ஐ.ம.சு.மு. வேட்பாளர் வசந்தகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
வடக்கு மண்ணில் கடந்த மூன்று தசாப்த காலமாக இளைஞர்களின் அபிவிருத்தியிலும் வேலை வாய்ப்பிலும் எவரும் அக்கறை செலுத்தாத நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. பல இளைஞர்கள் செய்வதறியாது வீட்டுக்குள் முடங்கியுள்ளனர். வேலை செய்யும் ஆற்றலும்விருப்பமும் இருந்தும் இளைஞர் திறன் அபிவிருத்தி எய்தப்படாத நிலை குறித்து உடன் முடிவு செய்திட வேண்டும். – இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மானிப்பாய்த் தொகுதியில் இருந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அதிபர் இரா.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வடக்குப் பிரதேசத்தில் ஒழுங்கமைக்கப்பட் டுள்ள கைத்தொழில் துறைகளோ, உட்கட்டுமான அபிவிருத்திகளோ இல்லாத சூழலே அவதானிக்கப்படுகிறது. எமது மண்ணில் செயற்றிறன் படைத்த இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி வீதிகளில் அலைந்து திரிகின்றனர். பெருமளவிலான மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர்.

இங்கு மீதமாக இருக்கும் மூளை வளம் படைத்த இளைஞர்களையும், மூளைசாலிகளையும் நாம் முழுமையாக பயன்படுத்த வேண்டும். அதற்கான பொறிமுறைகளை எம்மால் மட்டுமே வகுக்க முடியும். கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன் பல முன்னோக்கு அபிவிருத்தி திட்டங்களை முன்னிறுத்திச் செயற்படுத்தியது.

இதேபோன்று எதிர்காலத்திலும் பல அபிவிருத்திகளை, நல வாழ்வு திட்டங்களை பயனுள்ள வகையில் மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

இதனைவிட வடக்கு மாகாணத்தில் மாணவர் முதல் அதிபர் வரையும், கோட்டம் முதல் மாகாண பணிப்பாளர் வரை முன்னெடுக்க வேண்டிய பல திட்டங்கள், உட்கட்டுமானங்கள், சேவைகள் என பல வரையறையற்ற தேவைகள் உண்டு.

இவற்றைப் உறுதியாக முன்னெடுக்க வெற்றியின் சின்னம், வெற்றிலைச்சின்னம் என்று கருதி எமக்கு வடக்கு மக்கள் ஒன்றிணைந்து வாக்களிக்க வேண்டும். – என்றார்.

# மக்களின் வெற்றியே எங்களுக்கு முக்கியம்

## தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் யதீந்திரா தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 21
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தலில் நான் போட்டியிட்டு வெல்வதல்ல முக்கியம், நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் வெற்றியே முக்கியமாகும். – இவ்வாறு திருகோணமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் ஆ.யதீந்திரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டமொன்று திருகோணமலையிலுள்ள சில்வெஸ்டர் உல்லாச விடுதியில் இடம்பெற்றது. அதில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருகோணமலையில் 44 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தபோதிலும் கூட, தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட 8 ஆயி ரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அந்த வாக்குகளும் சேர்ந்திருந்தால் நாங்கள் கிழக்கு மாகாண சபையில் இதை விடப் பலமாக இருந்திருக்க முடியும். பொதுவாக கட்சியின் சின்னத்துக்கு வாக்களித்து விட்டு விருப்பு வாக்குளை மக்கள் தேடுகின்ற போது தான் அவர்கள் தவறாக வாக்களிக்க நேர்கிறது. இது அதிகம் பின்தங்கிய கிராமங் களில்தான் நிகழ்கின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் வீட்டு சின்னத்திற்கு வாக்களித்துவிட்டு, ஐயா சம்பந்தனின் விருப்பு வாக்குக்கு மட்டும் புள்ளடி போடுமாறு மக்களை நாங்கள் கோர முடியும்.

இதன் காரணமாக சின்னம், ஒரு விருப்பு இலக்கம் என்னும் அடிப்படையில் வாக்குகளை மக்கள் அளிக்க முடியும். இதனால் வாக்குகள் வீணாவதை நாங்கள் தடுக்க முடியும்.

இதற்கு அனைத்து வேட்பாளர் களும் இணங்கும் பட்சத்தில் ஒரு பிரச்சினையும் இருக்கப் போவதில்லை. என்னைப் பொறுத்த வரையில் நான் வெல்வதல்ல முக்கியம். நாங்கள் பிரதிநித்துவப்படுத்துகின்ற மக்கள் வெல்ல வேண்டும் என்று மட்டுமே நான் சிந்திக்கின்றேன். – என்று தெரி வித்தார்.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வேலைப்பளுவால் சிரமம் ஏற்பட்டாலும் ஆதாயம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் அக்கறையுடன் படிப்பில் ஈடுபடுவர்.

**இடபம்:** நல்லவர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை சுமாராகவே இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும்.

**மிதுனம்:** செயல்களில் நேர்மைக் குணம் நிறைந்திருக்கும். சமூகத்தில் செல்வாக்கு பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள்.

**கடகம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். உறவினர்களின் ஆதரவு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**சிங்கம்:** முயற்சிக்கேற்ப முன்னேற்றமான பயன் கிடைக் கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறை வேறும். இயன்ற அளவில் பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவிபெற வாய்ப்புண்டு.

**கன்னி:** மறைமுக எதிரிகளை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். புதிய முயற்சியில் ஈடுபட்டு, வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை ஏற்படும்.

**துலாம்:** உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை அளிக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் நற்செயலை பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், அமோக வளர்ச்சி ஏற்படும். சுப விடயத்தில், நல்ல முடிவை எட்டுவீர்கள். மனைவி வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** குழப்பம் நீங்கி, மனத்தெளிவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில், மிதமான வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மகரம்:** பெற்றோரின் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். செலவு கூடும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் குறித்த பேச்சு நடக்கும்.

**கும்பம்:** பொதுநலப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு உயரும். அழகு சாதனப் பொருள் மீது நாட்டம் ஏற்படும். பணிவிடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**மீனம்:** மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ற ஆதாயம் வரும். பெண்கள் புத்தாடை அணிகலன் வாங்க யோகம் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவு உண்டாகும்.



# டூப்பிளிகேட் கிம்

சர்வாதிகாரியொருவர் போன்று தாம் தோன்றுவதை எவரும் வழமையில் விரும்புவது கிடையாது.

ஆனால் சீனாவைச் சேர்ந்த நபர் ஒருவர் பெருமளவு பணத்தைச் செலவு செய்து, பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேற்கொண்டு தனது தோற்றத்தை சர்வாதிகாரியொருவராக விமர்சிக்கப்படும் வட கொரியத் தலைவர் கிம் யொங் –உன் போன்று மாற்றியுள்ளார்.

ஜியாங்ஸூ மாகாணத்தின் தலைநகர் நன்ஜிங் கைச் சேர்ந்த வாங் லெயி (வயது–32) என்பவரே இவ்வாறு அறுவைச் சிகிச்சை மூலம் தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டுள்ளார்.



# பழைய டைனோசரின் பற்கள்

ஜப்பானின் நாகசாகி நகரப் பகுதியில் இருந்து அண்மையில் அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் டைரானோ சாரடே என்ற குடும்பத்தைச் சேர்ந்த டைனோசர் ஒன்றின் 2 பற்களைக் கண்டெடுத்தனர். இதன் பெறுமதி ரூபா 8 கோடியே 10 லட்சம் ஆகும். இவை கி.மு. ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த டைனோசர் குடும்பம் என்பதும் இதுபோன்ற டைனோ சரின் படிமங்கள் முதல் முறையாக ஜப்பானில் கிடைத்து இருப்பதும் குறிப் பிடத்தக்கது.

இந்த வகை டைனோசர்கள் அசைவ பிராணிகள் ஆகும். இதில் ஒரு பல் நல்ல நிலையிலும் இன்னொரு பல் சிதைந்த நிலையிலும் கிடைத்தது. நல்ல பல் 8.2 சென்ரி மீற்றர் நீளமும், 2.7 செ.மீ. அகலமும் கொண்டதாக இருந்தது. கண்டெடுக்கப்பட்ட இந்த டைனோசரின் நீளம் அதன் பற் களின் நீள மற்றும் அகலத்தை அடிப்படையாகக் கொண்டு 10 மீற்றர் வரை இருந்திருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...



ஒருவன் உங்கள் மீது கல்லைக் கொண்டு எறிந்தால்
பொறுமை மக்களே... பொறுமை ...
பொறுமையோடு
நீங்கள் அவன் மீது பூவைக் கொண்டு எறியுங்கள் ...!
மறுபடியும் கல்லைக் கொண்டு எறிந்தால்
பூந் தொட்டியோடு எறியுங்கள் ..!!
கொய்யால...அவன் மண்டை உடையட்டும்...!!!



# ரஜினியின் படத்தின் நாயகியாக ராதிகா ஆப்தே

ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடிக்கவிருக்கும் படத்தின் நாயகியாக நடிக்க ராதிகா ஆப்தேவிடம் பேச்சு நடத்தி வருகிறார். ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடிக்கவிருக்கும் பணிகள் படுமும்முரமாக நடைபெற்று வருகின்றன. சந்தோஷ் நாராயணன் இசை, முரளி ஒளிப்பதிவு, பிரவீன் எடிட்டிங் ஆகியோர் இந்தப் படத்தில் பணியாற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். படத்தின் நாயகி யார் என்பது தான் பலரது எதிர்பார்ப்பாக இருக்கிறது. முன்னணி நாயகிகள் யாராவது தான் நடிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ராதிகா ஆப்தேவிடம் நாயகியாக நடிக்க பேச்சு நடத்தி இருக்கிறார் இயக்குநர் ரஞ்சித். விரைவில் நாயகியாக ஒப்பந்தம் செய்யப்படுவார் என்கிறது படக்குழு. ஏற்கனவே பிரகாஷ்ராஜ், கலையரசன் உள்ளிட்ட பலர் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஓகஸ்ட் மாதம் மலேசியாவில் படப்பிடிப்பு தொடங்குகின்றது.

# கூட்டுறவுச் சங்கங்களில் கடனட்டைத் திட்டம் தேவை

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் அரச ஊழியர்களுக்கென விசேட கடனட்டைத்திட்டத்தை நடை முறைப் படுத்தி அதன் ஊடாக பொருள் களை விநியோகிக்க முடியும். இந்த விநியோகத்துக்கு கூட்டுறவு அபி விருத்தித் திணைக்களத்தின் அனும தியை பெறத்தேவையில்லையாயி னும், சங்கம் பொதுச் சபையில் அனுமதியைப் பெற்று இந்தத் திட் டத்தை நடைமுறைப்படுத்தலாம். – இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறு கையில்;


கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இந்தத் திட்டத்தை மிகவும் சிறப்பான முறையில் நடைமுறைப் படுத்தி வருகின்றது. அரச ஊழி யர்கள் கடனட்டைக்குப் பொருள் களை கொள்வனவு செய்து தமது மாதாந்தச் சம்பளத்தில் அதற் கான பணத்தைச் செலுத்தி வருகின்றனர்.

அதனைவிட சங்க கிராமிய வங்கி க்ளில் வைப்புச் செய்த வாடிக்கை யாளர்களுக்கும் தமது கிராமிய வங்கியில் உள்ள வைப்பு பணத்தை உறுதி செய்து அவர்களுக்குக் கடனட்டை மூலம் உணவுப் பொருள்களை விநியோகிக்க முடியும்.

சங்கங்கள் தமது கிளை நிலை யங்களில் வியாபார நடவடிக்கை க்ளை எந்த வழியில் அதிகரிக்க முடியுமோ அதற்கான புதிய வழி முறைகளைத் தாமே கண்டுபிடிக்க வேண்டும்.

முன்னர் ஒரு காலத்தில் நுகர் வோரே சங்கக் கிளை நிலையங் களை நாடி வந்தனர்.

தற்போது அந்த நிலைமை குறைந்து செல்கின்றது. எதிர்வரும் காலத்தில் நாம் நுகர்வோரைத் தேடிச்சென்றே பொருள்களை விநியோகிக்க வேண் டிய காலம் வந்து விட்டது. – என்றார். (ற–17)



எந்த நாட்டில் இருந்தாலும் சொந்த நாட்டில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பத்துக்கு உதவ வேண்டுமென்ற மனப்பாங்கு கொண்ட மூதாட்டியொருவர் தமது 75 ஆவது பிறந்த தினத்தில் கைதடி மேற்கில் உள்ள ஏழைக் குடும்பமொன்றுக்குத் தனது சொந்தச் செலவில் ( 6 லட்சம் ரூபா ) நிரந்தர வீடமைத்து வழங்கியுள்ளார். பிரான்ஸ் நாட்டில் வதியும் திருமதி சின்னட்டி சிவசோதி என்ற அந்த மூதாட்டி அங்கு தனக்குக் கிடைக்கும் உதவு நிதியிலிருந்து ஒரு சிறு தொகையை அனுப்பி தனது மகன் ஊடாக குறித்த குடும்பத்துக்கு வீடமைத்து கடந்த 12 ஆம் திகதி தனது 75 ஆவது பிறந்த தினத்தன்று தனது பிள்ளைகள் மூலம் அந்தக் குடும்பத்திடம்கையளிக்கச்செய்துள்ளார். (ற–9)

# ஆளுமை மிக்கவரை பிரதிநிதியாக்குங்கள்


## எம்.எல்.ஏ.அமீர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 21

ஆளுமைமிக்க, சிறந்த நல்லொழுக்கம் மிக்க வர்களை சம்மாந்துறையின் மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.ஏ.அமீர் தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினரின் மக்கள் பணி மனையில் நடைபெற்ற முக்கிய மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:–



கடந்த ஒரு தசாப்த காலமாக சம்மாந்துறையின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளமை நாம் அறிந்த விடயமாகும்.

இதனால் நாம் எமது பிரதேசத்தின் பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், தொழில் வாய்ப்புக்கள் எனப் பலவற்றை இழந்து நிற்கின்றோம். இதனைக் கருத்தில் கொண்டு இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடாது விட்டுக்கொடுப் புக்களை செய்துள்ளேன்.

இது எமது ஊரினுடைய எதிர்காலம் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட தூரநோக்கு அடிப்படையிலான முடிவாகும். இந்த முடிவானது எனக்கு ஓர் ஆத்ம திருப்தியைத் தருகின்றது என்பதுடன் சம்மாந்துறை மக்களும் எமது எதிர்காலம் தொடர்பாக கூர்மையாக சிந்தித்து தொடர்ச்சியான தவறுகளையும் காட்டிக் கொடுப் புக்களையும் கைவிட்டு விட்டு எமது மண்ணுக்குரிய மரியாதையை பாதுகாக்க வேண்டும்.

எமது ஊரில் முக்கியமாக இரண்டு வேட் பாளர்கள் இரு வேறு கட்சிகளில் பொதுத் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இவர்களில் யாரைத் தெரிவுசெய்வது என்பதில் மிகவும் தெளிவான முறையில் நீங்கள் சிந்திக்க வேண்டும். எமது மண்ணின் மரியாதையை பாதுகாக்கக் கூடிய வகையிலும் சம்மாந்துறையின் மக்கள் பிரதிநிதி என்றால் ஏனையோரால் மதிக் கத்தக்கவராக, இறை சிந்தனையுடையவராக, ஊரின் எதிர்காலம் பற்றி சிந்திக்கக் கூடியவராக ஒரு சரியான தலைவரை இனங் கண்டு வாக்களிக்க வேண்டும்.

மீண்டும் மீண்டும் தவறிழைத்து ஒரு வர லாற்றுத் தவறுக்கு சொந்தக்காரர் ஆகிவிடாத வகையில் மக்களின் தெரிவு அமைய வேண் டும்என்றார். (ற–10)

# ஐந்து லட்சம் பனை விதைகள் நடுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 21


யாழ்.குடாநாட்டில் பனை அபிவிருத்தி சபை இந்தமுறை ஐந்து லட்சம் பனை விதைகளை நடுகை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. பிரதேச செயலகங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஊடாக இந்த பனம் விதைகளை நடுகை செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான பிரதேச செயலகங்கள் தமது பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பனம் விதைகளை நடுகை செய்வதற்குத் தேவையான பனம் விதைகளைத் தந்து உதவுமாறும் சபையிடம் கேட்டுள்ளன. யாழ்.குடாநாடு முழுவதும் இந்த முறை கூட்டுறவாளர் பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபை மேற்கொள் வதற்கும் தீர்மானித்துள்ளது. கடந்த வருடத்தில் குடாநாட்டில் மட்டும் 89ஆயிரத்து 480 பனம் விதைகளும், ஆயிரம் பனம் நாற்றுக்களுமே நடுகை செய்யப்பட்டன. இந்தப் பனம் விதைகள், நாற்றுக்கள் உரிய பாதுகாப்புடன் நடுகை செய்யப்படாததனால் பாதிக் கப்பட் டுள்ளன. இருந்தபோதிலும் இதில் நாற்பது வீதமானவை ஓரளவு நல்ல நிலையில் உள்ளன. இதனை அடுத்து இந்தமுறை, செப்ரெம்பர், நவம்பர் மாதங்களில் சுமார் ஐந்து லட்சம் பனம் விதைகளை நடுகை செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற–17)


## மரண அறிவித்தல்

### கலாநிதி அருமைத்துரை சிவபாலன்

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்- தாவரவியல் பிரிவு- யாழ் பல்கலைக் கழகம்)



சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.சிவபாலன் 18.07.2015 சனிக்கிழமை ஆஸ்திரே லியாவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருமைத்துரை- மனோன்மணி தம்பதிக ளின் கனிஷ்ட புத்திரனும் இரத்தினசிங்கம் - சகுந்தாலாதேவி தம்பதிகளின் மருமகனும் சாந்தகுமாரியின் (ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும் ஜெயந்தன் (ஆஸ்திரேலியா), சாளினி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அல்கா(ஆஸ்திரேலியா), செந்தில்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனா ரும் ராஜ், மாயா, ஈசா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, லீலாவதி மற்றும் செல்வராஜா, கனகசிங்கம், ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற Dr இராசையா மற்றும் சத்தியமூர்த்தி, கமலாம்பிகை, புஸ்பவதி, காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோ ரின் மைத்துனருமாவார்

அமரரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் 9 Walter Street, Bulleen Victoria 3105 விலாசத்திலுள்ள அவரின் இல்லத்தில் இன்று (21.07.2015 ) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. சாந்தகுமாரி
006 138 528 8381
சி. ஜெயந்தன்
006 140 487 6406

செ.ஞானராஜா- மருமகன் 021 225 5137
இ. ஜனார்த்தனன்- மருமகன் 021 225 5246
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.


# நூறு நாள் வேலைத் திட்டத்தில் 1,200 கூட்டுறவாளர் இணைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் நூறு நாள்கள் வேலைத் திட்டத் தின்போது இதுவரைக்கும் ஆயிரத்து இருநூறு வரையிலான அங் கத்தவர்கள் கூட்டுறவுச் சங்கங் களில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்களில் மக்களின் விழிப்பு ணர்வை மேலும் அதிகரிக்கும் நோக்கில் அங்கத்த வர்களைப் புதிதாக இணைக்கும் பணிகள் தொடர்ந் தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ் தெரி வித் தார்.

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் இந்த நூறு நாள் வேலைத்திட் டத்தில் அதிகமான சங்கங்கள் புதிதாக அங்கத் தவர்களை இணைக் கும் பணியில் மும்முரமாக ஈடு பட்டும் வருகின் றன.

குறிப்பாக இளம் வயதினர் சங்கங்களில் அங்கத்தவராக இணையும் பட்சத்தில் அந்தச் சங்கங்களின் கிராமிய வங்கி ஊடாக அவர்க ளுக்கான சுயதொழில் ஊக்குவிப்புகளுக்கான இலகு கடன் திட்டமும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.


குறைந்த வட்டியில் வழங்கப்படும் இந்த கடன் திட்டத்தில் அவர்கள் இணைந்து அதன்மூலம் பயன் பெற்றுக்கொள்ள முடியும்.


ஆகவே இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தில் இளம் தலைமுறையினர் கூட்டுறவு அமைப்பில் ஓர் அங்கத்த வராக இணைந்து கொள்ளும் சந் தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ற–17)

# சட்டவிரோத மணல் அகழ்வு அரியாலையில் தொடர்கிறது

## மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 21
அரியாலை கிழக்கு பிரதேசத்தில் சட்டவிரோத, மணல் அகழ்வு தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது என்று பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
இரவு நேரங்களில் உழவு இயந்திரங்கள் மற்றும் லாண்மாஸ்ரர்களைப் பயன்படுத்தி சிலர் இந்தப்பகுதிகளில் சட்டவிரோதமாக மணலை அகழ்ந்து செல்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
அதேவேளை இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு பொலிஸார் பகல் வேளைகளில் கூடுதலாக ரோந்துப் பணிகளில் ஈட்பட்டும் வருகின்றனர். கடந்த சனிக்கிழமையும் இந்தப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து கொண்டு சென்ற நபரொருவரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.
ஆயினும் அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்த வண்ணம் உள்ளது என்று மக்கள் கூறுகின்றனர். இந்த மணல் அகழ்வால் தாழ்ந்த இடங்களில் மழை காலங்களில் வெள்ளம் ஏற்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.(ற–17)

பாராளுமன்றத் தேர்தல் 2015
வன்னி தேர்தல் தொகுதி

ஈழமக்களின் இயல்பான வாழ்விற்காய்...
திரு. இ.சாள்ஸ் நிர்மலநாதன்
தொழிலதிபர்
பிரஜைகள் குழு உபதலைவர்
இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசிய கூட்டமைப்பு)
3
வன்னி தேர்தல் தொகுதி மக்கள்

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்
அர்ப்பணிப்பு! அனுபவம்!! பண்பு!!!
7

எங்களில் ஒருவரான
திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
அவர்களை ஆதரிப்போம்.
(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம்
அவர்களின் புதல்வன்)
- வடமராட்சி மக்கள்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# ஜனநாயக ரீதியாக வலுப்பெற தமிழர் அணி திரள வேண்டும்

## தமிழரசுக் கட்சியின் திகாமடுல்ல வேட்பாளர் கோ.அன்னம்மா தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 21
தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் முக்கியமான மைல்கல்லாகத் திகழும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் எமது மக்கள் ஜனநாயக ரீதியான பலத்தை வலுப்படுத்துவதற்கு அணி திரள வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்றே இதற்கான எமது தளமாகும். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்டப் பொதுத் தேர்தல் வேட்பாளர் அன்னம்மா கோவிந்தபிள்ளை கூறினார்.
சேனைக்குடியிருப்பிலுள்ள தமது இல்லத்தில் நடைபெற்ற ஆதரவாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தமது வேட்பாளர் பிரவேசம் தொடர்பாக விளக்கிக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
தந்தை செல்வாவின் காலம் முதல் தமிழரசுக் கட்சியின்பால், அதன் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு இன்றுவரை அந்தக் கட்சியுடன் நிலைத்து நின்று வருகின்றேன்.
குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கு எதிரான போராட்டங்களில் மட்டுமன்றி, தமிழரசுக் கட்சியின் பல்வேறு போராட்டங்களிலும் முன்னின்று பங்குகொண்டு வருபவள் நான்.
கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த வேண்டுமென்ற எமது மக்களின் நீண்டகால அவாவை நிறைவேற்றக் கோரி அன்று நடைபெற்ற ஏழுநாள் உண்ணா விரதப் போராட்டத்தை முன்னின்று நடத்துவதில் நானும் எமது மகளிரும் ஆற்றிய பங்களிப்பை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது.

**அம்பாறையில்**

அம்பாறை மாவட்டத்திலுள்ள தொகுதிகளில் தமிழ்ப் பிரதேசங்களை எடுத்து நோக்கினால் பல்வேறு வகையிலும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளன. போர்ச் சூழ்நிலைகளின் போது இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் இன்னமும் பூரணமாக மீள்குடியேற்றப்படாத தமிழ்க் கிராமங்களும் இந்த மாவட்டத்திலுள்ளன.
அதேபோல் பாதுகாப்புக் கெடுபிடிகளால் சுவீகரிக்கப்பட்ட எமது மக்க ளின் காணிகளை மீட்டெடுக்கும் பணிகளெல்லாம் எம்முன்னால் உள்ளன.
இவற்றுக்கு எல்லாம் விடிவு கிடைக்க வேண்டுமானால் எதிர்வரும் காலகட்டத்தை நாம் முக்கியமாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

**தமிழின விடிவு**

அதேபோல் தமிழினப் போராட்டத்துக்கான விடிவு எட்டப்பட்டு நாம் சுய உரிமையுடன் இந்த நாட்டில் தலை நிமிர்ந்து வாழவேண்டும்.
இதற்காக இன்றைய தேர்தல் களத்தை மிக விழிப்புடன் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
அந்த வகையில் எமக்காக எமது தமிழினத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒருமித்த ஆதரவுடன் நாம் பலப்படுத்த வேண்டும்.
இதன் மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பொதுத் தேர்தலின் பின்னர் வலுவான பேரம் பேசும் சக்தியாகத் திகழுமென்பதும், அதன் மூலம் தமிழினத்திற்குப் பல விடிவுகள் கிடைக்க ஏதுவாக அமையுமென்பதும் நிச்சயமானதாகும்.

**முக்கிய காலகட்டம்**

எனவே தமிழர்களின் அரசியல் பயணத்தில் முக்கியமான காலகட்டம் இதுவென்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.
ஒரு கணிப்பின் படி, இலங்கையில் 1931 ஆம் ஆண்டு முதல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தாலும், தேர்தல் ஒன்றின் போது, அதிகமாக வாக்களிப்பவர்களாக ஆண்களே இருந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
எனவே எமது பெண்களும் அதிகம் வாக்களிப்பில் கலந்துகொள்ளும் அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணி திரண்டு, நாம் உரிமைபெற்ற சமூகமாக வாழ வழிவகுக்க வேண்டும்.
இதற்காக என்போன்றவர்களின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கவும் மக்கள் சந்தர்ப்பம் தர வேண்டும். – என்றார். (ற–30)




# தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் நடைபவனி

## நூற்றி நாற்பதாவது ஆண்டு நிறைவையொட்டி

வலி.வடக்கு, ஜூலை 21
தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றி நாற்பதாவது ஆண்டு நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபவனி ஒன்று இடம் பெற்றது.
பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் இந்த நடை பவனியில் கலந்து கொண்டார்கள். கோண்டாவில் மேற்கு, காங்கேசன் துறை வீதி, உப்புமடம் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து புறப்பட்ட இந்த நடைபவனி மானிப்பாய் வீதி வழியாகச் சென்று பாடசாலையைச் சென்றடைந்தது.
இப்பாடசாலையின் நூற்றி நாற்பதாவது ஆண்டு நிறைவு தினக் கொண்டாட்டம் அடுத்த மாதம் பாடசாலையில் மிகவும் விமரிசையாக நடத்தப்படவுள்ளது. (ற–86)

## சுவாமி விபுலானந்தரின் 68ஆவது நினைவுதினம்



மட்டக்களப்பு, ஜூலை 21

சுவாமி விபுலானந்தரின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் இவர் முன்னெடுத்த சமூகப் பணிகளை நினைவு கூரும் முகமாக வருடா வருடம் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மற்றும் சிவானந்தா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து இவரது நினைவு தினத்தை முன்னெடுக்கின்றனர்.

கல்லடியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விபுலானந்தரின் திருவுருவப் படம் சிவானந்தா தேசிய பாடசாலையிலிருந்து ஊர்வலமாக அவரது ஞாபகார்த்த மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டது. பின்னர் சுவாமி விபுலானந்தரின் சமாதிக்கு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி தலைமையில் 68ஆவது நினைவு தின நினைவஞ்சலிப் பூசை இடம் பெற்று பின்பு சுவாமி விபுலானந்தரின் திருவுருவப் படத்துக்கு பூசையும் இடம்பெற்றது. திருவுருவப் படம் தாங்கிய சிரார்த்த தின ஊர்வலம் மட்டு கல்முனை பிரதான வீதியூடாகச் சென்று சிவானந்தா தேசிய பாடசாலையை வந்தடைந்தது.

இந்த நிகழ்வில் மட்டு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஏ.செல்வராஜா மற்றும் தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகள், இலக்கியவாதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-10)

## தொழிலாளர் விடுதிகள் பூர்த்தியாகும் நிலையில்



தென்மராட்சி, ஜூலை 21

சாவகச்சேரி நகரசபையால் 40 லட்சம் ரூபா செலவில் சபை நிதியில் அமைக்கப்பட்ட 5 தொழிலாளர் விடுதிகளின் வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் காணப்படுகின்றன.

இவை விரைவில் சபையில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு சேவை மூப்பு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளன என்றும், கட்டம் கட்டமாக ஏனைய தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப் பகுதியில் கடந்த 1960 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் 20 தொழிலா ளர்களுக்கென நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்ட குடியிருப்புகள் ( விடுதிகள் ) 2000 ஆம் ஆண்டு இடம் பெற்ற வன்செயல்களின் போது முற்றாக அழிவுற்றன.

2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் 2002இல் மீளக்குடியமர்ந்த தொழிலாளர்கள் அந்தப் பகுதியில் தற்காலிக கொட்டில்கள் அமைத்து வசித்து வருவதாகவும் நகரசபைத் தலைவரின் முயற்சியால் சபை நிதியில் 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் அதற்கான அடிக்கல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனால் நடப்பட்டது. (ற-9)



## சலுகைகளை வழங்குமாறு கோரி தோட்டத் தொழிலாளர் போராட்டம்

கொழும்பு, ஜூலை 21

அக்கரப்பத்தனை பெல்மோரல் தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக 150 இற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சனிக்கிழமை மு.பகல் 10 மணி முதல் 12 மணிவரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்தம் வழங்கவேண்டிய கோதுமை மா, தேயிலைத் தூள், சம்பள முற்பணம் மற்றும் ஏனைய சலுகைகளையும் வழங்க முடியாது எனத் தோட்ட நிர்வாகம் கூறியது.

இந்நிலையில், இந்தச் சலுகைகளை உடனடியாக வழங்க வேண்டும் என தெரிவித்தே இத்தோட்ட மக்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோடு ஆயிரம் ருபா சம்பள உயர்வு கோரி தோட்டத் தொழிலாளர்கள் மெதுவாக பணி செய்யும் நடவடிக்கையில் ஈடுப்பட்டதனால் இவர்களுக்கு தோட்ட நிர்வாகம் இடையூறுகளைக் கொடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பெல்மோ ரல் பெரியநாகவத்தை, கிரன்லி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களே கலந்து கொண்டனர். (ற)

## சூடு பிடிக்கும் தேர்தல் நடவடிக்கைகள்

அம்பாறை, ஜூலை 21

அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. கடந்த நோன்புக் காலத்தில் மந்தகதியில் இடம்பெற்று வந்த தேர்தல் நடவடிக்கைகள் யாவும் பெருநாள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் கிராமங்களில் வேட்பாளர்கள் கிராமங்கள் தோறும் சென்று தமது ஆதரவாளர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அங்குள்ள 54 தமிழ் கிராமங்களுக்கும் சென்று தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர். வேட்பாளர்கள் பலரும் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதிலே அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்த வரை இம்முறை பொத்துவில் தொகுதியிலா? கல்முனைத் தொகுதியிலா? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவுசெய்யப்படவுள்ளார் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கிக் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-10)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 21

வட்டுக்கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 21

உரும்பிராய் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(ஐ)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 21

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திரு விழாக்கள் நடைபெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 21

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 2ஆம், 3ஆம் நாள்கள் வாகனத்திருவிழாவும், 4ஆம் நாள் கர்ப்பூரத் திருவிழாவும், 5 ஆம் நாள் பக்தோற்சவமும், 6ஆம் நாள் வசந்த உற்சவமும், 7ஆம் நாள் தைலாப்பியங்களும், சுமங் கலிப் பூஜையும், சப்பரத் திருவிழாவும், 8ஆம் நாள் வேட்டைத் திருவிழாவும் நடைபெற்று, 9ஆம் நாள் காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் 11ஆம் நாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ற-422)


**சைவ உணவகம் வாடகைக்கு**

சுன்னாகம் ரயில் நிலையம் முன்பாக (சுபி சைவ உணவகம் ) சகல தளபாட வசதிகளுடனும் நிலம் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட உணவக வியாபார அனுமதிப் பத்திரத்துடன் கூடிய கடை வாடகைக்கு உடன் விடப்படும். உணவகத்துக்குத்தேவையான சகல தளபாடங்களும் பாத்திரங்களும் உடன் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு : 076 704 3186 (6313) (3.5)

**தவறிவிட்டது**

திருவையாறு - இரத்தினபுரம் வீதியில் வெளிநாட்டு ஆவணங்களுடன் கூடிய "மணிப்பேர்ஸ்" தவறிவிட்டது.

அறிந்தவர்கள் பின்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 066 8394

077 112 2745

(57169)(3.9)

தெல்லிப்பழை - அளவெட்டி - கணேஸ்வரம்

**குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம்**

**மன்மத வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2015**

விழாக்கால நியமங்கள்

- **ஆடி மாதம் 05 ஆம் நாள் இன்று (21.07.2015) செவ்வாய்க்கிழமை**
  மாலை 5.00 மணிமுதல் மஹோற்சவபூர்வாங்கக் கிரியைகள்
- **ஆடி மாதம் 06 ஆம் நாள் நாளை (22.07.2015) புதன்கிழமை - கொடியேற்றம்**
  காலை 10.00 மணிவசந்தமண்டபபூஜை, முற்பகல் 11.00 மணி துவஜாரோஹணம் (கொடியேற்றம்)
- **ஆடி மாதம் 14 ஆம் நாள் (30.07.2015) வியாழக்கிழமை - தேர்த்திருவிழா**
  காலை 9.00 மணிவசந்தமண்டபபூஜை, முற்பகல் 10.30 மணி இரதாரோஹணம்
- **ஆடி மாதம் 15 ஆம் நாள் (31.07.2015) வெள்ளிக்கிழமை - தீர்த்தோற்சவம்**
  காலை 9.00 மணி - வசந்தமண்டபபூஜை, முற்பகல் 10.00 மணி - தீர்த்தவாரிதி
  மாலை 5.00 மணி - வசந்தமண்டபபூஜை, திருவூஞ்சல்
  இரவு 7.00 மணி கொடியிறக்கம், சண்டேஸ்வரர் உற்சவம், ஆசார்யோற்சவம்

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"

கணேஸ்வரம்,
அளவெட்டி.

விநாயகர் அருட்பணியில்
ஆலய நிர்வாக சபையினர்

# இரண்டாம் இடத்தைப் பெறும் மு.காங்கிரஸ்

## கிழக்கு முதலமைச்சர் நம்பிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 21

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 ஆயிரம் வாக்குகளைப் பெற்று தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்ததாக இரண்டாமிடத்தைக் கைப்பற்றும் என்று கட்சியின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாண முதலமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்கள் மத்தியிலான சந்திப்பில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திலும், வன்னி மாவட்டத்திலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச்சின்னத்தில் களமிறங்கியுள்ளது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் துடிப்பான வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளதால் இம்முறை 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று இரண்டாம் நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் வரும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அரசியல் முகவரி பெற்றவர்கள் இன்று அக்கட்சியைத் தோற்கடிக்கக் கனவு காண்கின்றனர். ஆனால் அது ஒருபோதும் நடைபெறாது என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஊர்களிலுள்ள வீதிகளில் ஈச்சை மரங்களை நாட்யதுதான் சேவை என்று நினைக்கிறார்கள். சேவை என்பது எது என்று தெரியாதவர்கள் எல்லாம், சேவைகளைச் செய்யாமல் என்னவெல்லாமோ சேவைகள் என்று செய்து கொண்டிருக்கிறார்கள். இன்று மக்கள் அபிவிருத்தியில் மிகமோசமாகப் பின்தள்ளப்பட்டு பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். எனவே இலங்கைத் திருநாட்டில் இன்று சமாதானம் மேலோங்கி சிறந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த வேளையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் பங்காளிக் கட்சியாக உருவெ டுத்து சிறுபான்மை மக்களின் அபிலாசைகளைச் சிறப்புற நிறைவேற்றிக்கொடுத்து சிறப்பான சேவை செய்து கொண்டு வருகிறது. அதற்காக அனைவரும் கைகொடுத்து உதவ முன்வாருங்கள்.- என்றார். (ற-10)

# புலம்பெயர் மக்களே கையெழுத்திடுங்கள்

## கோருகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

தமிழ் இனத்துக்கு நீதி கிடைக்கவும் அரசியல் தீர்வு கிடைக்கவும் வலியுறுத்தி 10 லட்சம் கையொப் பங்களை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிக்கின்ற முயற்சிக்கு ஆதரவு வழங்குமாறு உலகத் தமிழர்களையும் மனித உரிமை ஆர்வலர்களையும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கோரியுள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதென்று கூறப்படும் 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி தொடக்கம் ஈழத் தமிழ் இனம் தொடர்ந்து இன அழிப்புக்கு ஆளாகி வந்த வண்ணமுள்ளது.

ஈழத் தமிழினத்தின் மீதான படு கொலை கள் 1970 ஆம் ஆண்டில் இலங்கை அரசினாலும் அதன் ஆயுதப் படைகளாலும் நடத்தப்படத் தொடங்கியது. போர் தொடங்கி விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அறிவித்த நாள் வரை பல பத்தாயிரக் கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.நா. சபையின் உள்ளக அறிக்கையின்படி 70 ஆயிரம் மக்கள் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இலங்கை அரசினாலும் அதன் ஆயுதப் படைகளாலும் கொல்லப்பட்டமைக்கு சுதந்திரமான சர்வதேச நீதி விசாரணையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஊடாக கோருவதன் மூலமாக விசேட தீர்ப்பாயம் போன்ற நடவடிக்கைகளை எடுத்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க் குற்றவாளிகளை நிறுத்தி தமிழ் இனத்துக்கு நீதி கிடைக்க வும் அரசியல் தீர்வு கிடைக்கவும் வலியுறுத்தி 10 லட்சம் கையொப் பங்களை ஐக்கிய நாடுகள் சபையிடம் கைய ளிக் கின்ற முயற்சிக்கு ஆதரவு வழங்குமாறு உலகத் தமி ழர்களிடமும் மனித உரிமை ஆர்வலர்களிடமும் வேண்டிக் கொள்கின்றேன்.- என்றுள்ளது. (ற-4,105)

## நடமாடும் சேவையும் உதவி வழங்கும் நிகழ்வும்

கொழும்புத்துறை, ஜூலை 21

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் சேவையும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த புதன்கிழமை முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றன.

ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி கே.செல்வநாதனும், சிறப்பு விருந்தினராக பூநகரிப் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் சுரேந்திரனும் கலந்து கொண்டு நடமாடும் உபகரணங்களை பயனாளிகளுக்கு வழங்கினர்.

சக்கர நாற்காலிகள் 12, முச்சக்கர வண்டி 4, வெள்ளைப்பிரம்பு, ஊன்றுதடிகள், கொமட் ஸ்ராண்ட் உட்படப் பல உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், 10 பயனாளி களுக்கு புதிதாகச் செயற்கைக் கால் பொருத்துவதற்கான அளவீடுகளும் மேற்கொள்ளப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-135)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**பொனிப்பாஸ் தர்மசீலன்**



மண்ணில் 19.02.1977

விண்ணில் 21.07.2014

குடும்பத்தின் குலவிளக்காய்
உதித்திட்ட சீலனே!
காலனின் கைப்பிடிக்குள் நீ சென்று
ஆண்டொன்று ஆனதுவோ!
எம் உடலில் உயிர் உள்ளவரை
உன் நினைவில் வாழ்வோம் நாம்
ஆண்டவரில் உன் ஆன்மா
அமைதிபெற இறைஞ்சுகிறோம்
அனுதினமும்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

### 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **சிவராசா தவக்குமார்**



பிறப்பு 15.10.1980

இறப்பு 07.06.2015

கடந்த 07.06.2015 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் சிவராசா தவக்குமார் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (21.07.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

### 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**கணேசமூர்த்தி சசிதரன் (சசி)**



பிறப்பு 19 03 1967

இறப்பு 17 06 2010

நெஞ்சம் மறக்கவில்லை நினைவுகள் அழிவதில்லை
கனவுகள் ஓயவில்லை காயங்கள் ஆறவில்லை
ஆண்டுகள் ஐந்தல்ல ஆயிரம் ஆண்டுகள் மறைந்தாலும்
நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள் அப்பா......
பேராசை, சுயநலம், அதர்மச் செயலை உருவாக்கும்
ஆனால் அதர்மம் ஒருபோதும் தர்மத்தை வெல்லாது
என்ற நியதியை நீங்களும் நிரூபித்துக்காட்ட வேண்டும் அப்பா.....

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

பேக்கரி லேன்,
சண்டிலிப்பாய். (63105) (9.3)

### ஆத்மசாந்திப் பிரார்த்தனை

உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் **பொ.கருணாகரன்** அவர்களது தாயார்

திருமதி **சோதி பொன்னுத்துரை**


அவர்கள் 26.06.2015 அன்று சிவபதமடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம், உரும்பிராய்.

ஆலய பரிபாலன சபையினர்.

### கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்

**இராசலிங்கம் நந்தகுமார்**



தோற்றம் 10.05.1963

மறைவு 16.07.2015

கல்வியங்காடு வீரபத்திர தேவஸ்தான முன்னாள் பரிபாலன சபைத் தலைவருமாகிய செ. இராசலிங்கம் அவர்களுடைய கனிஷ்ட புத்திரன் இராசலிங்கம் நந்தகுமார் அவர்கள் 16.07.2015 அன்று காலமாகியுள்ளார். அவர்களுடைய மறைவை ஒட்டி அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் துயரில் நாங்களும் பங்கு பற்றுகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய வீரபத்திர சுவாமியை வேண்டிக் கொள்கின்றோம்.

கல்வியங்காடு பத்திர காளி
சமேத வீரபத்திரர் தேவஸ்தானம்
பிரதம குரு




## அன்ரோயிட் இயங்குதளத்தில் தானியங்கிக் கார்

மென்பொருள் பொறியியலாளரான Dimitri Platis என்பவரும் அவரது குழுவினரும் இணைந்து அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கக்கூடிய தானியங்கி மாதிரிக் காரை வடி வமைத்துள்ளனர். இந்த வாரத்தில் அறிமுகம் செய்யப்பட வுள்ள இந்தக் கார், நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ள சென்சார்களிடமிருந்து தரவுகளைப் பெற்றும், விசேட புரோகிராம் மூலமும் வீதியிலுள்ள கோடுகளை இனம் கண்டு தானாகவே இயங்கக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரிக் காரை அடிப்படையாகக் கொண்டு எதிர் காலத் தில் மனிதர்கள் பயணம் செய்யக்கூடியதாகவும், அன் ரோயிட் மொபைல் சாதனங்களின் மூலம் கட்டுப் படுத்தக் கூடியதாகவும் கார்கள் வடிவமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## சிறுவர்களுக்கான கூகுள் கேம்ப்


சிறுவர்களுக்குத் தேவையான பயனுள்ள தகவல்களை அறிந்துகொள்வதற்காக கூகுள் கேம்ப் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு உங்கள் குழந்தைகளை அழைத்துச்சென்றால் அவர்கள் ஏராளமான அறிவியல் பூர்வ தகவல்களை அறிந்து கொள்வர்.

இந்த கேம்பில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு இடத்துக்கு உங்கள் குழந்தையைக் கூட்டிச் சென்று அவர்களோடு மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டே அவர்களின் சிந்தனையைத் தூண்டி விட்டு அவர்களின் கேள்விக்கு பதிலும் சொல்கிறது கூகுள்.

கூகுள் கேம்புக்கு செல்வதற்கான லிங்க்:
https://camp.withgoogle.com

## அன்ரோயிட் சாதனங்களுக்கான ஸ்கைப் புதிய பதிப்பு

இலவசமாகவும், கட்டணம் செலுத்தப் பட்டதுமான இரு வகையான வீடியோ மற்றும் குரல்வழி தொடர்பாடல் சேவையை வழங்கி வரும் ஸ்கைப் ஆனது அன்ரோயிட் சாதனங்களுக்கான புதிய பதிப்பை வெளியிட் டுள்ளது. இந்தப் பதிப்பானது, மின்கலத்தின் ஆயுட்காலத்தைப் பாதிக்காததுடன்,



ஸ்கைப் கணக்கினுள் உள் நுழைந்த தகவல்களை சேமித்து வைத்திருக்கும் வசதியும் கொண்டது. இவை தவிர மேலும் சில புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட் டுள்ளதுடன், முன்னைய பதிப்பில் காணப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

இதேவேளை iOS சாதனங்களுக்கான இந்தப் புதிய பதிப்பு விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு உதயன் பத்திரிகை அலுவலகத்தை பார்வையிட்டனர். (ற-20)

## சமையல் எரிவாயு கசிவால் விபத்து

மட்டக்களப்ப, ஜூலை 21

வீடொன்றில் சமையல் எரிவாயுக் கசிவின் காரணமாக ஏற்பட்ட தீயினால் வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. இந்தச் சம்பவம் காத்தான்குடி-3, பழைய விதானையார் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த சமையல் எரிவாயு சிலின்டர் ஒன்றிலிருந்து எரிவாயு கசிந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட தீயால் வீட்டின் கூரையும், ஓடுகளும் தூக்கி வீசப்பட்டுள்ளன. விட்டிலிருந்த பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. குறித்த நேரத்தில் வீட்டில் இருந்தவர்கள் உடனடியாக வீட்டை விட்டு வெளியேறியதால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட் டது. (ற-10)





## தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத்தின் ஆடிப் பிறப்பு தின நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜூலை 21

தெல்லிப்பளை தமிழ்ச் சங்கத்தால் கடந்த வெள்ளிக்கிழமை தமிழர்களின் திருநாளான ஆடிப் பிறப்பு மிகவும் விமரிசையாகக் சங்கத்தலைவர் சங்கரப்பிள்ளை சிவானந்தராசா தலைமையில் கொண்டாடப்பட்டது.


தெல்லிப்பளை -ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வளாக வாசலில் கொட்டில் அமைத்து ஆடிக் கூழ் காய்ச்சப்பட்டு, கொழுக்கட்டையுடன் தமிழர் பாரம் பரியத்துக்கு ஏற்ப சிரட்டைகள் மற்றும் கோலப்பட்ட பலா இலைகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார அலுவலர் திருமதி தாட்சாயினி செல்வக்குமாரும் கலந்து கொண்டார்கள்

ஆசியுரையை காசிப்பிள்ளையார் ஆலய குரு வரதராஜேஸ்வரக் குருக்கள் வழங்கினார். (ற-86)

உதயன் செவ்வாய்க்கிழமை ஜூலை 21 2015



## அமெரிக்கா வான்வெளித் தாக்குதல்

காபூல், ஜூலை 21
ஆப்கானிஸ்தானில் உள்ள சோதனைச் சாவடியொன்றின் மீது அமெரிக்கா மேற்கொண்ட வான்வெளித் தாக் குதலில் 14 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.
அங்குள்ள பராக்கி பராக் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றின் மீது அமெரிக்க இராணுவத்தின் இரண்டு ஹெலிகொப்டர்கள் நேற்றுக் காலை திடீரென தாக்குதல் நடத்தின.
இதில் அந்தச் சோதனைச்சாவடி கொழுந்துவிட்டு எரிந்தது. அந்தத் தாக்குதலில் சோதனைச்சாவடியில் இருந்த 14 வீரர்கள் உயிரிழந்துள்ளனர். (ஐ)

## அமெரிக்காவிலும் கியூபாவிலும் தூதரகங்கள் திறப்பு

### 54 வருடங்களின் பின்னர்

ஹவானா, ஜூலை 21
அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையே கடந்த 1961 ஆம் ஆண்டு முதல் தூதரக உறவு முறிந்திருந்தது. அமெரிக்காவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளுக்கு கியூபா உதவி செய்வதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.
அதனைத் தொடர்ந்து இரு நாடுகளிலும் செயற்பட்டு வந்த தூதரகங்கள் மூடப்பட்டன. கடந்த 54 வருடங்களாக இருநாடுகளும் எதிரிகளாகச் செயற்பட்டு வந்தன.
இந்த நிலையில் இருநாடுகளும் பிரச்சினைகளைப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ள முடிவு செய்தன. அதற்கான நடவடிக்கை கடந்த 6 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டது.
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் ஒப்புதலின் பேரில் அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி, கியூபா வெளியுறவு அமைச்சர் புரூனோ ரோத்ரி கியூசுடன் பேச்சு நடத்தினார். இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையேயான சுமுகப் பேச்சு முடிந்து சமரசம் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து மீண் டும் தூதரக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.



அதன்படி அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் கியூபா தூதரகம் நேற்றுத் திறக்கப்பட்டது. அதே போன்றுகியூபா தலைநகரம்ஹவானாவில் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்பட்டது. 54 வருடங்களுக்குப் பின்னர்இருநாடுகளது தேசியக்கொடிகளும் பறக்கத் தொடங்கியுள்ளன. (ஐ)

## கிரீஸ் நாடு இயல்பு நிலைக்கு

ஏதென்ஸ்,ஜூலை 21
சர்வதேச செலவாணிய நிதிகம் மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை கிரீஸ் நாடு திருப்பி செலுத்தத் தொடங்கியுள்ளதால் அந்த நாட்டின் பொதுமக்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.
சுமார் 310 பில்லியன் யூரோ கடன் தொகை தொடர்பாக அண்மையில் கிரீஸ் நாட்டுடன் ஐரோப்பிய நாடுகள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.
இந்த நிலையில் ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் சர்வதேச நிதியகத்துக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை தற்போது திரும்ப செலுத்தும் நடவடிக்கையில் கிரீஸ் நாடு ஈடுப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
மேலும், மூடப்பட்டுள்ள வங்கிகள் திரும்ப செயல்பட தொடங்கியுள்ள நிலையில், தன்னுடைய நாடு கடனையும் திரும்ப செலுத்தும் நடவடிக்கையில் ஈடுப்பட்டிருப்பது பொது மக்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## ஆஸ்திரேலியாவில் 157 பேர் கைது

சிட்னி, ஜூலை 20
ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக தஞ்சம்புக முயன்ற 157 அகதிகளை அந்த நாட்டின் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.
ஆஸ்திரேலியாவில் வருடந்தோறும் ஏராளமானவர்கள் சட்டவிரோதமாக அகதிகளாக குடிபெயர்ந்து வருகின்றனர். ஆப்கானிஸ்தான், இலங்கை, ஈரான், ஈராக், போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள், இந்தோனேஷியாவில் இருந்து படகுகள் மூலம் ஆஸ்திரேலிய எல்லைக்குள் நுழைகின்றனர்.
இதனைத் தடுக்கும் விதமாக ஆஸ்திரேலியக் கடற்படை தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தீவிர ரோந்துப் பணியை மேற்கொண்டு வருகிறது.
அதன் ஒருபகுதியாக வடமேற்கு கடல்பகுதியில் அந்த நாட்டு கடற்படைக்குச் சொந்தமான ரோந்துக் கப்பல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போது எல்லைக்குள் அத்துமீறி நுழைய முயன்ற படகு தடுத்து நிறுத்தப்பட்டது.
அதில் 157 பேர் பயணம் செய்தனர். பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர்கள் அனைவரும் தஞ்சம் அடைய வந்தவர்கள் என தெரியவந்தது. இதனையடுத்து ஆஸ்திரேலிய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைய முயன்ற குற்றத்துக்காக அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)



## போஸ்னியா கிராமத்தில் நிலம் வாங்கிய ஐ.எஸ்.

லண்டன், ஜூலை 21
சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு அவர்களை ஒடுக்க ஐரோப்பா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் தீவிர நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. இதனால் ஆத்திரம் அடைந்த ஐ.எஸ்.தீவிரவாதிகள் ஐரோப்பிய நாடுகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.
அதற்காக அங்கு நுழைய ஐரோப்பிய நாடான போஸ்னியாவில் மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் நிலம் வாங்கியுள்ளனர்.
அங்கு இரகசிய பயிற்சி முகாம்களை அமைத்துள்ளனர். அதில் சிரியா, ஈராக் மற்றும் வடக்கு ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர்.
அந்தப்பகுதிகளுக்குச்செல்லப் போதிய போக்குவரத்து இல்லை. அடிப்படை வசதிகளும் இல்லை. எனவே எவராலும் எளிதில் கண்டுபிடிக்க முடியாத பகுதிகளை விலைக்கு வாங்கி முகாம்கள் அமைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.
பயிற்சி முடிந்தவுடன் போஸ்னியாவில் தாக்குதலைத் தொடங்கி ஐரோப்பிய நாடுகளைக் கதிகலங்க வைக்கத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். (ஐ)

## இந்தியா-ரஷ்யா கூட்டு முயற்சி 200 ஹெலிகொப்டர்கள் தயாரிப்பு

மாஸ்கோ, ஜூலை 21
இந்தியா-ரஷ்யா இடையே இராணுவம் உட்பட பல்வேறு துறைகளில் இணைந்து செயற்படுவது குறித்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அதன்படி இரு நாடுகளின் கூட்டு முயற்சியுடன் இந்திய இராணுவத்துக்கு தேவையான 200 ஹெலிகொப்டர்கள் தயாரிக்கப்படும் என்று ரஷ்யாவுக்கான இந்தியத் தூதர் பி. எஸ்.ராகவன் தெரிவித்துள்ளார்.
''இந்தியாவில் தயாரிப்போம்'' திட்டத்தின் கீழ் இவை இந்தியாவிலேயே தயாரிக்கப்படும். அதற்கான தொழில் நுட்பத்தை ரஷ்யா வழங்கும். இராணுவ ஒத்துழைப்பில் இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான உறவு இல்லை என்று கூறுவது தவறான அல்லது அரைகுறையான தகவல் ஆகும். ஏனைய நாடுகளில் இருந்து ஆயுதங்கள் கொள்முதல் செய்யப்பட்டாலும் எமது படைகளுக்குத் தேவையான 70 சதவீத ஆயுதங்கள் ரஷ்யாவில் இருந்துதான் பெறப்படுகின்றன.
மேலும், ரஷ்யாவின் உதவியுடன் இந்தியா செயற்படுத்த இருக்கும் பல்வேறு திட்டங்கள் தற்போது விவாத அளவில் உள்ளன. அவை இறுதி செய்யப்பட்டவுடன் வெளிப்படையாக அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)



## இஸ்ரேல் இராணுவத்துக்கு நிதி வழங்கும் அமெரிக்கா

வொஷிங்டன்,ஜூலை 21
இஸ்ரேல் தனது இராணுவத்துக்கான வருடாந்தம் 3 பில்லியன் டொலர் நிதியை அமெரிக்கா விடம் இருந்து உதவியாகப் பெற்று வருகிறது.
இந்த உதவித் தொகை ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தால் மேலும் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இஸ்ரேல் நாட்டின் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்க இராணுவத் தின் ஆதரவு அதிகமாக எதிர்பார்க்கப்பட்டபோதும் அமெரிக்கா அதற்குப் பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனினும் இஸ்ரேல் தனது உறுதியான நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை.



இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஆஷ் காட்டர் உத்தியோகபூர்வமான பயணம் ஒன்றை இஸ்ரேலுக்கு மேற்கொண்டுள்ளார்.
ஈரானுக்கான பொருளாதாரத் தடை நீக்கப்படுவதால் லெபனான், பாலஸ்தீன தீவிரவாதிகளுக்கு அந்த நிதியுதவிகள் போய்ச் சேர்ந்துவிடுமோ என்று அஞ் சப்படுகிறது.
அத்துடன் அரபு நாடுகளுடன் போட்டியிடுவதால் ஏனைய நாடுகளுடனான இஸ்ரேலின் நட்பு நிலை பாதிப்புக்குள்ளாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. புனித றம்ழான் தினத்தை முன்னிட்டு ஈரான் நாட்டின் அதியுயர் தலைவர் அலி – ம்னி அணு ஆயுத ஒப்பந்தத்தால் சீரியா, ஈராக், யேமன், லெபனான் மற்றும் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவளிப்பதை மாற்ற முடியாது என அறிக்கை வெளியிட்டுள்ளதால் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அதிர்ச்சியடைந்துள்ளார். இதனால் தனது நாட்டின் பாதுகாப்புச் செயலாளரை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் இந்த விவகாரம் குறித்து அந்த நாட்டின் அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.
இஸ்ரேலும் தமது நாட்டின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைத்துள்ளது. (ஐ–ரி)

# றம்ழான் மாதத்தில் ஐயாயிரம் பேர் சாவு

## ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல்களின் எதிரொலி

டமாஸ்கஸ்,ஜூலை 21





சிரியாவில் புனித றம்ழான் மாதத்தில் மட்டும் 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக மனித உரிமை மீறல் தொடர்பாகக் கண்காணிக்கும் குழு தெரிவித்துள்ளது.

பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டு வரும் எஸ்.ஓ.எச்.ஆர் என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


தனிநாடு அமைக்கப் போராடி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும், சிரிய படையினருக்குமிடையே நடைபெற்ற தாக்குதல்களே இதற்குக் காரணம் ஆகும். றம்ழான் மாதம் தொடங்கி முடிவடைந்த ஒரு மாதத்துக்குள் 224 சிறுவர்கள், 222 பெண்கள் உட்பட பெருந்தொகையான பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், சிரியப் படையினர் மேற்கொண்ட இராணுவத் தாக்குதலில் 500 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர், அதில் 100 இற்கும் மேற்பட்ட சிறுவர்களும் அடங்குவர்.

இது போன்று சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர், பலரைத் தலையை வெட்டிக் கொன்றுள்ளனர். இது வரை 3 ஆயிரத்து 27 பேர் தலை வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். ஐ.எஸ் அமைப்பில் உள்ள சிறுவர் போராளிகள் 52 பேர் அரச படைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக்கில் றம்ழான் தினத்தன்று ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 120 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தீவிரவாதிகளை அழிக்க பிரிட்டன் ஆதரவளிக்கும்

**பிரதமர் டேவிட் கமரூன் தெரிவிப்பு**



லண்டன், ஜூலை 21

ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் முயற்சியில் அமெரிக்காவுக்கு பிரிட்டன் உறுதுணையாக இருக்கும் என்று அந்த நாட்டின் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான வேட்டையில், அமெரிக்காவுடன் இணைந்து இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று பிரிட்டன் எதிர்க்கட்சிகள் விவாதிக்கின்றன. நாங்கள் அமெரிக்காவுடன் இணைந்து ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகத் தொடர்ந்து சண்டையிடுவோம். தீவிரவாதிகளுக்கு எதிரான அந்தப் போரில் பிரிட்டன் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்பதே எமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து பிரிட்டன் தொடர்ந்து போரிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யேமனில் ஷெல் தாக்குதல்

**45 பேர் சாவு**

சனா, ஜூலை 21

யேமன் நாட்டின் தலைநகரான சனா உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டதையடுத்து அந்த நாட்டில் கடும் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

அதனால் ஜனாதிபதி அபெட் ரப்பு மன்சூர் ஹாதி, தலைநகர் சனாவிலிருந்து தலைமறைவாகியுள்ளார். கிளர்ச்சியாளர்களை ஒடுக்க உதவுமாறு சவூதி அரேபியாவுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். ஹாதியின் வேண்டுகோளை ஏற்று ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது சவூதி அரேபியா தலைமையிலான அரேபியக் கூட்டுப்படைகள் வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளன.

அதில் கிளர்ச்சியாளர்கள் பலர் கொல்லப்பட்டதுடன், அவர்களின் முகாம்கள் குண்டுவீச்சில் அழிக்கப்பட்டன. கிளர்ச்சியாளர்களை அழிக்கும் முயற்சியில் நடத்தப்படும் தாக்குதல்களில் ஏராளமான அப்பாவிப் பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகளின் கடும் தாக்குதலால் கிளர்ச்சியாளர்களின் படை, பின்னடைவைச் சந்தித்து வருகிறது. அதனால் கிளர்ச்சியாளர்கள் கடுமையான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டு வருகிறார்கள். நேற்று அவர்கள் நடத்திய ஷெல் தாக்குதலில் வடக்கு ஏடனில் குறைந்தது 45 பேர் உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் 100 பேருக்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிப் மக்கள் என்று கூறப்படுகிறது. (ஐ)



வியட்னாமில் அதிகரித்துள்ள வெப்பம் காரணமாக அங்குள்ளவர்கள் கடற்கரையோரங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (ஐ)

## ஜேர்மனி விமான விபத்து நஷ்டஈடு கோரும் உறவினர்கள்


பெர்லின்,ஜூலை 21

ஜேர்மனி விமான விபத்தில் உயிரிழந்த பயணிகளுக்கு இழப்பீடாக 25 ஆயிரம் யூரோ வழங்கப்படுவதை எதிர்த்து அதனை 2 லட்சம் யூரோக்களாக உயர்த்த வேண்டும் என உயிரிழந்த பயணிகளின் உறவினர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஜேர்மனியின் லூப்தான்சா நிறுவனத்தைச் சேர்ந்த ஜேர்மன் விங்க்ஸ் என்ற விமானம் கடந்த மார்ச் மாதம் பிரான்ஸ் மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 150 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு உடனடி நிவாரணமாக 50 ஆயிரம் யூரோக்களை லூப்தான்சா நிறுவனம் வழங்கியது. அதனைத் தொடர்ந்து. கடந்த ஜூன் மாதம் லூப்தான்சா விமான நிறுவனம் ஒரு அறிவிப்பை வெளியிட்டது.





அதில், விபத்தில் இறந்த ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த 72 பயணிகளுக்கு தலா 25 ஆயிரம் யூரோக்களும், பயணிகளது குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு 10 ஆயிரம் யூரோக்களும் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தது.

இந்த அறிவிப்புக்கு விபத்தில் இறந்த பயணிகளின் உறவினர்கள் கூட்டாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தங்களது உறவினர்களைப் பிரிந்ததற்கும், அவர்கள் பட்ட துன்பத்தை ஈடு செய்யவும், உயிரிழந்த பயணிகள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் யூரோக்களும், அவர்களது குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு அதே அளவு ஒரு லட்சம் யூரோக்கள் என மொத்தம் 2 லட்சம் யூரோக்கள் வழங்கப்பட வேண்டும் என லூப்தான்சா நிறுவனத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## புருண்டி அரசு பேச்சுப் புறக்கணிப்பு

புஜும்புரா, ஜூலை 21

புருண்டியில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் புருண்டி அரசு கிழக்கு ஆபிரிக்க நாடுகளுடனான பேச்சைப் புறக்கணித்துள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் 3 ஆவது தடவையாக அவர் போட்டியிடுகிறார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கிடையே ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா, தான்சானியா நாட்டில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்கச் சென்றபோது அங்கு திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது. அந்தப்புரட்சியை ஜனாதிபதி பியார்ரேவுக்கு எதிராகச் செயற்படும் தளபதி கோட் பிராய்டு நியோம்பர் நடத்தினார். ஆனால் அரசு விசுவாச இராணுவப் படைகள் புரட்சியை முறியடித்து விட்டன. இதனை அடுத்துத் திட்டமிட்டப்படி தேர்தல் நடைபெறும் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் கிழக்கு ஆபிரிக்க நாடு கள் ஏற்பாடு செய்திருந்த பேச்சை புருண்டி அரசு புறக்கணித்துள்ளது. இதனை அடுத்து பேச்சு தேர்தலுக்குப் பின்னர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே அங்கு உள்ள சிக்கலை மேலும் அதிகரிக்கக் கூடும் எனக்கூறப்படுகிறது. ஆனால் பொது மக்களும் மாணவர்களும் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இதுவரை வன்முறைச் சம்பவங்களில் பலர் உயிரிழந்துள்ளார்கள் 1.4 லட்சம் மக்கள் அயல் நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றுவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



இராஜினிதேவி சிவலிங்கம்
பிரதிஅதிபர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி




# இன்றைய கால மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் தீர்வுகளும்

இன்றைய மாணவர்களே நாளைய உலகத்தை உருவாக்கப்போகும் தலைவர்கள். ஆதலால் மாணவர்களின் விருத்தி பொருத்தமான வகையில் மேம்பாடடைய உதவுவது பெரியவர்களின் கடமையாகவும், பொறுப்பாகவும், அமைகின்றது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கிய காலம் தொடக்கம் அவர்களது நாள்களின் கணிசமான பகுதி பாடசாலையிலேயே செலவிடப்படுகின்றது. இதனால் மாணவர்களை அவதானிப்பதிலும், நல்வழிப்படுத்துவதிலும் அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதிலும் ஆசிரிய உலகின் சேவை முக்கிய இடத்தை வகிக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஒரு மாணவன் தன் குடும்பத்துடன் கொண்டிருக்கும் தொடர்பானது அவனுடைய ஆளுமையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகிறது. இச் செல்வாக்கு அவனுடைய ஆயுட்காலம் முழுவதும் நீடிக்கிறது. குடும்பத்தில் நிலவும் மன வெழுச்சி சார்ந்த செயற்பாடுகள் பாட சாலையின் செயற்பாடுகளிலும் பார்க்க முக்கியத்துவம் வாய்ந்தவை.

குடும்ப உறுப்பினரின் ஒட்டுணர்வு, இடைவினைத்தாக்கம் ஏனையவரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், ஒன்று கூடுதல், ஒத்துச் செல்லாத விடயங்களையிட்டுக் கலந்துரையாடி முடிவுக்கு வருதல் போன்றவை சாதகமான செயற்பாடுகளுக்கு உதாரணங்களாக அமையும். மறுபுறத்தில் குடும்ப உறுப்பினரிடையில் முரண்பாடுகள் நிலவுதல், ஒருசில பிள்ளைகளுக்குப் பக்கச் சார்பாக நடந்து கொள்ளுதல், குடும்ப உறுப்பினரின் வகிபங்கில் குறைபாடுகள் நிலவுதல், அல்லது போதாத்தன்மை காணப்படுதல், வெவ்வேறு பெறுமானங்கள் அல்லது நம்பிக்கைகளையிட்டு கருத்து முரண்பாடுகள் தோன்றுதல்,அதிகார தோரணையுடன் கட்டுப்பாடுகளை விதித்தல், பிள்ளைகளில் மனவெழுச்சி சார்ந்த சீர்குலைவுகளை ஏற்படுத்தக் கூடியவை.

பெரிய குடும்பங்களில் ஆளுமை விருத்திக்குரிய இயல்புகள் பெரும்பாலும் பொருளாதாரக் காரணிகளால் பாதிப்புறுகின்றன.



குடும்பத்தின் வருமானம் போதியளவில் இல்லாவிட்டால் கல்வி மற்றும் சமூக நிலைமைகளில் முன்னேற்றம் காண்பதற்கு சாதகமான தன்மைகள் குறைவாகக் காணப்படும். மேலும் பிள்ளைகள் பலர் இருக்குமிடத்தில் பெற்றோரின் போதிய வழிகாட்டல்கள் இன்மை, பிள்ளைகள் தமது தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் உதவிகளைச் செய்ய முடியாமை மற்றும் ஒழுக்கமற்ற நடத்தைகள் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகளும் உண்டு.

குடும்ப அமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், ஒரு சமூகத்தினர் பின்பற்றும் கலாசார கோலங்களின் அடிப்படையில் குடும்பச் செயற்பாடுகள் இடம்பெறாத விடத்து ஒரு குடும்பமானது பாதிப்புக்களுக்கு உள்ளாக வேண்டிநேரிடும். பெற்றோர் பிரிந்து வாழுதல் அல்லது மறுமணம் செய்தல் சில சமூகங்களில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இத்தகைய வேறுபடும் அம்சங்கள் மாணவர்களையும் பாதிக்கின்றன.

பெற்றோர் ஒருவர் இல்லாத வேளைகளில் தாய் அல்லது தந்தை குடும்பத்தின் முழுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக இன்றைய சூழலில் வேலை காரணமாக தாய் அல்லது தந்தை வெளிநாடுகளுக்குச் செல்வதால் குடும்பங்களில் பல பிரச்சினைகள் தோன்றலாம். பிள்ளைப்பருவத்தில் அவர்களுடைய ஆளுமைப் பண்புக்கூறுகள் வடிவமைக்கப்படுவதால் பெற்றோரின் பிரசன்னமின்மை பிள்ளைகளில் உளவியல் ரீதியான பாதிப்புக்களை உண்டாக்கும். கல்வி பற்றிய சிந்தனைகளும் கருத்து வெளிப்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. புதிய நூற்றாண்டுக்கான கல்வி புதிய சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான கல்வி, என பல்வேறு கல்விச் சிந்தனைகள் இன்று ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

மாணவர்கள் இத்தகைய சவால்களை எதிர்கொள்ளும்போது கல்வித் திட்டமானது பொருத்தப்பாடாக அமைக்கப்பட்டுள்ளதா என்பது சந்தேகமானதே எனலாம்.

கல்வியினதும் கலைத்திட்டத்தினதும் செயற்பாடுகள் நடைமுறையில் பரீட்சைகளை நோக்கியே குவியப்படுத்தப்பட்டுள்ளன. போட்டி மிக்க சமூக நிலைவரங்கள் பரீட்சைகளின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கச் செய்து வருகின்றன. அதே வேளை மாணவரின் ஆளுமை வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகள் பின் தள்ளப்பட்டு பரீட்சைக்குத் தயாரிக்கும் நடவடிக்கைகளே பாடசாலைகளில் மேலோங்கியுள்ளன.

மகிழ்ச்சியான கற்றல் சூழலை விரும்பிவரும் மாணவர்கள், அவர்கள் விரும்பும் சூழல் இல்லாத சந்தர்ப்பத்தில் எதிர்வினையான செயற்பாடுகளில் ஈடுபடுவர். அவர்கள் கற்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை எடுத்துக் கொள்வதற்கும், தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையிலும், பாடசாலைகள் செயற்படாது விட்டால் மாணவர்களுக்கு அது விரும்பாத இடமாக அமையக்கூடும்.

ஆசிரியர்களின் கவனிப்புப்பாரபட்சம், மாணவர்களுடன் அன்பாகப் பழகாத தன் மைகள் பல்வேறு கவனக் கலைப்பான்களும் மாணவர்களுக்குச் சவாலாக அமையும் காரணிகளாக அமைகின்றன.

மாணவர்களுக்கு ஏற்படும் உடல் உளக் குறைபாடுகளும் அவர்களின் கற்றல் செயற்பாட்டுக்குப் பெரும்சவாலாக அமைந்து விடுகின்றன. மாணவனின் உளக் குறைபாடுகளுக்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். குடும்ப உறுப்பினரின் இழப்பு, தாய் தொழிலுக்காக வெளிநாடு செல்லல், வறுமை, காதல் முறிவு, குடும்பச் சண்டை, தகப்பனாரின் குடிப்பழக்கம், நாட்டில் ஏற்படும் போர் அனர்த்தங்கள் ஆகிய காரணிகள் மாணவனின் உளக்குறைபாட்டிற்கு காரணமாக அமையலாம். இத்தகைய சவால்களிலிருந்து மாணவர்களை மீட்டு அவர்கள் கல்வி கற்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

மாணவர்களின் சகபாடிகளின் செயற்பாடுகள் நன்மையளிப்பனவாகவும் சிலசந்தர்ப்பங்களில் அவர்களின் வாழ்க்கையைத் திசை திருப்புவனவாகவும் அமையலாம். தற்கால மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்துச் செல்வது அனைவருக்கும் அதிர்ச்சியளிக்கும் விடயமாகும். குறிப்பாக கல்வியில் முதனிலை வகித்த வடக்கு மாகாணம், கல்வி நிலையில் பின்னடைவதற்கு போதைப்பொருள் பாவனை யும் ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மாணவர்களின் கல்வியைத் திசை திருப்பும் வகையில் திட்டமிட்டு செயற்பட்டுவரும் சமூக விரோதக்குழுக்களால் மாணவர்களின் எதிர்காலம் சீரழிக்கப்படுகிறது.

தற்காலத்தில் ஊடகப் பயன்பாடுகள் காரணமாக மாணவர்களின் நடத்தைக்கோலங்கள் மாறுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. கட்டிளமைப்பருவ இளைஞர்கள் எதிர்ப்பால் கவர்ச்சி காரணமாக அவர்களின் கல்வியை தொடரமுடியாது தமது இலக்குகளை அடைய முடியாத சூழ்நிலை ஏற்படலாம். இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்கும் நிலையில் அவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும் ஒரு தேக்கநிலை ஏற்படலாம்.

மாணவர்களுக்குத் தங்களுடைய எதிர்காலம் பற்றிய தன்னம்பிக்கை அவசியமானது. அந்தத் தன்னம்பிக்கையே அவர்கள் சிறப்பான வாழ்க்கையை அமைப்பதற்குப் பலமாக அமையும். மாணவர்கள் பொதுவாக முகம் கொடுக்கும் பிரச்சினைகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

இளைஞர்களுக்கும் வயது வந்தவர் களுக்கும் இடையிலுள்ள தலைமுறை இடைவெளி காரணமாக ஏற்படும் முரண்பாடுகள், பாரம்பரிய கலா சாரங்களை இளைய தலைமுறை ஏற்காமை, மாணவர்கள் தங்கள் மனக்குறைகளையும், கிலேசங் களையும் கூறுவதற்குரிய தகுதி வாய்ந்த பெரியவர்கள் இல்லாமை போன்ற காரணங்களால் இங்கு அவதானிக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண முடியாது போய்விடுகின்றது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிட்டால் மாணவரின் தன்னம்பிக்கையில் இழப்பு ஏற்படும்.

மாணவர்களுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதில் பெற்றோர்களின் பங்கு முக்கிய இடத்தை வகிக்கிறது. பெற்றோர்கள் முதலில் பிள்ளைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் பிள்ளைகளுக்குப் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும், அன்பும் வழங்குகின்றார்கள் என்பதைப் பிள்ளைகளை உணர வைக்க வேண்டும். பிள்ளைகள் பல்வேறு பிரச்சினைகளுக்குள் அகப்பட்டுத் திக்குமுக்காடும் போது அன்பாக அரவணைத்து வழிநடத்திச் செல்ல வேண்டும். பிள்ளைகள் தகாத பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டிருக்கின்றார்களா எனப் பார்க்க வேண்டும். பிள்ளைகளின் சினேகிதர்கள் யாரென்பது பெற்றோருக்கு தெரிய வேண்டும்.

மார்ணவர்களை அவதானிப்பதிலும், நல்வழிப்படுத்துவதிலும் அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதிலும் ஆசிரியர்களின் செல்வாக்கு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆசிரியர்கள் இவ்வாறானதொரு செல்வாக்கு நிலையில் இருப்பதால் ஆசிரியர்களின் பொறுப்புக்களும் அதிகரிக்கின்றன. இவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களின் வளர்ச்சியிலும், ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்த வேண்டியவர்களாகின்றனர்.

மாணவர்களுக்கு உடல் உள ரீதியான தண்டனைகளைத் தவிர்த்து மாணவர்களுடன் கனிவான பேச்சு, இதமான அரவணைப்பு, அன்பான நலம் விசாரித்தல், பாராட்டுதல், பரிசு வழங்கல் மாணவரில் அக்கறை காட்டல், பெற்றோர் ஆசிரியர் சுமுகமான உறவு, விட்டுக்கொடுப்பை வளர்த்தல், நல்ல ஆலோசனை வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வது ஆரோக்கியமான ஆசிரியர்களின் சிறப்பம்சமாகும்.

மாணவர்கள் செய்யும் எந்தச் செயல்களையும் ஆசிரியர்கள் இனங்கண்டு அவர்களிடம் உள்ள குறைகளைக் கூறாது அவர்களிடம் உள்ள நிறைகளை, நல்ல பண்புகளைப் பாராட்ட, அந்தப் பண்புகளை வளர்த்துக்கொள்ள மாணவன் விரும்புவான்.

எனவே எதிர்காலச் சந்ததியினரை, நாட்டுக்குப் பொருத்தமான ஆரோக்கியமான சமநிலை ஆளுமைமிக்க உயர் விழுமியப் பண்புகளை பேணிப்பாதுகாப்பவர்களாகிய மாணவர்களை உருவாக்குவது சமூக பிரக்ஞை உடைய பெரியோர்கள் ஒவ்வொருவரதும் தார்மீகப் பொறுப்பாகும்.

## பஸ் சேவைகள் மக்களுக்கானதே


தனியார் பஸ் நடத்துநர் ஒருவரின் அடாவடித் தனத்தால் பயணிகள் அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.

நான் நேற்றுமுன்தினம் காலை 8.15மணியளவில் யாழ்ப்பாணம் செல்வதற்காக 782ஆம் இலக்க அரச பஸ்சில் ஏறினேன். மூளாய்ப் பிள்ளையார் ஆலயத்தைத் தாண்டி பஸ் வந்து கொண்டிருந்தபோது பின்னால் மினிபஸ் வருவது தெரிந்தது. சிறிது தூரம் சென்றதும் தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லும் பிள்ளைகளை இறக்கி விடுவதற்காக பஸ் நிறுத்தப் பட்டது. அப்போது மினிபஸ் அரச பஸ்ஸைத் தாண்டிச் சென்றது. மினிபஸ் நடுவீதியில் நிறுத்தப்பட்டதோடு அதிலிருந்து கீழே இறங்கிய நடத்துநர் அரச பஸ் சாரதியுடன் முரண்பட்டார். பின்னர் அரச பஸ்ஸுக்கு வழி விடாதவாறு மினிபஸ் வீதி முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாகச் செலுத்தப்பட்டது. சுழிபுரம் சந்தி வரைக்கும் இந்தச் செயற்பாடு தொடர்ந்தது. பின்னர் நடுவீதியில் மினி பஸ் நிறுத்தப்பட்டது. அப்போது அங்கு காணப்பட்ட இடைவெளியூடாக அரசபஸ்ஸை எடுத்துச் செல்வ தற்கு அதன் சாரதி முயன்றார். அப்போது மினிபஸ் சடாரென எடுக்கப்பட்டதால் அதன் பக்கக் கண்ணாடி அரச பஸ்ஸின் பின்பக்கத்தில் மோதுண்டு உடைந்து விட்டது. பின்னர் சுழிபுரம் பஸ் நிலையத்தில் பஸ் நிறுத்தப்பட்டு பயணிகள் ஏறிக்கொண்டிருந்தனர். மினிபஸ் ம் அங்குவர அதிலிருந்து குதித்த நடத்துநர் வீதியில் வந்தவர் கொண்டுவந்த இரும்புக்கம்பியைப் பறித்து அரசபஸ்ஸின் சாரதியை அடிப்பதற்கு முயற்சி செய் தார். பஸ்ஸை எடுக்க விடமாட்டேன் எனக்கூறிக் கொண்டும் அவர் இருந்தார். வீதியில் நின்றவர்கள் அவரது கையிலிருந்த இரும்புக் கம்பியைப் பறித்தெடுத்ததுடன் அவரைச் சமாதானப் படுதவும் செய்தனர். பயணிகள் அங்கு நடந்த அனைத்துச் சம்பவங்களையும் பார்த்துக் கொண்டிருந்தனர். சுமார் 20 நிமிடங்கள் தாமதம் ஏற்பட்டதால் தமது கடமைக்குச் சென்றவர்கள் இருப்புக்கொள்ளாது தவித்ததை அவதானிக்க முடிந்தது.

பஸ் சேவை என்பது மக்களுக்கானது. அவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதற்கு எவருக்குமே உரிமை இல்லை. இதை தனியார் மற்றும் அரச பஸ் பணியாளர்கள் உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும்.

*மா.நந்தாவதி மூளாய்*

## வாசகர் திருமுகம்



## நோய்களை வழங்கும் பழங்கள்

சுகாதாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் என்ன தான் கூறினாலும் செயற்கையாகப் பழுக்க வைத்த பழங்களின் விற்பனை அமோகமாக இடம்பெற்றுக் கொண்டுதான் உள்ளது.

மக்கள் தினமும் பயன்படுத்தும் வாழைப்பழங்களை வாங்குவதற்குச் சென்றால் கடைகளில் தொங்குகின்ற வாழைக்குலைகள் வெவ்வேறு நிறங்களில் காட்சி தருகின்றன. வாழைப்பழங்கள் இயற்கையாகப் பழுத்திருந்தால் இந்த மாறுபட்ட நிறங்களில் அவை காட்சியளிக்க மாட்டா.

இந்த நிலையில் ஏதோ மருந்து விசிறப்பட்ட நிலையில் பழங்கள் விற்பனை செய்யப்படுவதால் பொது மக்களின் உடல் ஆரோக்கியம்தான் பாதிக்கப்படுகின்றது. இதனால் பழங்களை உண்பதற்கு மக்கள் தயங்குவதையும் காண முடிகின்றது.

தற்போது மாம்பழம், வாழைப்பழம் என்றில்லாது தக்காளிப்பழத்துக்கும் இரசாயனத்தைத் தெளித்து செயற்கையாகப் பழுக்க வைக்கின்றனர். இதனால் சமைக்கப்படும் தக்காளிப்பழம் புளிச் சுவையைத் தான் தருகின்றது.

சுகாதாரத்துறை அதிகாரிகள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டால் இத்தகைய மோசமான செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அங்கொன்றும் இங்கொன்றுமாக கடமைக்குச் சில வேலைகளைச் செய்வதால் செயற்கை முறையில் பழுக்க வைக்கும் நடவடிக்கைகளைத் தடுக்கவே முடியாது.

மேலும் பழங்களை விற்பனை செய்பவர்களும் மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டியது அவசியமானது. காசு கொடுத்துப் பழங்களை வாங்கி உண்டுவிட்டு நோய்களையும் இலவசமாகப் பெற்றுக்கொள்வதுதான் இன்றைய நடைமுறையாகிவிட்டது. இதற்கு எப்போதுதான் விடிவு கிடைக்கப் போகின்றது?

*பா.தவபாலன் ஊரெழு*

## கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

# நம்பமுடியாத தெற்கு அரசியல்

இலங்கையில் கடந்த ஒரு மாதகாலத்திற்குள்ளாக நடைபெற்ற அரசியல் நிகழ்வுகளை நன்கு அவதானிக்கும் போது தமிழர்கள் ஏன் தென்பகுதி அரசியல்வாதிகளை நம்புவதில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளமுடிகிறது.

இதனை ஆமோதிப்பதாகவே இலங்கை அரசின் உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை என்றும், சர்வதேச விசாரணை மூலமே தீர்வு கிடைக்கும் என்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா அண்மையில் தெரிவித்த கருத்து அமைந்திருந்தது.

தமது அரசியல் இலாபத்திற்காக எவ்விதமான கொள்கைகளையும் கொடிகட்டிப்பறக்கவிடுவதற்கு அரசியல் வாதிகள் தயங்கமாட்டார்கள் என்பதை தென் பகுதி அரசியல் வாதிகளின் நடவடிக்கைகள் புலப்படுத்தி நிற்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு கொடுக்கப்பட்டதை நிறுத்தத் தவறியமை காரணமாக பல்வேறு தரப்பினரால் துரோகி என அடையாளப்படுத்தப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஆற்றிய உரையையடுத்து மீண்டும் ஓரளவுக்கு நம்பிக்கையைப் பெற்றபோதும் முழுமையாக இன்னமும் அவரை நம்புவதற்குத் தயக்கமுள்ளதாகவே கருத்துகள் புலப்படுத்துகின்றன.

வேட்புமனு கொடுத்ததனால் ஜனாதிபதிக்குத் துரோகப் பட்டம் சூட்டிய தரப்பில் கணிசமானவர்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரையின் பின்னரும் கவலைகள் உள்ளன. அதேவேளை, அந்த உரைக்குப் பின்னர் ஜனாதிபதி தலைமைவகிக்கும் சுதந்திரக் கட்சியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுமுள்ள பலரும் ஜனாதிபதி தமக்குத் துரோகம் செய்து விட்டதாகப் பகிரங்கமாகக் கூறுகின்றதைக் காணமுடிகின்றது.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டுமிடத்து தலைமைப்பதவியிலிருந்து ஜனாதிபதி சிறிசேனவை அகற்றுவதற்கு தீர்மானித்துள்ளமையை கட்சியின் முக்கியஸ்தர்களிலொருவரான வாசுதேவ நாணயக் கார உறுதிசெய்துள்ளார். ஜனாதிபதிக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமை துரதிர்ஷ்டவசமானது. தாம் நான்கு தசாப்த காலமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்கான பலனாக கட்சியின் தலைமைப்பதவியை நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த ஜனாதிபதி சிறிசேன அதனை இலகுவில் விட்டுக்கொடுப்பதற்கோ தமது கட்சியினருக்கு துரோகமிழைப் பதற்கோ விரும்ப மாட்டார் என்பது ஒரு புறமிருக்க, சர்வாதிகாரப் போக்கில் முன்னகர்ந்த ராஜபக்ஷ அரசை பெரும் தியாகங்களுக்கும் உயிர் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் வீட்டுக்கு அனுப்பிய வாக்காளர்களின் எதிர்பார்ப்புகளை கிடப்பில் போட்டு விடவும் முடியாது.

தற்போதைய நிலையில் ஜனாதிபதிக்கு இருக்கும் தெரிவு என்பது இலங்கையில் இதுவரை காலத்தில் நிலவிய அரசியல் கலாசாரத்துக்கு முரணானது. அனைத்துப் பதவிகளையும் தனக்குள் வைத்துக் கொள்ள நினைக்கும் நிலையைத் தவிர்த்து எது ஜனநாயகத்தை உறுதிப்படுத்த அவசியமானதோ அதைக் காத்துக்கொள்வதற்கு சக்தியை ஒன்றுதிரட்ட வேண்டும்.

ஜனவரி-8 பெறுபேறிற்காக ஒன்றுசேர்ந்த சக்திகளைத் தக்கவைக்கவேண்டுமாயின் கட்சியைப் பற்றி சிந்திக்க முடியாது. நாட்டைப் பற்றியே சிந்தித்தாகவேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் வெற்றி என்பது தற்போதைய நிலையில் கேள்விக்கிடமானது. உச்சக்கட்ட அரசியல் பலத்தைப் பயன்படுத்தியே தோற்றவர்கள் ஆறுமாதங்களில் வென்று விடுவது எளிதல்ல. ஆனால் கடைசி நேரத்தில் எதிர்பாராத அனுதாப அலை வீசுமிடத்து எதுவும் அரசியலில் நடந்து விடலாம். அப்படி அந்தக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் ஜனாதிபதி சிறிசேன நீண்டகாலத்துக்கு ஜனாதிபதியாக இருக்கமுடியாது என்பதை தற்போது தெரிவிக்கப்படும் கருத்துகளும் நடத்தைக் கோலங்களும் கோடிட்டுக்காட்டுகின்றன.

எனவே, கட்சியைப் பற்றிய கவலைகளை விடுத்து நல்லாட்சியைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் பயன்படுத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டில் நல்லாட்சிக்கான வழி திறக்க வாய்ப்பு வருமா....?

இந்த நாட்டின் அரசியல் விவகாரங்களில் காலம் காலமாக இருந்து வரும் பாரம்பரியங் களுக்கு அமைவாக பதவியில் இருக்கும் தலைவர்கள் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதும், பௌத்த மதத்தின் மிகஉயர் பீடங் களான அவற்றின் பீடாதிபதிகளிடம் ஆசிகள் மற்றும் அறிவுரை, ஆலோசனைகள் பெறுவதும் புதிய விடய மன்று. பல்வேறு இக்கட்டான வேளைகளில் அந்தப் பெரியார்களின் ஆலோசனைகளே நாட்டைக் காப்பாற்றி இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அந்த வகையில் அண்மையில் மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் வண.திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கலதேரர் தம்மைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட முன்னாள் நீதித்துறை பிரதிஅமைச்சரும், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஒரு வேட்பாளருமான சுஜீவ சேனசிங்கவுக்கு வழங்கிய அறிவுரையும் ஆலோசனையும் அவருக்குமட்டுமல்ல அரசியலில் இறங்கியுள்ள அனைவருக்கும் பொருத்தமானவை எனக்கருதலாம். பொதுவாக, இவ்வாறான சந்திப்புகளின்போது சமயத் தலைவர்கள் வழங்கும் ஆலோசனைகளை அரசியல் வாதிகள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை.

அரசியல் என்பது மரணிக்கும்வரை மேற்கொள்ளும் ஒரு தொழில் அன்று. அவ்வாறு கருதுவது தவறான எண்ணம். மக்கள் நிராகரிப்பதற்கு முன்னர், அரசியலில் இருந்து விலகிக்கொள்வதே சரியானது என்று பீடாதிபதி கூறியுள்ளார்.

இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் ஏராளமான பௌத்த பிக்குகள் போட்டியிடுவதைப் பார்க்கின்றோம். இவர்கள் கூறும் முக்கிய விடயம் சிங்களவர்களுக்காக பேசுவதற்கும், போராடவும் அரசியலில் எவரும் இல்லை. அதற்காகவே தாம் களத்தில் இறங்கியிருப்பதாகவும் அதை நிவர்த்தி செய்வதுதான் தமது நோக்கம் என்றும் காரணம் கற்பிக்கிறார்கள்.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் போன்ற முக்கிய பதவிகளுக்கு சிங்களவர்களைத் தவிர, அதுவும் பௌத்த மதத்தவரைத் தவிர வேறு எவரும் நினைத்துப்பார்க்க முடியாது. சிங்களமும், பௌத்த மதமும் நாட்டில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவில் இந்த நாட்டின் அரசு சிங்களவர் கரங்களிலேயே இருக்கும்போது அவர்களுக்காக பேசுவதற்கு எவரும் இல்லையென்பது அபத்தமான கருத்து.

பௌத்த மதத்தைத் தோற்றுவித்தவரான புத்த பெருமானே, அரசியலை ஒரு சாக்கடையாகக் கருதி அதனைத் தூக்கி எறிந்துவிட்டு துறவியானார் என்று அறிகிறோம்.

அவர் வேற்றுமதங்களுக்கு அல்லது இன, மொழி சார் மக்களுக்கு மாறாக உபதேசித்ததாகவோ கடும் சொற்பிரயோகங்களை உதிர்த்ததாகவோ, வரலாறு இல்லை. ஆனால் இந்த நாட்டில் அது தலைகீழான நிலைக்கு சிலரால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஓர் அரசு நாட்டுக்கு நல்லது செய்யும்போது அதனைச் சகலரும் ஆதரிக்க வேண்டும். கட்சி அரசியல் பேதங்களை மறந்து ஓர் உடன்பாட்டுக்குவர வேண்டும் எனக் கூறியுள்ளார் மல்வத்த பீடாதிபதி.


நாட்டின் இன்றைய அரசியல் நிலைமைகளை மனதில் வைத்துக்கொண்டே மல்வத்த பீடாதிபதி அரசியல்வாதிகளுக்கு குறிப்பாக, மக்கள் நிராகரித்த பிறகும் பதவிக்கு வருவதற்கு பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரைச் சார்ந்தவர்களையும் குறித்தே அவர் இவ்வாறு கூறியிருப்பதாகவும் கருதலாம்.

அரசியலில் பல்வேறு நிலைகளிலும் “விதை போட்டு முளை கண்டவர்” முன்னாள் ஜனாதிபதி. ஜனாதிபதிப் பதவியை இருதடவைகள் வகித்தவர் அவர்: மூன்றாம் தடவை தோல்வியுற்றதன் பின்னர், இப்போது தம்மை தோல்வியடையச் செய்தவரின் கீழேயே செயற்பட வேண்டிய ஒரு பிரதமர் பதவிக்கு போட்டியிடுகின்றார் என்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள் ளார் மல்வத்த பீடாதிபதி.

அவரை எப்படியும் தேர்தலில் வெற்றிபெறச் செய்து பிரதமராக்கி விடவேண்டும் என்பதில் அவருடன் இருப்பவர்கள் தமக்குத் தெரிந்த உபாயங்களையெல்லாம் பிரயோகித்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் என்று கூறப்படுபவர்கள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் பின்புலமாக இருந்தவர் என்று மஹிந்த மீது குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இந்த வகைசார் சிக்கலில் இருந்து விடுபடுவது ராஜபக்ஷவுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் அரசியல் மட்டத்தில் முக்கியமான ஒரு விடயம்.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடைசியாக எடுத்துள்ள நிலைப்பாடு அவர்களுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்கமுடியாது.இந்த நிலைமையில் இருந்து அவர்கள் எவ்வாறு மீண்டெழுகிறார்கள் என்பது மட்டுமல்ல, இப்போதைய நிலைமையை நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியினர் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப்போகிறார்கள் என்பதும் வரும் நாள்களில் மிக சுவாரசியமான விடயமாக இருக்கும் என்பது சொல்லித்தெரிய வேண்டிய ஒன்றல்ல.



“இன்று நாட்டில் தொழிலாளர்கள் தமக்குரிய பிரச்சினைகளுக்கு எந்த ஒரு அரசாலும் தீர்வு காணப்படவில்லை என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.”

# இனவாதமும் புலிவாதமும் இனியும் எடுபடுமா?

வந்தியத்தேவர்

தன்னால் முழுமையாக அழித்தொழிக்கப்பட்டு விட்டதாகவும், நாடு புலிப் பயங்கரவாதத்தில் இருந்து மீட்கப்பட்டு விட்டதாகவும், தன்னை ஒரு வெற்றி வீரராகவும் காட்டிக் கொண்டு 2010க்குப் பின்னர் அதற்காக வெற்றி விழாவையும் வருடா வருடம் நடத்திக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற மீண்டும் புலிகள் தேவையாகிவிட்டுள்ளனர். அநுராதபுரத்தில் தனது தேர்தல் பரப்புரைகளைத் தொடங்கிய அவர் அதற்கு எடுத்த ஆயுதம் புலிகள். தற்போதும் புலிகளின் பயங்கரவாதம் உள்ளதாக அவர் கூறுவதன் மூலம் ஏற்கனவே புலிகளை அழித்துவிட்டதாகக் கூறியமை சிங்கள மக்களை ஏமாற்றித் தனது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்கான ஒரு பொய்யாகவே தென்படுகிறது. புலிகளை வைத்தே தனது அரசியல் வாழ்வை நிரந்தரமாக் கிக் கொள்ள அவர் தீர்மானித்து விட்டார் என்பதுதான் உண்மை. இதுவரை விகாரை விகாரையாக ஏறி இறங்கிய போதிலும் ஷிராந்தி அம்மை வேறு அவர் பிரதமராக வேண்டும் என்று வழிபாடுகளை நடத்தியபோதும் புத்தரை நம்பாமல் புலிகளை நம்பிக் களத்தில் நிற்பதுதான் அவருக்குள்ள தற்போதைய நிலைபோலும். 2005 இல் புலிகளின் ஆதரவுடனேயே அவர் வெற்றி பெற்றதாக ரவூப் ஹக்கீம் வேறு கூறியுள்ளார். புலிகள் இல்லையேல் அவருக்குப் புகலிடம் இல்லை என்பது போல் அவரது பரப்புரை அமைகிறது.

பிரதமர் கனவு அவருக்கும் ரணிலுக்கும் மட்டும்தான் என்றில்லை. நிமல் சிறிபால டி சில்வாவுடன் அமைச்சர் பௌசிக்கும் அது தொற்றியுள்ளது. ஜனாதிபதி தந்தால் நான் வாங்குவேன் என்றவாறு பௌசி தெரிவிக்க, அடுத்த பிரதமர் தொடர்பான பிரச்சினையை இப்போது ஏற்படுத்தக் கூடாது என்கிறார் நிமல். இன்றைய பிரச்சினைகளுக்குக் காரணம், மஹிந்த அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கப்படவில்லை என்பதே. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு அதற்கான ராஜதந்திர நகர்வுகளை ஜனாதிபதி மைத்திரி முன்னெடுத்திருக்க வேண்டும். மோசடிகள் குற்றச்சாட்டுக்களில் அவரது பெயரும் அடிபட்ட போதிலும் அது குறித்து எதுவும் கூறாது உடனிருந்தவர்கள் இழைத்த தவறுகளைக் கண்டும் காணாமற் விட்டு விட்டதாக ஒப்புக்கொண்டவர் இப்போது மக்கள் என்னுடன் இருக்கும்வரை எவரது குற்றச்சாட்டுக்களுக்கும் தான் பதிலளிக்கப் போவதில்லை என்று கூறியுள்ளார். குற்றச்சாட்டுக்கள் உள்ள போதும் மக்கள் தன்னை ஆதரிக்கிறார்கள் என்கிறார் போலும். உண்மையில் தங்கள் அரசியல் தலைவர்களாக, அக்கட்சித் தலைவர்களாக இருந்து இலஞ்சம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களே இருத்தல் வேண்டும் என மக்கள் விரும்புகிறார்களா? அதனால்தான் ஊழல் மோசடி களில் சம்பந்தப்பட்டவர்களையே ஐ.ம.சு.முன்னணி தேர்தல் களத்தில் இறக்கியுள்ளதா?

புலிகளின் காலத்தில் மக்கள் சுதந்திரமாக நடமாட முடிந்ததா என்பது மஹிந்தவின் கேள்வி. அவரது ஆட்சிக் காலத்தில் மக்கள் நிம்மதியாக ஒரு மூச்சு விட முடிந்ததா? நாட்டில் ஓடிய இரத்த ஆறுகள், பார்க்கும் இடமெல்லாம் புதைகுழிகள், கிறிஸ் மனிதன், காணிகள் அபகரிப்பு, பத்திரிகைகளுக்கு அச்சுறுத்தல், ஆள்கடத்தல், காணாமற் போகச் செய்யப்படுதல் என்று எத்தனை பயங்கரவாதத்துள் மக்கள் உழன்றனர். புலிகளின் காலத்தில் ஒரு பெண் நள்ளிரவிலும் கூட தனியாகச் செல்லக்கூடிய நிலை இருந்தது. அவரது காலமும் புலிகளின் காலமும் வேறுபட்டவை. புலிகள் தமது இனத்தின் விடுதலைக்காக மட்டுமே ஆயுதம் ஏந்தினர். மஹிந்த அரசு அப்படி இல்லையே. ஓர் இனத்தை அழிப்பதற்காகவே அது ஆயுதம் ஏந்தியிருந்தது. இந்த உண்மைகளை மறந்துவிட்டு அவர் பேசிக் கொண்டிருப்பதும் உடனிருப்பவர்கள் அதற்கு ஆமாம் சாமி போடுவதுமாக காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது. ஜனநாயகப் பாதையில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்த தற்போதைய மைத்திரி அரசு இன்னமும் ஓர் அடி கூட தடம் பதிக்காத நிலையில் அதனைக் கவிழ்க்கவும், இல்லாமற் செய்வதற்குமாக முயலும், இனவாதிகளின் வலைக்குள் மக்கள் சிக்கிக் கொண்டால் பின்னால் அவர்களுக்கு மீட்சி கிடையாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இனவாதமும் புலி வாதமும் இனியும் எடுபடுமானால் பாதிக்கப்படப்போவது அரசியல்வாதிகள் அல்ல. சாதாரண அப்பாவிப் பொதுமக்களே யாகும்.

கட்சித் தலைமைப் பதவியில் இருந்து மைத்திரியை நீக்கி அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என வாசுதேவ நாணயக்காரவும், ஜனாதிபதிப் பதவியில் இருந்து அகற்றுவோம் என திஸ்ஸ விதாரணவும், முகத்தைத் திருப்பிக்கொண்டு மஹிந்தவுக்கு மைத்திரி நியமனக் கடிதத்தை வழங்குவார் என உதய கம்மன் பிலவுமாக ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி அரசியல் பேசிக் கொண்டிருப்பதுதான் தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. இன்று நாட்டில் தொழிலாளர்கள் தமக்குரிய பிரச்சினைகளுக்கு எந்த ஒரு அரசாலும் தீர்வு காணப்படவில்லை என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் தலைவர்களாகவும் தொழிற்சங்கப் பிரமுகர்களாகவும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தங்களால் மட்டுமே தீர்வு காண முடியும் என்று வாய் வீரம் பேசி தொழிற்சங்க சந்தாப் பணங்களில் கட்சி நடத்திக் கொண்டிருந்த இந்த அரசியல்வாதிகள் ஒரு காத்திரமான அரசுக்கு உகந்தவர்களாக மாட்டார்கள். இலஞ்சம் ஊழல் மோசடிகளையே தமது அரசியல் இலட்சியங்களாகக் கொண்டு கோடிகளைக் குவிக்க நினைக்கும் அனைவருமே மக்களால் தூக்கி எறியப்பட வேண்டியவர்கள். தெற்கில் மட்டுமன்றி வடக்கிலும்கூட இதுபோன்ற கும்பல்கள் களத்தில் நிற்கிறார்கள். ஜனநாயகத்துக்கும் எதேச்சதிகாரத்துக்குமான இந்தத் தேர்தல் கயிறிழுப்பு ஜனநாயகக் கோட்டை விட்டுச் சிறிது சறுக்கினாலும் கூட நிலைமை என் னவாகும் என்பது கயிற்றை இழுக்கப்போகும் வாக்களர்களர்களின் பலத்திலேயே தங்கியுள்ளது. இனவாதமும் புலிவாதமும் இனி மேலும் எடுபடுமா? எடுபடாதா? என்பது இந்தக் கயிறிழுத்தல் போட்டியில் தெரிந்து விடும்.

# மஹிந்தவைப் போட்டியிட அனுமதித்த மைத்திரியின் மர்மம்

சிலோன் ருடே நாளிதழில்
உபுல் ஜோசப் பெர்னாண்டோ



மைத்திரிபால சிறிசேன அதிபராகப் பதவியேற்ற பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிறிலங்காவுக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தார். இந்தச் சந்திப்பின்போது இவர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து மோடியிடமிருந்து, தான் மீண்டும் அரசியலுக்குள் நுழைவதற்கான ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தச் செய்தி இந்திய மத்திய அரசைச் சென்றடைந்தது. மோடி சிறிலங்காவுக்கான தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியாவைச் சென்றடைந்ததும், மஹிந்தவுக்கு இவர் உண்மையில் எதனைத் தெரிவித்தார் என்பது வெளியிடப்பட்டது.


இரண்டு தடவைகள் சிறிலங்காவின் அதிபராகப் பதவி வகித்தது போதும் எனவும், தற்போது அரசியலிலிருந்து விலகிக்கொண்டமை நல்லது எனவும் மஹிந்தவிடம் மோடி தெரிவித்திருந்தார்.

தான் மீண்டும் சிறிலங்காவின் ஆட்சிபீடத்தில் அமர விரும்புவதாகவும் இதற்கு இந்தியாவின் ஆசீர்வாதத்தை எதிர்பார்ப்பதாகவும் மஹிந்த மோடியிடம் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அரசியலிலிருந்து விலகி ஓய்வெடுக்குமாறு மோடி, ராஜபக்ஷவிடம் தெரிவித்திருந்தார். மோடி, ராஜபக்ஷவுக்கு ஆலோசனை மட்டுமே வழங்கியிருந்தார். ஆனால் இதனை வெளியில் கூறினால், தான் மீண்டும் அரசியலுக்குள் நுழைந்துவிட முடியாது என ராஜபக்ஷ கருதினார்.

இதனாலேயே இவர் இந்தியாவின் ஒத்திசைவு தனக்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

சிறிலங்காவின் அரசியல் உயர்பீடத்தில் மீண்டும் அமர்ந்து கொள்வதற்கு இந்தியா தனக்கு ஆதரவளித்துள்ளதாக மஹிந்த பிரகடனம் செய்தார். இது தொடர்பில் இவர் பிரபல இந்திய ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் வழங்கியிருந்தார். இதன்மூலம் தனது இரண்டாவது அரசியல் பிரவேசத்துக்கு இந்தியர்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை ராஜபக்ஷ மேற்கொண்டார். இந்த நேர்காணலின்போது, சிறிலங்காவில் மேற்கொள்ளப்படும் சீனாவின் திட்டங்கள் இந்தியாவுக்கு எந்தவகையிலும் அச்சுறுத்தலாக அமையாது என ராஜபக்ஷ சுட்டிக்காட்டியிருந்தார்.



1962இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவால் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகள் இந்தியா மற்றும் சீனாவை ஒன்றிணைப்பதற்கான ஒரு பாலமாக அமைய வேண்டும் எனவும் தான் விரும்புவதாக மஹிந்த தெரிவித்தார். ஆகஸ்டில் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பத்தை மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பதற்கு முன்னர், இதையொத்த கருத்தொன்றை சீனக் கடற்படைத் தளபதி சாவோ, சீன ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்திருந்தார்.

இந்திய மாகடலானது இந்தியர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அதாவது இங்கு வேற்று நாட்டவர்கள் பயணிக்க முடியாது என இந்தியா கூறுவதாக சீன பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அண்மையில் சிறிலங்கா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்குச் செல்வதற்காக சீனக் கடற்படையானது, இந்திய மாகடலில் பயணம் செய்தது. இது இந்தியாவைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட பயணமல்ல. வர்த்தக மற்றும் பாதுகாப்பு சார் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான நோக்கத்தை மட்டுமே கொண்டதாகும் என சீனக் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்திய மாகடல் பிராந்தியத்தை நிலைப்படுத்துவதற்கான சிறப்புப் பங்களிப்புக்களை இந்தியா மேற்கொள்ள முடியுமே அன்றி, இது தன்க்கு மட்டுமே சொந்தமானது என இந்தியா கருதமுடியாது என சீனக் கடற்படைத் தளபதி சாவோஜி, அண்மையில் பீஜிங்குக்குச் சென்றிருந்த இந்திய ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

பூகோள ரீதியாக நோக்கில் இந்தியாவானது இந்திய மாக்கடலின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சிறப்புப் பங்களிப்பை மேற்கொள்ள முடியும். இதேபோன்று இந்திய மாக்கடல் பிராந்தியம் மற்றும் தென்னாசியப் பிராந்தியத்திலும் இந்தியா அதிக கவனத்தைச் செலுத்த முடியும். ஆனால் அனைத்துலகக் கடற்பரப்பான இந்திய மாகடல் தனக்கு மட்டுமே சொந்தம் என இந்தியா கூறுவது பொருத்தமற்றதாகும். ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளின் கடற்படையினர் இந்திய மாகடலில் சுதந்திரமாகப் பயணிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். இந்திய மாகடலில் ஏற்படுவதற்குச் சாத்தியமான மோதல்கள் தொடர்பாக அமெரிக்க வல்லுநர் ஒருவர் எச்சரித்திருந்தார். ஆனாலும் இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என சாவோ தெரிவித்துள்ளார்.

ஆனால் சில நாடுகள் இந்திய மாகடலானது தமக்கு மட்டுமே சொந்தம் எனக் கூறினால், மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என சாவோ சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிலங்காவுக்கு கடந்த ஆண்டின் இறுதியில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் பயணித்தமை மற்றும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் பாகிஸ்தானுக்கான பயணத்தை மேற்கொண்டமை போன்றவை தொடர்பில் இந்தியா தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.


ஆனாலும் இந்திய மூலோபாய வட்டங்களின் மத்தியில் சீனாவின் இத்தகைய நடவடிக்கை ஆராயப்பட்டது. எனினும் இந்த விடயத்தில் சீனா வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொண்டதாக சீன வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்விரு கடற்பயணங்களும் வழமையானவை என சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகளவிலான நீர்மூழ்கிக் கப்பல்கள் பயணிக்கும்போது நாங்கள் எமது அயல்நாடுகளிடம் இது தொடர்பில் கவலை கொள்ள வேண்டாம் எனவும் இருதரப்பு நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், அறிவுறுத்துவதாக சீனக் கடற்படைக் கல்லூரியின் ஆய்வாளர் சியாங் வெய் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மாகடலில் சீனாவின் கவனம் குவிவதற்கு அதன் வர்த்தக நோக்கம் மட்டுமே காரணமாகும் எனவும், இதன் ஊடாக முக்கிய சக்தி வளங்களை இறக்குமதி செய்ய முடியும் எனவும் சீனா கருதுவதாகவும் சாங் தெரிவித்துள்ளார்.

இந்திய மாகடலில் சீனக் கடற்படையின் பிரசன்னம் அதிகரித்துள்ளமையானது, கடற்பாதுகாப்பு மற்றும் தொடர்பாடலுக்கான கடல் வழிகளைப் பேணுவதற்காக மட்டுமே ஆகும். நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை நாங்கள் முன்னெடுக்க வேண்டும். இந்திய மாகடலில் சீனக் கப்பல்கள் பயணிப்பது தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது எனில் நாங்கள் இருதரப்பு புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் இன்னமும் கட்டியெழுப் பவில்லை எனக் கருத வேண்டும் என சாங் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனாவின் இந்த அறிக்கையானது மஹிந்தவை மீண்டும் சிறிலங்காவின் ஆட்சிப்பீடத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதைத் தெளிவாகக் காண்பிக்கின்றது. அத்துடன் சிறிலங்காவில் மேற்கொள்ளப்படும் சீனத் திட்டங்கள் ஒருபோதும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையாது என்பதையும் இதனால் இதற்கு இந்தியாவின் ஆசீர்வாதமும் கிடைக்கப்பெற வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.



மஹிந்தவினதும் – சீனாவினதும் நிலைப்பாடு ஒத்திசைவாகவே காணப்படும் அதேவேளையில், மஹிந்தவுக்கு மைத்திரி ஏன் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதியை வழங்கினார் என்பது இரகசியமாகவே உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டால் ஐ.தே.க. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசை அமைப்பதற்கான சாத்தியம் உள்ளதாக அண்மையில் முன்னாள் அதிபர் சந்திரிகாவைச் சந்தித்தபோது மைத்திரி தெரிவித்திருந்தார்.

மஹிந்தவுக்கு தேர்தல் நியமனத்தை வழங்க வேண்டும் என்பது தொடர்பில் மைத்திரியின் தீர்மானமானது புலனாய்வு சார் அறிக்கைகளை மையப்படுத்தியதாகும். இதனை மைத்திரி மக்கள் மத்தியிலும் தெரிவித்துள்ளார்.

எனினும் பயங்கரவாதப் போரை வெற்றி கொண்ட மஹிந்த, 2010இல் பொதுத் தேர்தலில் போட்டியிடும் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவேன் என்பதில் உறுதியாயிருந்தார். ஆனால் மஹிந்தவால் அதனைப் பெற முடியவில்லை.

போர் வெற்றி கொள்ளப்பட்ட நிலையில், மஹிந்த ஒரு பிரபலமானவராக மக்கள் மத்தியில் வரவேற்கப்பட்ட ஒரு தலைவராக இருந்த அக்காலப்பகுதியில், இடம்பெற்ற பொதுத்தேர்தலில் கூட மஹிந்தவால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை. இந்த நிலையில் ஐ.தே.க. நடைபெறவுள்ள தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் என்கின்ற அச்சத்தை மைத்திரிக்கு ஏற்படுத்தியது யார் என்பதே தற்போதைய வினாவாகும். புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் இவ்வாறானதொரு நகர்வை மைத்திரி முன்னெடுத்திருப்பின், எவ்வாறான ஒரு சூழலில் புலனாய்வாளர்களால் இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன என்பதை ஆராய வேண்டும்.

ஐ.தே.கவிலிருந்து விலகி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்கின்ற கட்சியை உருவாக்கிய காமினி திஸாநாயக்க, சிறிலங்காவின் அதிபராக டி.பி.விஜயதுங்க பதவி வகித்த போது மீண்டும் ஐ.தே.கவில் இணைய முன்வந்தபோது அதனை ரணில், சிறிசேன குறே போன்றவர்கள் எதிர்த்து நின்றனர். எனினும், விஜயதுங்க, காமினியைத் தேசியப் பட்டியலில் இணைத்துக் கொண்டதுடன், அவருக்கு அமைச்சுப் பதவியையும் வழங்கினார்.

காமினியை மீண்டும் ஐ.தே.கவில் இணைத்துக் கொள்வதற்கு கறுப்புப் பணம், அச்சுறுத்தல் மற்றும் Black Rist புலனாய்வுப் பிரிவு ஆகிய மூன்றுமே காரணமாகும். அதாவது Black Money, Black-mail, Black Rist ஆகிய 3Bக்களும் காரணம் எனக் கூறப்படுகிறது.

காமினி மீண்டும் ஐ.தே.கவில் இணைத்துக் கொள்ளப்பட்டால் இது தேர்தலில் வெற்றி கொள்ளும் என Black Rist புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது. இதுவரையில் அந்த விடயம் உறுதிப்படுத்தப்படவில்லை. அந்த அறிக்கைகளுக்கு முரணாக ரணில்–குறே அணி செயற்பட்டது. இதேபோன்று மஹிந்தவின் தேர்தல் நியமனம் தொடர்பிலும், பல்வேறு வதந்திகள் நிலவுகின்றன. இந்த வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லையாயினும், அரசியல் என்கின்ற விளையாட்டுப் போட்டியில் மஹிந்தவும் சீனாவும் தற்காலிக வெற்றி ஒன்றைத் தக்கவைத்துள்ளன என்பதையே தற்போதைய சூழல் உறுதிப்படுத்துகின்றது.

## நாளை

ஆடி—06
புதன்கிழமை
22.07.2015

**திதி: ஷஷ்டி**
**பி.ப. 04.30 வரை**
**நட்சத்திரம்: அத்தம்**
**பி.இ.05.10 வரை**
**சுபநேரம்:**
04.31-06.01 வரை
**இராகுகாலம்:**
12.01-01.31 வரை

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 600 | 600 | 600 |
| நண்டு | 350 | 500 | 400 | 600 | 500 | 450 |
| கணவாய் | 650 | 500 | 700 | 600 | 800 | 600 |
| பாரை | 600 | 500 | 600 | 600 | 1000 | 420 |
| சுறா | 650 | 500 | 600 | 600 | 1000 | 600 |
| சீலா | 300 | 400 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 700 | 450 | 400 | 450 | 400 | 400 |
| முரல் | 350 | 400 | 400 | 400 | 400 | - |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | - |
| கிழாக்கன் | 650 | 500 | - | 700 | 400 | - |
| ஓரா | 400 | 350 | 400 | 400 | 400 | - |
| திரளி | 250 | 300 | 220 | 300 | 100 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 100 | 300 |
| சூடை | 150 | 200 | 200 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 300 | 250 | 300 | 200 | - |
| திருக்கை | 150 | 350 | 250 | 350 | 300 | 150 |
| பாலை | 400 | 300 | 350 | 350 | 200 | - |
| வாழை | 100 | 150 | - | 200 | 400 | - |
| கொய் | 100 | 150 | 60 | 200 | 100 | - |
| மதனம் | 150 | 250 | 220 | 300 | 200 | 250 |

## மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடி

### விவேகானந்தர் சிந்தனையிலிருந்து....




உடலையும் புலன்களையும் வழிநடத்தும்போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.
சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத் தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும். இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும், பண ஆசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள்.
மதத்தின் இரகசியம் கொள்கைகளில் இல்லை. செயல் முறை யில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வதுதான் மதத்தின் முழுப் பரிமாணமாகும்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 60 | 40 | 80 | 60 | 40 | 35–4 |
| கத்தரி | 80 | 60 | 70 | 60 | 60–70 | 80 | 50 | 25 |
| கரட் | 160 | 150 | 160–300 | 140 | 200–220 | 200 | 240 | 120 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 40 | 50–60 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 90 | 80 | 70 | 80 | 80–100 | 80 | 120 | 100 |
| பாகல் | 140 | 140 | 160 | 160 | 140–160 | 160 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 160 | 100 | 120 | 80–100 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 90 | 100–120 | 100 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 140 | 150 | 180 | 160 | 130–150 | 200 | 160 | 110–120 |
| பூசணி | 40 | 40 | 30 | 30 | 25–30 | 40 | 60 | 25 |
| தக்காளி | 160 | 160 | 140 | 140 | 140–160 | 200 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 | 40–60 | 60 | 60 | 30–35 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 25 | 20 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 350 | 350 | 280 | 300 | 360–400 | 400 | 500 | 250 |
| புடோல் | 50 | 60 | 50 | 40 | 60 | 60 | 80 | 50 |
| கோவா | 90 | 80 | 80 | 80 | 80 | 100 | 100 | 50 |
| வெண்டி | 100 | 60 | 80 | 120 | 120 | 120 | 120 | 50 |
| போஞ்சி | 140 | 180 | 200 | 180 | 180–220 | 180 | 200 | 180 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 | 120 | 120–140 | 160 | 120 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 40–50 | 40–60 | 50 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80–100 | 90 | 120 | 90–100 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 50 | 50–60 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 200 | 160 | 120 | 180 | 260 | 200 | 220 | 180 |
| இராசவள்ளி | 120 | 120 | – | 140 | 100 | 160 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 200 | 120 | 100–140 | 200 | 200 | 130 |

# கத்தரிக்காயின் மருத்துவப் பயன்கள்



நிறையைக் குறைக்க விரும்புபவர்களுக்கு ஏற்ற குறைந்த கலோரியும், அதிக சத்துக்களும் கத்தரிக்காயில் அடங்கியுள்ளன. கத்தரிக்காயில் போலேட், மக்னீசியம், பொட்டாசியம், விற்றமின் பி–3, விற்றமின் பி–6, மற்றும் பீட்டா கரோட்டீன்கள் நிறைந்துள்ளன. 100 கிராம் கத்தரிக்காய் உடலுக்கு 24 கலோரிகள் ஆற்றலைத் தருகிறது. 9 சதவீதம் நார்ச் சத்து உள்ளது. கத்தரிக்காயில் விற்றமின் சி குறைவாக இருப்பதால், இது ஒரு சிறந்த வைரஸ் மற்றும் பக்ரீரியா எதிர்ப்பானாகச் செயற்படுகிறது. கத்தரிக் காயில் உள்ள பைட்டோ நியூட்ரியண்ட்டுகள் இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோலைக் குறைத்து இரத்த ஓட்டம் சீராகப் பாய உதவுகின்றன. மேலும் இந்த நியூட்ரியண்ட்டுகள் மூளையில் உள்ள நரம்பு மண்டலங் களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஞாபக சக்தியைக் கூர்மையாக வைத்திருக்கவும் கத்தரிக்காய் உதவுகிறது. கத்தரிக்காயில் நீர்ச்சத்து அதிகம் உள்ளது, இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. இதில் உள்ள மெட்டபாலிசம்ஸ்பைக் கலோரிகளை எரிக்க வல்லது, எனவே கத்தரிக்காயை அதிகம் சாப்பிட்டால் உடல் நிறை தானாகவே குறையும். அடர்நீலம் அல்லது பழுப்பு நிறக் கத்தரிக்காயின் தோலில் ஆந்தோசயானின் எனப்படும் பிளேவனாய்டு உள்ளது. இது உடல் ஆரோக்கியத்தை அதிகப்படுத்தும் நோய் எதிர்ப்புப் பொருளாகும். புற்றுநோய், முதுமை, நரம்பு வியாதி கள், உடல் எரிச்சல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத்தன்மை வழங்கும். மேலும், பைல்ஸ் என்னும் மூல வியாதியைப் போக்குவதற்கு கத்தரிக்காயின் பச்சைக் காம்புகள் பயன்படுகின்றன.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 7 | | 8 | 9 | | | |
| | | 6 | | 3 | | | 9 | |
| | | | | 4 | | | | 7 |
| | 2 | | 4 | | | | | |
| | 4 | | | 9 | | | 7 | |
| 3 | | | | | 8 | | 4 | |
| 2 | | | | 1 | | | | |
| | 6 | | | 7 | | 4 | | |
| | | | 6 | 2 | | 8 | | 3 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 1 | 4 | 6 | 8 | 2 | 3 | 5 |
| 6 | 2 | 4 | 1 | 5 | 3 | 9 | 8 | 7 |
| 8 | 5 | 3 | 9 | 2 | 7 | 6 | 4 | 1 |
| 5 | 3 | 8 | 2 | 9 | 1 | 4 | 7 | 6 |
| 4 | 9 | 2 | 8 | 7 | 6 | 1 | 5 | 3 |
| 7 | 1 | 6 | 5 | 3 | 4 | 8 | 2 | 9 |
| 2 | 6 | 5 | 3 | 4 | 9 | 7 | 1 | 8 |
| 3 | 8 | 7 | 6 | 1 | 2 | 5 | 9 | 4 |
| 1 | 4 | 9 | 7 | 8 | 5 | 3 | 6 | 2 |


**சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

# ஜூலை மாத ராசி பலன்கள்

## துலாம்



உங்கள் ராசிக்கு 6 இல் கேதுவும் 8 இல் புதனும், உலவுவது சிறப்பாகும். இதர கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக இல்லாததால் எதிலும் விசேடமான நன்மைகளை எதிர் பார்க்க இயலாமல் போகும். அக்கம் பக்கத்தாராலும், உடன் பணிபுரிபவர்களாலும் தொல்லைகள் சூழும். வீண்வம்பு வேண்டாம். பேச்சிலும் செயலிலும் நிதானம் தேவை. பயணத்தின்போது பாதுகாப்பு அவசியமாகும். புதிய முயற்சிகளை ஒத்திப்போடுவது நல்லது. பொருளாதார நிலை சாதாரணமாகவே காணப்படும். சிக்கனம் தேவை. கண், கால் சம்பந்தமான உபாதைகள் சிலருக்கு ஏற்படும். நீண்ட நாள்களாக நினைத்திருந்த காரியங்கள் இப்போது வெற்றி பெறும். பண நடமாட்டம் கூடும். பெண்களாலும், வாழ்க்கைத்துணைவராலும் அனுகூலம் ஏற்படும். தந்தை நலம் சீராகும். ஆடை, அணிமணிகளின் சேர்க்கையோ, அவற்றால் ஆதாயமோ கிடைத்துவரும். எண்ணங்களில் மலர்ச்சி ஏற்படும். முயற்சி பலிதமாகும். பொன்னும் பொருளும் சேரும். மன உற்சாகம் பெருகும். போட்டிகளில் வெற்றி கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். தனவந்தர் சகாயம் கிடைக்கும். தெய்வப் பணிகளை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். உடன் பிறந்தவர்களாலும், பிள்ளைகளாலும் வாழ்க்கைத்துணை வராலும் அனுகூலம் உண்டாகும். பதவி உயர்வு, இடமாற் றம், சம்பள உயர்வு ஆகியவை கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தியைக் காணலாம். பல துறைகளில் ஈடுபட்டுப் பயன் பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். சித்திரை, சுவாதி நட்சத்தி ரக்காரர்களுக்கு அனுகூலமான மாதமிது.



**தொழிலாளர்களுக்கு:**

தொழிலில் உழைப்புக்கு ஏற்ற வருமானம் நிச்சயம் கிடைக்கும். சூரியன், சுக்கிரனால் நல்ல வளர்ச்சி உண்டாகும். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பான முன்னேற்றம் காண்பர். அரச பணியாளர்களது கோரிக்கை எளிதில் நிறைவேறும். சக பணியாளர்களது ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்கள் அதிக வளர்ச்சியை எதிர்நோக்கலாம். ஆசிரியர்களின் அறிவுரையால் கல்வியில் வளர்ச்சி ஏற்படும். புதன் சாதகமாக இருப்பதால் போட்டியில் வெற்றி கிடைக்கும்.

**பெண்களுக்கு:**

பெண்கள் எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். கணவரின் அன்பு கிடைக்கும். புத்தாடை, அணிகலன் வாங்கலாம். விருந்து, விழா என சென்று வருவீர்கள்.

**அதிர்ஷ்ட எண்கள்:** 1, 7, 9

**அதிர்ஷ்ட நிறம்:** மஞ்சள்,பச்சை, செந்தூரம்

**பரிகாரம்:** ஏழைகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். சனிக்கிழமை பெருமாள், ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும். முருக வழிபாடு முன்னேற்றம் தரும்.

## விருச்சிகம்



உங்கள் ராசிக்கு 9 இல் குருவும் சுக்கிரனும் 11 இல் ராகுவும் உலவுவது விசேடமாகும். குடும்ப நலம் சீராக இருந்துவரும். பிள்ளைகளாலும் வாழ்க்கைத்துணைவராலும் அளவோடு நலம் ஏற்படும். பணப் புழக்கம் அதிகரிக்கும். நல்லவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். தெய்வ தரிசனமும் சாது தரிசனமும் கிடைக்கும். கூட்டுத் தொழில் ஓரளவு இலாபம் தரும். பயணம் சம்பந்தமான துறைகளால் ஆதாயம் கிடைத்து வரும். பிற மொழி, மத, இனக்காரர்கள் உதவுவார்கள். அயல்நாட்டுத் தொடர்புடன் செய்யும் வர்த்தகம் இலாபம் தரும்.

மாணவர்களது நிலை உயரும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடிவரும். தொழில் சம்பந்தமான பிரச்சினைகள் தலைதூக்கும். குடும்ப நலம் சீராகும். எதிர்ப்புக்கள் குறையும். புதிய சொத்துக்கள், பொருள்கள் வாங்க வழிபிறக்கும். வீடு, வாகனப் பராமரிப்புக்களை மேற்கொள்வீர்கள். தெய்வத் திருப்பணிகளில் ஈடுபாடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பால் நலம் கூடும். பிரச்சினைகள் குறையும். அரசியல், நிர்வாகம், பொறியியல் சம்பந்தமான துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புடன் செயற்பட்டால் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம். எந்தக்காரியத்திலும் அவசரப் படாமல் நிதானமாக யோசித்து ஈடுபடுவது அவசியமாகும். அனுஷ நட்சத்திரக் காரர்களுக்கு சுபபலன்கள் கூடும் மாதமிது.

**தொழிலாளர்களுக்கு:**

தொழில் ரீதியான வெளியூர் பயணம் வெற்றி பெறும். பணியாளர்கள் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். சிலர் திடீர் இடமாற்றத்தைச் சந்திக்கலாம். மாத பிற்பகுதியில் புதனின் பலத்தால் சிறப்பான பயன்கிடைக்கும்.வீண் அலைச்சல்,வேலைப் பளு குறையும். சக ஊழியர்கள் மிகவும் ஆதரவுடன் இருப்பர். அலுவலகத்தில் உங்களுக்குத் தனி மதிப்புப் பிறக்கும்.

**விவசாயிகளுக்கு:**

விவசாயம் சிறப்படையும். மானாவாரிப் பயிர்கள் நல்ல விளைச்சலைக் கொடுக்கும். கால்நடை மூலம் வருவாயைப் பெறலாம்.

**பெண்களுக்கு:**

பெண்கள் ஆடம்பரப் பொருள் வாங்குவர். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். சந்தோஷ அனுபவம் உண்டாகும்.

**அதிர்ஷ்ட எண்கள்:** 6, 8

**அதிர்ஷ்ட நிறம்:** வெள்ளை, சிவப்பு

**பரிகாரம்:** வியாழன் அன்று தட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள். பிரதோஷ தினத்தன்று சிவனுக்கும், நந்தீஸ்வரருக்கும் பால் அபிஷேகம் செய்து வழிபடுங்கள்.

# சிறந்த பெற்றோராக இருப்போம்!

பிள்ளைச் செல்வமே பிற செல்வங்கள் யாவற்றினும் சிறந்த செல்வம் எனக் கூறுகிறது வள்ளுவம். பெற்றோர் என்ற சொல்லுக்கேற்ற தகுதி படைத்தவர்களாகவே பிள்ளைகளைப் பெற்ற தாய் தந்தையரும் வாழ்ந்து வந்துள்ளார்கள். குழந்தைப் பேற்றுக்குத் தகுதியுடையவர்கள் இவர்கள் தாம் என்ற வரைமுறைகளை வகுத்திருந்தார்கள் அன்றைய சான்றோர்கள். வயது வந்த இளைஞனும், பருவ மங்கையும் தாயும் தகப்பனும் ஆவதற்குரிய பக்குவத்தைப் பெற்றுள்ளார்கள் என்று அறிந்த பிறகே அன்றைய நாள்களில் திருமண ஏற்பாடுகளைச் செய்தார்கள். தன்னைச் சார்ந்துள்ள தனது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் முதலானவர்களைப் பேணிக் காக்கும் குடும்பப் பொறுப்புணர்வு, பொருளீட்டும் முயற்சி, பிறருக்குச் சான்றாக விளங்கும் தலைமைப் பண்பு, சிக்கல்கள் சவால்களை எதிர்கொண்டு சமாளித்து வெற்றி காணும் சாதுரியம், துணிவு, தனது நற்பண்புகளைத் தமது பிள்ளைகளக்குப் பயிற்றுவிக்கும் நல் ஆசான் தகுதிகள் வாய்க்கப் பெற்றுள்ள ஆண் மகனே இல்லற வாழ்வுக்கு ஏற்றவன் என்பது அன்றையச் சான்றோரின் முடிவு.

குடும்பத்தை நடத்தும் பொறுப்புணர்வு, குடும்பத்தில் உள்ள அனைவரையும் அரவணைத்துச் செல்லும் சகிப்புத் தன்மை, மற்றும் தாய்மையாவதற்குரிய (உடல், உள்ளம், இரண்டிலும்) பக்குவ நிலை பெற்றுள்ள மங்கையர்களைத் தாம், மணவாழ்வுக்குத் தகுதி பெற்றவர் களாக வரையறுத்திருந்தார்கள். பிள்ளை களைப் பெறுவதனால் மட்டும் பெற்றோர் ஆகாமல், தமது நற்பண்புகளைப் பிள்ளை களுக்கு ஊட்டி வளர்ப்பவர்களே பெற்றோர் என்ற சொல்லுக்கு ஏற்புடையவர்கள் ஆவர் என்ற நமது முன்னோர்களது கருத்து மறுப்புக்குரிய தன்று.

நற்பண்புகளைத் தாம் பெற்றுக்கொள்வதுடன் குழந்தைகளுக்கும் ஊட்டும் பெற்றோர் மிக மிகக் குறைவு. மாலை 5 மணியிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் கற்சிலை களாக முடங்கும் பெற்றோர், தமது சிறார்கள் அருகிலிருக்கவே திரைப்படக் காட்சிகளில் மெய் மறந்து லயித்துக் கிடப்போர், குழந்தைகளின் நெருக்கடிகளிலிருந்து விலகி நிற்க அக்குழந்தைகளைத் தொலைக் காட்சிப் பெட்டிகளின் முன் சிறை வைத்துக் கணினிப் பெட்டிக்குள் மூழ்குவோர் என இத்தகைய அவலங்களைக் காணலாம்.


இந்தச் சீரழிவுக்கெல்லாம் முழுக்க முழுக்கக் காரணமாக இருப்பவை ஊடகங்கள் மட்டுமே என்று சொல்வதில் அர்த்த மில்லை. இளைஞர்களும் பாலியல் உணர்வு பற் றிய சிந்தனையின்றியே மனக்கட்டுப்பாடு களுடன் வாழ்ந்தனர். நாகரிக வளர்ச்சி, பழக்க வழக்கங்கள், உணவு முறைகள் முதலான வாழ்வியல் மாற்றங்களால் பெண்களின் பருவ வயது படிப்படியாகக் குறைந்து தற்போது பத்து வயதிலேயே பூப்பெய்தும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

பிள்ளைகளைப் பெறுவதால் மட்டுமே பெற்றோர்களாகும், முதிர்ச்சியில்லாத ஆண்கள், பெண்களிடம் வளரும் குழந்தைகள் எப்படி நல்ல ஆரோக்கியமான வளர்ச்சியை அடைவர்? அப்பிள்ளைகளிடம் நற்பண்புகளை எதிர்பார்ப்பது நமது தவறல்லவா? போதிய அளவில் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி அமைவது சாத்தியமாகாது. ஒரு தேசத்தின் பலம் ஆக்கபூர்வமான இளைஞர்களும் மகளிரும் தாம். ஆற்றல் மிக்க சந்ததியினரை இழந்து கொண் டிருப்பது நாட்டின் சாபமல்லவா? நன்மக்களைப் பெற்றுள்ள தாய் தந்தையரே பெற்றோர். பெற்றோருக்கான சகல தகுதிகளைப் பெறுவதுடன் நன்மக்களை நமது தேசத்துக்குத் தரும் பெற்றோராக ஆக முயல்வோம். பெற்றோர் என்ற சொல்லுக்கான முழுமையான தகுதிகளையும், பிள்ளைகளைப் பெறும் தாய் தந்தையர் பெற்று வளர்க்கட்டும். தம்மினும் தம் மக்கள் அறிவுடையவர்களாகவும் நற்பண்பினராகவும் வாழ்வது பெற்றோருக்குச் சிறப்பும் பெருமையும் அல்லவா?




# வர்ணம் தீட்டலாம் வாங்க





# கேகாலை





இலங்கையின் சபரகமுவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு நகரம் கேகாலை ஆகும். இது கேகாலை மாவட்டத்தின் தலை நகரமாகும். கொழும்பு – கண்டிப் பெருந்தெருவில், கொழும்பிலிருந்து 78 கிலோமீற்றர் தூரத்திலும், கண்டியிலிருந்து 40 கிலோமீற்றர் தூரத்திலும், இது அமைந்துள்ளது. இலங்கையின் காரிய படிவுகள் எனும் போகலை சுரங்கம் இந்த நகரத்தின் அருகில் காணப்படுகிறது. கேகாலை மத்திய மலைநாடு என அழைக்கப்படும். இது இலங்கையின் புவியியல் பிரிவில் அமைந்துள்ளது. இங்கு வருடாந்த சராசரி வெப்பநிலை 26 பாகை செல்சியஸ் ஆகும். பெரும்பாலான மழைவீழ்ச்சி தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக்காற்று மூலம் கிடைக்கிறது. இது சிங்கள இனத்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நகரசபை அந்தஸ்துள்ள நகரம் ஆகும். இங்குள்ள மக்களில் பெரும்பானமையினர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவராவர். இங்கு நெற்பயிர்ச் செய்கை, மரக்கறிச் செய்கை முக்கிய இடத்தை பெறுகிறது. மேலும் தேயிலை, இறப்பர், தென்னை பெருந்தோட்டங்களும் காணப்படு கிறது. இது 573 கிராமசேவகர் பிரிவுகளையும், 11 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

# பணம் மாற்றுகிறதா குணத்தை

ஆற்றங்கரையோரமாய் நடந்து கொண்டிருந்த ஒருவரின் சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயம் ஒன்று தவறிக் கீழே விழுந்தது. அது அந்த இடத்தில் இருந்த தவளையொன்றின் உடல் மீது விழுந்தது. புதிதாக ஒன்று கிடைத்த சந்தோஷத்தில், உடனே அந்த நாணயத்தை எடுத்துக்கொண்டு ஆனந்தமாய்த் துள்ளிக் குதித்து ஆடியது அந்தத் தவளை. அந்த நேரத்தில் அந்த வழி யாக வந்த யானை ஒன்று, தவளையைக் கண்டு கொள்ளாமல் தாண்டிச் சென்றது. இதைப் பார்த்த தவளைக்குக் கடுங்கோபம் வரவே, யானையே, என்னைப் பார்க்காமல் போகிறாயே, உனக்கு அவ்வளவு ஆணவமா? என்று கேட்டது. தவளையின் அன்றைய நடத்தை யானைக்கு வியப்பாக இருந்தது. என்னைக் கண்டாலே விலகி ஓடும் தவளை இன்று இவ்வளவு தலைக் கனத்துடன் பேசுகிறதே என்று நினைத்து கீழே குனிந்து பார்த்தது யானை. ஒரு ரூபாய் நாணயம் ஒன்று தவளைக்கு அருகில் இருந்ததைக் கண்டது. ஓஹோ... இதுதான் தவளையின் கர் வத்துக்குக் காரணமா என்று நினைத்து, தவ ளையே, இந்த நாணயம் உனக்குக் கிடைத்ததால் தான் இப்படிப் பேசுகிறாயோ? என்று சொல்லிச் சென்றது யானை. மனிதரிடமிருந்து பணத்தைப் பிரிப்பது குணம். மனிதரிடமிருந்து குணத்தைப் பிரிப்பது பணம். பணம் மாற்றுகிறதா குணத்தை! இல்லை, குணம் மாறுகிறதா பணத்தால்!





# வியத்தகு ஆற்றல்



பீர்பாலின் நுண்ணறிவும், சமயோசித ஆற்றலும், தீராத பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அவருடைய மதி நுட்பமும் ஏற்படுத்திய புகழ் உலக நாடுகளிலும் பரவியது. பாரசீக மன்னர் பீர்பாலின் மதியூகம் பற்றிக் கேள்விப்பட்டார். வியத்தகு ஆற்றல் படைத்த அந்த மனிதரை நேரில் காண ஆர்வம் கொண்டார். பீர்பாலைத் தனது நாட்டுக்குச் சிறப்பு விருந்தினராகச் சில நாள்கள் அனுப்பி வைக்குமாறு அக்பர் மகா சக்கர வர்த்திக்குப் பாரசீக மன்னர் கடிதம் எழுதிக் கேட்டுக் கொண்டார். அதனை ஏற்றுக் கொண்ட அக்பர், பாரசீக மன்னருக்குச் சில பரிசுப் பொருள்களை பீர்பாலிடம் கொடுத்து அந்த நாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு பீர்பாலுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. பீர்பாலின் மதியூகத்தைக் காண விரும்பினார் பாரசீக மன்னர். மறுநாள் பீர்பால் அரசவைக்கு அழைத்து வரப்பட்டார். அதுவரை பாரசீக மன்னனை பீர்பால் நேரில் கண்டதில்லை. அங்கு ஐந்து ஆசனங்கள் போடப் பட்டிருந்தன. ஐந்திலும் ஒரே மாதிரியான முகத்தோற்றம் கொண்ட ஐந்து பேர் அமர்ந் திருந்தனர். அவர்களில் உண்மையான பாரசீக மன்னர் யார் என்பதை உடனடியாக பீர்பாலால் கண்ட றிய முடியவில்லை. ஐந்து பேரையும் நன்றாக உற்றுப் பார்த்தார். அவர்களில் மையமாக அமர்ந்திருந்தவர் முன் சென்று தலை வணங்கி, "மாமன்னரே! உங்களைக் காண்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார். இதனைக் கேட்டு வியந்த பாரசீக மன்னர் பீர்பாலே, என்னை எப்படி அடை யாளம் கண்டு கொண்டீர்? என்று கேட்டார். அரசே, தங்களைத் தவிர மற்ற நால்வரின் பார் வையும் உங்கள் மீதே இருந்தன. தாங்கள் மட்டுமே என் னைப் பார்த்தீர்கள். அதனைக் கொண்டுதான் தங் களைக் கண்டறிந்தேன் என்றார் பீர்பால். பாரசீக மன் னர் பீர்பாலின் அறிவாற்றலைக் கண்டு பேருவகை அடைந்து பரிசுகள் அளித்துப் பாராட்டினார்.




சரவணை, தேவபுரம்

**அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில்**

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்-2015**

கொடியேற்றம் : 22.07.2015 புதன்கிழமை காலை 9.10 - 10.22 மணி
தேர்த்திருவிழா : 31.07.2015 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணி
தீர்த்தத்திருவிழா : 01.08.2015 சனிக்கிழமை மு.ப 10.35 -12.00 மணிவரை
திருக்கலியாணத் திருவிழா : 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி

நாளை (22.05.2015) புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். அடியார்கள் அனைவரும் எம்பெருமானுக்குரிய பூஜைத் திரவியங்களுடன் வருகைத் தந்து வேலவப் பெருமானைத் தரிசித்து அருளாசிகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினரும்,
மஹோற்சவ உபயகாரர்களும்

(63124)(10.6)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு**

நல்லின 45 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.

தொடர்பு:-077 424 4365


**மணமக்கள் தேவை**

பெண் -யாழ் .இந்து கௌரவகுடும்பம் 1988.03.01 நட்சத்திரம் பூசம்(4), செவ்வாய் 1இல் கிரகபாவம் 56, கல்வியியல்கல்லூரி முடித்தவர். ஆசிரியை (விஞ்ஞானம்)5'5'', வெள்ளை, எதிர்பார்ப்பு - டாக்டர், இஞ்சினியர், பட்டதாரி

ஆண் - யாழ் .இந்து கௌரவகுடும்பம் 1984.05.11 அத்தம்1, செவ்வாய் 12இல், 28பாவம்,A.L, AAT, Hard ware Engineering அபிவிருத்தி உத்தியோகத்தர் எதிர்பார்ப்பு- அழகிய அரச உத்தியோகப் பெண்.

077 899 6281

**கண்ணீர் அஞ்சலி**



சண்டிலிப்பாய் சமநல
சேவைகள் நிலையத்தில்
இலிகிதராக கடமையாற்றும்
திருமதி றஞ்சிதமலர் சச்சிதானந்தனின்
அன்புக் கணவர்
**செல்லையா சச்சிதானந்தன்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்
பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
சண்டிலிப்பாய் சமநல
சேவைகள் நிலைய சமூகம்.


# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2015.08.17

## உடற்றகுதியீனம் உள்ளவர்களால் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 83(4)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக ஏவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரத திணைக் களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொது போக்குவரத்து சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய்வர முடியாதவராகவிருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேட்பாள ரொருவரல்லாத வேரொருவரோ விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

02. இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாள்களுக்கு முன்னதாக அதா வது 2015 ஆகஸ்ட்09 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவிக்குமாறு சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவை யொன்றாகு மென்பதோடு தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடை ந்தால் இந்நோக்கத்திற்கென அந்நபருக்கு விசேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக்கொள்ளவதற்கு உத்தரவுப்பத்திரத்தை விநியோகிக்கலாம்.

03 விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடற்றகுதியீன முற்றிருப்பதன் தன்மையை விவரித்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திர மொன்றின் மூலம் தமது விண்ணப் பத்தை உறுதிப்படுத்துவாரெனில் அதற்கான முடிவை மேற்கொள்ள தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவியாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறும் ஒருவர் அரசாங்க வைத்தியரிடம்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியரொருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினைக் கட்டணமேதுமின்றிப் பெற்றுக் கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட் டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

04. 2 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு இதற்கென இத்துடனுள்ள மாதிரிப்படிவத்திற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணபப்பத்திரங்களை உரிய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு (மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்) அல்லது உதவித்தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2015.07.21

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்.

மாதிரி

## பாராளுமன்ற தேர்தல் 2015.08.17 1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம் 83(4)(ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கான உத்தரவுப் பத்திரமொன்றிற்கென உடற்றகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்.

தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு

1) உடற்றகுதியீனம் உள்ளவரின் விவரங்கள்

(அ) முழுப்பெயர் : ..............................

(ஆ) அஞ்சல் முகவரி : ..............................

(இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு வாக்கெடுப்பு பிரிவு : வாக்கெடுப்பு மாவட்டம் தொடர் இலக்கம் (தெரியுமாயின்)

..............................

..............................

2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான ஒரு விவரம் .

..............................

3) உடற்றகுதியீனம் உற்றவருக்காக வேறெவராலும் விண்ணப்பப் படிவம் அனுப்பப்படுமாயின்அவரது பெயரும் முகவரியும்

..............................

..............................

4) இவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின் / பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ ஆயுர்வேத வைத்தியரொருவரின் /தனியார் வைத்தியர் ஒருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

வைத்தியரின் பெயர்

..............................

பதிவிலக்கம்

..............................

5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2ஆம் பந்தியில் விவரிக்கப் பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு/ உடற்றகுதியீன முற்றுள்ள மேலே பெயர் காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்கு வரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதி மூலம் வாக்களிக்கப் போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்


6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குப்போய் வருவதற்கென நான்/ உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதேனுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

..............................
திகதி

..............................
உடற்றகுதியீனமானவரின்/அவருக்காக விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

## மரண அறிவித்தல்

### நடேசு ஜெயநேசன்



பிறப்பு 04.11.1969 இறப்பு 18.07.2015

யாழ் சுன்னாகம் மயிலணியை பிறப்பிடமாகவும் சுவிஸ் Jura வை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு ஜெயநேசன் 18.07.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசு மற்றும் சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரமலை மற்றும் ராஜேஸ்வரி தம்பதிகளின் மூத்த மருமகனும் சசிகலாவின் அன்புக் கணவரும் சாரங்கா, கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலரஞ்சனா(இலங்கை), செல்வராணி(இலங்கை), குகநேசன்(லண்டன்), திருச்செல்வம்(சுவிஸ்), சுசிலா(டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிந்துஜா(சுவிஸ்), கபில்(இலங்கை), டயூ(இலங்கை), நிலக்சி, தாரகா, கோகுலன்(டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் மகேந்திரம்(இலங்கை), சிவநேசன்(சுவிஸ்), செல்வரஜனி(லண்டன்), விஸா(சுவிஸ்), கண்ணதாசன்(டென்மார்க்), சுபாஸ்கரன்(இலங்கை), சிறிதரன்(லண்டன்), ராஜேஸ்கண்ணா, பிரசாந், ஜீவா, சிவாகரன்(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பரத்(சுவிஸ்), சோபினியா, சுருதியா, சர்மியா(லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2015) புதன்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்.
077 112 6064

(63128)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் சலசாதேவி அரியபுத்திரன்



தோற்றம் 17.02.1945

மறைவு 21.06.2015

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று [21.07.2015] செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.9, மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய்.
021 321 5075, 077 208 9836

குடும்பத்தினர்.

## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

குழந்தைகளைப் பராமரிப்பதற்கான விடுதி மேற்பார்வையாளர் பெண்கள் மட்டும்.

தகைமைகள் :

1) க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை
2) அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.
3) வயதெல்லை - 35-65
4) விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவ நெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சம்பளத்துக்காக மட்டும் வேலை செய்பவராக இல்லாது சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு கடமை புரிவோர் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு : சம்பளம் மாதம் ரூபா 18 000/= இற்கு குறையாது வழங்கப்படும். கடமையின் ஈடுபாட்டிற்கேற்ப பின்னர் அதிகரிக் கப்படும்.உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.

சாரதி : தகைமைகள் :

1) சகல வாகனங்களும் செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப் பத்திரம் (Heavy Vehicle License - ADவகை) கொண்டிருத்தல்
2) மலைநாடு, கண்டி, கொழும்பு உட்பட இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் பஸ் உட்பட கனரக வாகனம் செலுத்தக்கூடிய அனுபவமும் சேவை மனப்பான்மையும்
3) விண்ணப்பதாரர் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் 60 வயதுக்குட்பட்டவராகவும் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் என்பனவும் சாரதி உடைகளும் இலவசமாக வழங்கப்படும்.

மிருதங்க வித்துவான்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மிருதங்க வித்துவான் பட்டத்தினைப் பெற்றிருத்தல் அல்லது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது வட இலங்கை சங்கீத சபையினால் வழங்கப்பட்ட ஆசிரியர் தர சான்றிதழ் கொண்டிருத்தல் வேண்டும். ஆண்பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு : சம்பளம் மாதம் ரூபா 18 000/= இற்கு குறையாது வழங்கப்படும். கற்பித்தலின்திறனுக்கேற்ப பின்னர் அதிகரிக் கப்படும்.உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்ப முடிவு திகதி 28.07.2015

குறிப்பு : மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் சகலரும் கிழமை நாள்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு ஆகிய நாள்களிலும் பணியாற்ற வேண்டும். நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்டவர்கள் மட்டும் தங்களின் சுயவிவரமடங்கிய விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 28.07.2015இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி
தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி. தொலைபேசி இல - 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி - rasa46@yahoo.com

# ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் வாக்காளர் அட்டை விநியோகம்

கொழும்பு, ஜூலை 21

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் எதிர்வரும் 24ஆம் திகதி உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்படவுள்ளது எனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.


தபால் மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைத்து ஆசிரியர்களும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி வாக்களிக்கவுள்ளனர். ஏனைய அரச உத்தியோகத்தர்கள் ஓகஸ்ட் மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் தத்தமது அலுவலகங்களில் வாக்களிக்கவுள்ளனர்.

வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 29ஆம் திகதி தபாலகங்களிடம் கையளிக்கப்படும் என்றும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வாக்காளர் அட்டைகள் தபால் உத்தியோகத்தர்களினால் விநியோகிக்கப்படும் என்றும் தேர்தல் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (த)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை அருள்பிரகாசம்

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
(ஓய்வுபெற்ற புள்ளிவிவரவியலாளர்யாழ் மாவட்ட செயலகம்)



மாதகல் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் உடையார் வளவு புன்னாலைக் கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை அருள்பிரகாசம் நேற்று (20.07.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி கோமதி அருள் பிரகாசத்தின் (ஆசிரியை புன்னாலைக் கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்) அன்புக்கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் அம்பிகைப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் கலைவாணி, செந்தமிழ்ச்செல்வி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் இராசம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற திருமுருகன், திருமதி சாந்தி செல்வராசா, கணேஸ்வரன், புவீந்திரன், இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2015) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
கோமதி அருள்பிரகாசம்(மனைவி)
021 221 3755

(63135)

# தேர்தல் சட்டங்களை மீறுகின்றார் ரணில்

### சுசில் பிரேமஜயந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 21

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு மீது பிரதமர் அழுத்தங்களைப் பிரயோகித்து அரசியல் இலாபங்களை ஈட்ட முயற்சிப்பதாகவும் அவர் இதன்போது குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் எதிரிகளை நெருக்குதல்களுக்கு உள்ளாக்கும் நோக்கில் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினை பிரதமர் பயன்படுத்தி வருவதாகவும் அவர் இதன்போது குற்றம் சுமத்தியுள்ளார்.


நாட்டில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு விசாரணைகளை நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் நோக்கில் விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### நாகன் தம்பிஐயா



பிறப்பு 1943 * 08 * 24

இறப்பு 2015 * 07 * 19

யாழ். செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பலாலி வீதி 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் தம்பிஐயா 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன்-சின்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவராசா-அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சரோஜினியின் அன்புக் கணவரும் உதயலக்ஸ்மன்(கனடா), உதயசீலன்(கனடா), உதயராஜ்(ஜேர்மனி), பிறேமலதா, உதயறூபன்(லண்டன்), உதயகீதன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லையா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவானந்தராசா(லண்டன்), சிவதாஸ்(கனடா) காலஞ்சென்றவர்களான பத்மாவதி, கருணதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதாயினி, லதா, வலேனி, நீலலோஜினி, பிரியதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜந், கிருஷியா, மார்சியோ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தொடர்பு :-
சரோஜினி(மனைவி)
021 222 9001

(63127)

தகவல் :-
குடும்பத்தினர்.

# பேரணி நடத்திய மாகாண சபை உறுப்பினருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஜூலை 21

பொலிஸாரின் உத்தரவை மீறி பண்டாரகமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பேரணி சென்ற பண்டாரகம சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான சந்திரரத்னவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆற்றப்பட்ட விசேட உரைக்கு எதிராகப் பதாகைகள் மற்றும் கட் அவுட்களுடன் பேரணியாகச் சென்ற போது. அவ்வாறு பேரணி நடத்தவேண்டாம் என்று பொலிஸார் உத்தர விட்டுள்ளனர்.

அந்த உத்தரவையும் மீறியே பேரணி நடத்தப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் பேரணிகள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார். சட்டத்தை மீறி அவ்வாறு பேரணிகள் நடத்தினால், அதி உச்ச பலத்தை பயன்படுத்த முடியும் என்றும் துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

# கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு ஜப்பான் கப்பல்கள்

கொழும்பு, ஜூலை 21

நல்லெண்ண பயணத்தின் அடிப்படையில் ஜப்பானின் இரண்டு கடற்படைக் கப்பல்கள் அகிசூகி, சவாகிரி ஆகியன கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. வருகை தந்த கப்பல்களையும் அலுவலர்களையும் வரவேற்ற இலங்கைக் கடற்படையினர், மற்றும் ஜப்பான் தூதரகத்தினர், அதனைத் தொடர்ந்து அவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர் என கடற்படை ஊடகப்பிரிவு தகவல் தெரிவித்துள்ளது.

அத்துடன் எஸ்கோர்ட் பிரிவின் கடற்படைத் தலைவர் புரோஷி ரொஜோசிமி கப்பல்களின், கட்டளை அதிகாரிகள், கடற்படைத் தலைவர் யசுஹார் அசோ மற்றும் ருசோசுயீ சற்றோ கொண்ட குழுவினர் மேல்மாகாண கட்டளைத்தளபதி அட்மிரல் தயானந்த நாணயக்காரவுடன் கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (த)




நீர்வேலி, வாய்க்காற்தரவை

முத்த விநாயகர் தேவஸ்தானம்

விநாயகர் புகழ் இறுவெட்டு வெளியீட்டு விஞ்ஞாபனம்

21.07.2015 செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணி

இடம் :- ஆலய மண்டபம்

விநாயகர் அடியார்களே, நிகழும் மங்கலகரமான மன்மத வருடம் ஆடிமாதம் 5ஆம் நாள் (21.07.2015) செவ்வாய்க்கிழமை மங்கலகரமான அமிர்தசித்த யோகமும், மங்களவாரமும் கூடிய நன்நாள் அன்று முன்னிரவு 7.00 மணியளவில் விநாயகர் ஆலய மண்டபத்தில் வரம்தரும் அருளோசை எனும் இறுவெட்டினை வெளியிடத் திருவருள் கைகூடியுள்ளது. அவ்வமயம் அடியார்கள் வருகைதந்து விழாவில் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் பெருமானின் திருவருள் பற்றி தென்னிந்திய முன்னணிப் பாடகர்களான சீர்காழிசிவசிதம்பரம், உன்னிமேனன் மற்றும் பிரபல பாடகர்களால் பாடப்பட்ட

"வரம்தரும் அருளோசை"

ஆலயதர்மகர்த்தாக்களும்,

க.கணபதிப்பிள்ளை குடும்பத்தினரும்

(63131)(10.6)



உ

யாழ்-வரணி, குடமியன்
அருள்மிகு ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த
மஹோற்சவ விஞ்ஞாபனம் 22.07.2015

ஆதிசிவன்அடியார்களே!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான மன்மத வருஷம் ஆடி மாத பௌர்ணமியை முன்னிட்டு 22.07.2015 ஆடி 6ஆம் நாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினம் உற்சவம் இடம்பெறும். மறுநாள் பூங்காவனம்.

தினசரி உற்சவம்

| காலை | மாலை |
|---|---|
| காலை 9.00 மணிக்கு கும்பபூஜை | மாலை 6.30 மணிக்கு |
| மு.ப 10.30 மணிக்கு மூலஸ்தான பூஜை | மூலஸ்தான பூஜை |
| மு.ப 11.30 மணிக்கு வசந்த மண்டப பூஜைசுவாமி உள்வீதி வலம் வருதல் | இரவு 8.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை |
| பி.ப ஒரு மணிக்கு அன்னதானம். | சுவாமி உள்வீதி வெளிவீதி வலம் வருதல் |

30.07.2015 வியாழக்கிழமை தேர்த்திருவிழா
மு.ப 10.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.

31.07.2015 வெள்ளிக்கிழமை தீர்த்தம் மு.ப 10.30 மணிக்கு
01.08.2015 சனிக்கிழமை திருக்கல்யாணம் பூங்காவனம்
02.08.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு வைரவர் மடை

சிவஸ்ரீ கதி.இராமலிங்க ஐயா ஆசியுடன் ஆலய பிரதிஷ்டா உற்சவ குரு தென் இந்திய பயிற்சி குருமணி சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக் குருக்கள்

குடமியன்
வரணி.

(c 11901)

ஆலய தர்மகர்த்தா
சி.குமாரசாமி.


# குடு உக்குவா கைது

ஹெரோயின் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய குடு உக்குவா என்ற நபரை மொறட்டுவ பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கட்டுபெத்த தண்டெனியாவத்தைப் பிரதேசத்தை சேர்ந்த 29 வயதான இநத நபர், பிரபல ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையாளர் வெலே சுதாவின் நெருங்கிய உறவினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர், பால் மா பக்கெட்டுகளில் வைத்து ஹெரோயினை நாடு முழுவதும் விநியோகித்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்படும் போது குடு உக்குவாவிடம் 3 ஆயிரத்து 600 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. (த)

# தனியார் தொலைக்காட்சியின் அரசியல் நிகழ்ச்சிக்குத் தடை

கொழும்பு, ஜூலை 21

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரஜைகள் முன்னணியின் பொதுச் செயலாளருமான ஜே. ஸ்ரீரங்காவினால் பிரபல தனியார் தொலைக்காட்சியொன்றில் நடத்தப்படும் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்குத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவினால் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடை உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமீட்டினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் காலப் பகுதியில் குறித்த நிகழ்ச்சியைக் குறித்த தொலைக்காட்சியில் ஒளிபரப்ப முடியாது எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் இடம்பெற்றது. பிரஜைகள் முன்னணியின் பொதுச் செயலாளர் ஜே. ஸ்ரீரங்கா உள்ளிட்ட பல கட்சிகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமீட் உதயனுக்குத் தெரிவிக்கையில்,

ஸ்ரீரங்காவினால் குறித்த தொலைக்காட்சியில் நடத்தப்படும் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்குத் தடை விதிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தேன். அத்துடன் ஒரு அரசியல் கட்சியின் பொதுச் செயலாளரும், அரசியல் கட்சியொன்றினால் முன்மொழியப்பட்டுள்ள தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவருமான ஜே.ஸ்ரீ ரங்காவினால் எவ்வாறு அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்த முடியும் எனவும் கேள்வி எழுப்பினேன். குறித்த நிகழ்ச்சி பக்கச் சார்பானதாக நடத்தப்படுகின்றது என்பதே இதற்குக் காரணம்.

இதன்போது குறிக்கிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீ ரங்கா, முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலிருந்து ஒவ்வொரு தேர்தலின் போதும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸினால் மாத்திரம் தன்னால் நடத்தப்படும் நிகழ்ச்சிக்கு இடையூறு விளைவிக்கப்படுகின்றது. இது நியாயமற்றது– என்றார்.

இந்த நிலையில்தான் குறித்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுவதை நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடையும் வரை நிறுத்தி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டார். எனினும், சில மின்னல் நிகழ்ச்சிகளை ஏற்கனவே பதிவு செய்துள்ளதாகவும், அவற்றை மாத்திரம் ஒளிபரப்புவதற்கு அனுமதி வழங்குமாறும் ஸ்ரீரங்கா கோரிக்கை விடுத்தார்.

முன்கூட்டி பதிவு செய்யப்பட்டுள்ள மின்னல் நிகழ்ச்சிகளைப் பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.முஹம்மட் பார்வையிட்டு அனுமதி வழங்கினால் மாத்திரமே ஒளிபரப்ப முடியும் எனத் தேர்தல் ஆணையாளர் இதற்குப் பதிலளித்துள்ளார். அத்துடன் புதிதாக எந்தவொரு மின்னல் நிகழ்ச்சியையும் புதிதாகப் பதிவு செய்ய முடியாது எனவும் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டார்–என்றார். (த-10)


# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலரால் பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் -IV, சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம் -III, கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 21.07.2015 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 2222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாக கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 21.07.2015 முதல் 04.08.2015 வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 05.08.2015 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர் கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 05.08.2015 திகதி பி.ப 4.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு 120 நாள்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலைவிவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JK/DCA/ ECC-P/01 | பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம்-IV | 2.91 | 03 மாதம் | C7 | 29,100.00 | 1000/= |
| JK/DCA/ ECC-CHA/01 | சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம்-III | 3.44 | 03 மாதம் | C7 | 34,400.00 | 1000/= |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/18107)(10.8.3)

# தனித்துப் போட்டியிட்டாலும் ரணிலுக்கே எங்கள் ஆதரவு

## அனோமா பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

தனித்துப் போட்டியிட்டாலும் மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க இருவரினதும் கூட்டு பயணத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் அதிகாரத்துக்கு வருவதனை தடுப்பதே எங்கள் கட்சியினதும் ஏனைய கட்சியினதும் திட்டமாகவுள்ளது. நாங்கள் அந்த திட்டத்தில் வேறு பாதையில் பயணித்துள்ளோம்.

நாங்கள் இரண்டு பக்கத்தில் இருந்தும் தாக்குதல் மேற்கொண்டாலும் எங்கள் இரண்டு பக்கங்களின் நோக்கமும் ஒன்றே.

நான் நாட்டுக்காகத் தேர்தலில் போட்டியிடுகிறேன். எனது குடும்பத்திற்காகப் போட்டியிடவில்லை. எனது இரண்டு பிள்ளைகளும் ஒருபோதும் அரசியலுக்கு வரப்போவதில்லை.

எமது திட்டம் நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கே தவிர எமது குடும்ப வளர்ச்சிக்காக அல்ல என்று பொன்சேகாவின் மனைவி அனோமா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க இருவருக்கும் எமக்கும் இடையில் நல்ல உறவு உள்ளதாகவும், நாட்டின் நலனுக்காக தொடர்ந்தும் இணைந்து செயற்படுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# பகிரங்க விவாதத்துக்கு வருமாறு ரணிலை அழைக்கிறார் கப்ரால்

கொழும்பு, ஜூலை 21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வர வேண்டும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அழைப்பு விடுத்துள்ளார்.

தனது பொறுப்பில் இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கொழும்பு தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அண்மையில் திறைசேரியின் பிணை முறி வழங்கலில் இடம்பெற்ற முறைகேடானது நாட்டில் இடம்பெற்றுள்ள மிகப்பெரிய கொள்ளை ஆகும் என தெரிவித்த அவர், 7பில்லியனுக்கும் குறைவாகவே தற்போது நாட்டில் அந்நிய செலாவணி கையிருப்பு உள்ளது. நாட்டில் இருந்த பணம் வெளியில் சென்ற பின் ரூபாவின் மதிப்பு குறைந்துள்ளமையால் மிகவும் பாரதூரமான நெருக்கடி நிலைமை ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே இவ்வாறான கொள்ளைகளில் இருந்து விலகி நாட்டுக்கு பொருத்தமான கொள்கையின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என எச்சரித்துள்ளார். (த)

# மாகாண சபை உறுப்பினர் வாகன விபத்தில் படுகாயம்

தென் மாகாண சபை உறுப்பினர் கயான் சஞ்ஜீவ நேற்று வாகன விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து மாத்தறை யட்டியன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மாகாண சபை உறுப்பினர் உட்பட அவருடன் சென்ற மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். விபத்தை அடுத்து காயமடைந்த இவர்கள் மாத்தறை வைத்திய சாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வேகமாக பயணித்த இவரின் வாகனத்தில் திடீரேன காற்று வெளியேறியதனால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கயான் சஞ்ஜீவ இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# மஹிந்த பிரதமராகாவிட்டால் செங்கோலைத் தூக்குவேன்

## சாலிந்த திஸாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவி கொடுக்கப்படாது விட்டால் தமது அணியினர் செங்கோலைத் தூக்கிக்கொண்டு நாடாளுமன்றத்தைச் சுற்றி ஓடப்போவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட பொல்பித்திகம பிரதேசத்தில் இடம்பெற்ற நேற்றைய கூட்டத்திலேயே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு மக்கள் மத்தியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

மஹிந்த தேர்தலில் வெற்றி பெற்றாலும் அவருக்கு பிரதமர் பதவி வழ்ங்குவதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுப்பு தெரிவித்து வருகிறார்.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி தரப்பினர் நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களின் ஆதரவு பெற்றவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக நியமிக்க முன்வரவேண்டும் எனச் சட்ட வாதங்களை முன்வைத்து வருகின்றனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது நிலைப்பாட்டை அவர்களுக்கு எதிரான சட்ட வாதங்கள் மூலமாக முன்வைத்து வருகின்றனர்.

இதுவரைகாலமும் நாட்டில் இருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் தமது ஆட்சியில் தமது விருப்பிலேயே பிரதமர் நியமனங்களை வழங்கியிருந்தனர்.

மஹிந்த ராஜபக்ஷவும் தனது ஆட்சியில், மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரதமர் பதவி வழங்க வேண்டும் என பல தரப்பில் இருந்தும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதிலும் டி.எம்.ஜயரத்னவையே பிரதமராக நியமித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# தோல்வி கண்ட மஹிந்த சிந்தனைக்கு இப்போது உயிர் கொடுக்க முயற்சி

## கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட மஹிந்த சிந்தனை தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரை ஊடாக உயிர் கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் நாட்டில் அபிவிருத்தி தொடர்பில் எந்தக் கொள்கையும் இல்லை.

இதனாலேயே அவர்கள் மீண்டும் பழைய கொள்கையை தற்போது தேர்தல் களத்தில் முன்வைத்துள்ளனர்.

இதனால் மஹிந்த சிந்தனை மீண்டும் இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் போது தோற்கடிக்கப்படும்.

ஜனாதிபதி தேர்தலில் பெற்றுக் கொண்ட வெற்றியை மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் விட்டுக்கொடுக்க முடியாது என அமைச்சர் கருணாதிலக்க மேலும் தெரிவித்துள்ளார். (த)

### சிங்கள

போர் வீரர்களை மின்சார நாற்காலிக்கு அனுப்பவுள்ளதாகவும், அவர்களைப் பாதுகாக்க மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறும் கோரத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், உயர் மட்ட அரச பேச்சாளர் தெரிவித்ததை மேற்கோள் காட்டி குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (த–5)

### சுகாதாரத்

மன்றிலும் கதைத்து நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களும் நேற்று சுமார் மூன்று மணித்தியாலங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டிருந்தது.

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய பல்வேறு தரத்திலான சிற்றூழியர்கள் எந்த வகையான முன்னறிவிப்பும் இன்றி வேலையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளார்கள். அந்நிலையில் தமது வேலையை மீள வழங்கக் கோரி வைத்தியசாலை வளாகத்தில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த ஊழியர்களின் பணி வைத்தியசாலைக்கு அவசியமாக இருப்பதனால் அவர்களின் நியமன விடயத்தில் உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும், இல்லாது போனால் வைத்தியசாலையின் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும் வைத்தியர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் போராட்ட இடத்துக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார். அதன் பின்னர் சுகாதாரத் தொண்டர்களுக்கான பணி நீடிப்பைத் தற்காலிகமாக 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுத்ததுடன் அவர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பில் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றில் கதைத்து நியமனம் வழங்க நடவடிக்கைகளை எடுப்பதாகவும் கூறியதையடுத்து அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். (த–4–86)

### நீதியான

பதி மைத்திரிபால வழங்கியுள்ளதாக ஜனாதிபதி செயலக அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள், அனைத்து மாகாண செயலாளர்கள், அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர்கள் ஆகியோருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 நாடாளுமன்றத் தேர்தலை சட்டத்துக்கமைய நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளருக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதற்கு அனைத்து அரச அதிகாரிகளும் கட்டுப்பட்டுள்ளனர். இதற்கமைய தேர்தல் பணிகளுக்குத் தேவையான அதிகாரிகளைத் தேர்தல்கள் ஆணையாளரிடம் தகுந்த முறையில் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–சி)

### கே.பி.

நீதியமைச்சர் சுஜீவ சேன சிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தரான கே.பி தொடர்பில் மேற்கொள்ளப்பட உள்ள நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்கள் பல்வேறு கருத்து வெளியிட்டனர்.

எனினும் தேர்தலின் பின்னர் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்கவிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன்போது தனது கைத்தொலைபேசி ஊடாக சிரேஷ்ட அரச சட்டத்தரணிக்கு அழைப்பை ஏற்படுத்திய பிரதி அமைச்சர், கே.பிக்கு என்ன நடந்ததென வினவியுள்ளார்.

கே.பி தொடர்பில் என்ன செய்யலாம் என்பது தொடர்பில் பரிந்துரை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளதாகவும், குறித்த பரிந்துரைகள் இதுவரை தன்னிடம் கிடைக்கவில்லை எனவும் சட்டதரணி அமைச்சரிடம் கூறியுள்ளார்.

இதன் பின்னர் கே.பிக்கு என்ன நடந்ததென்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (த)

### யாராலும்

அமைப்பைத் தோல்விய டையச் செய்ய இந்தக் குரு நாகல் பிள்ளைகள் மாபெரும் அர்ப்பணிப்பைச் செய் துள்ளனர்.

2005 ஆம் ஆண்டு நாட்டைப் பாரமெடுத்தபோது இந்தக் குருநாகலில் மாத் திரமல்ல, முழு நாட்டிலும் நாளாந்தம் எங்களது வீரர் களின் 10,.15 சடலங்கள் வந்து கொண்டிருந்தன. அவ் வாறானதொரு நாட்டைத் தான் அன்று நாங்கள் பாரமெடுத்தோம். அந்த யுகத்தை நாம் முடிவுக்குக் கொண்டு வந்தோம்: முழு நாட்டிலுள்ள பிள்ளைகளின் முழு வாழ்வையும் நாங்கள் பேணினோம். இதுதான் நான் செய்த தவறா ?

இன்று எனக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, இளைஞர்களின் வாழ்க்கையின் பெறுமதியை நன்றாகத் தெரிந்தவரா? அன்று 1987, 89 கால கட்டங்களில் இளம் உயிர்கள் ஆயிரக்கணக்காக அழிக்கப்பட்டன. இன்று மனித உரிமைகள் தொடர்பாகப் பெரிதாகப் பேசுகின்றனர்.

அதனால் பழைய யுகத்தையும் நன்றாகத் தேடிப்பார்த்து, நாட்டின் எதிர்காலத்தையும் நினைத்து நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த–5)

### சடலமாக

நிலையில் சிறுமி ஒருவரின் சடலம் கிளிநொச்சிப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அந்த சடலம் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் உருத்திரபுரம் எள்ளுக்காட்டுப் பகுதியில் காணாமற்போன 3 வயதுச் சிறுமியுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. சடலம் மருத்துவப் பரிசோதனைக்காகக் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

ஆனாலும் சடலமாக மீட்கப்பட்ட சிறுமி தொடர்பாகச் சட்ட ரீதியான தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறாத நிலையில் நேற்று வரை அதனை அடையாளம் காணமுடியாமல் உள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் கூறினர்.

அத்தோடு எள்ளுக்காட்டில் காணாமற்போன சிறுமி அணிந்திருந்த பாவாடை உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சிறுமியின் சடலத்தில் காணப்படவில்லை எனவும் தனியே மேலே ரீசேட் மட்டுமே காணப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர். (த–)

### உடற்

குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத் துள்ள செய்திக் குறிப்பில், உடற் தகுதியீனம் காரணமாக ஒருவர் நடந்தோ அல்லது பொதுப் போக்குவரத்துச் சேவை யைப் பயன்படுத்திச் செல்ல முடியாத நிலை காணப்படின், அவர் தேர்தல் வாக்களிப்பு நோக்கத்துக்காக போக்குவரத்துச் சேவையைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும்.

அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர், அவ்வாறு செல்ல முடியாமைக்கான காரணத்தை விவரித்து பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பம் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் (தெரிவத்தாட்சி அலுவலர்) திருப்தியடைந்தால் விசேட போக்குவரத்து வசதிக்கு உத்தரவுப் பத்திரத்தை விநியோகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

### 10 வருடங்களுக்கு

யாடியதாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில், அமைச்சராக இருந்த தான், அந்த மோசடிகளைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் அரசை விட்டு விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொண்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் ஒன்றை நுவரெலியா மாவட்டத்தில் உருவாக்குவது உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த எண்ணியுள்ளதாகவும் அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (த–சி)

# தேசிய அரசினை அமைப்பது பற்றி இப்போதே பேச்சு

கொழும்பு, ஜூலை 21

பொதுத் தேர்தலின் முடிவு என்னவாக இருந்தாலும், தேர்தலின் பின்னர் குறிப்பிட்ட காலப்பகுதி வரை தேசிய அரசை உருவாக்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்கள் சிலர் தற்போதே பேச்சுகளை ஆரம்பித்து விட்டனர் எனத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

கடந்த நாள்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் கூட்டணியின் முக்கியஸ்தர்கள் பேச்சுகள் நடத்துவ[illegible]த் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் துப்பு வழங்கும் வகையில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் ராஜித சேனாரத்ன தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும், தேர்தலின் பின்னர் உருவாகுவது தேசிய அரசு எனக் குறிப்பிட்டிருந்தார்.

தேர்தலின் பின்னர் தேசிய அரசை உருவாக்குவதற்காக தற்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் தேர்தல் நிறைவடையும் வரையில் நல்லாட்சிக் கான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை பாதுகாத்துக் கொள்வதற்காக கட்சி உள் வட்டாரத்தினுள் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த நாள்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஜன யாப்பாவால் கூட்டப்பட்ட மத்திய செயற்குழுக் கூட் டத்தில் ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க, எம்.கே.டீ.எஸ். குணவர்தன மற்றும் ஹிருணிக்கா பிரேமச்சந் திர ஆகியோரின் உறுப்புரிமையை இரத்துசெய்வதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நீதி மன்ற உத்தரவால் மத்திய செயற் குழுக் கூட்டம் இரத்துசெய்யப்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ராஜித சேனாரத்ன, ஏதாவது ஒருவகையில் தனது கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டால், தேர்தலின் பின்னர் உரிய முறையில் தனக்கு மீளக் கிடைக்கும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் போதும் தனது கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டதாகக் கூறிய ராஜித சேனாரத்ன, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மட்டுமன்றி கட்சி உப தலைவர் பதவியும் கிடைத்ததாகத் தெரிவித்துள்ளார். (த)

## நிபந்தனையுடன் ஐ.ம.சு.முவில் போட்டியிடுகின்றது இ.தொ.கா.

கொழும்பு, ஜூலை 21

நாடாளுமன்றத் தேர்தலில் சில நிபந்தனைகளின்பேரில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்துபோட்டியிடுவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இ.தொ.கா. பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது மலையக மக்களின் கல்வி, வாழ்வாதாரம் மற்றும் தொழில்வாய்ப்புகளை மையமாகக்கொண்டு சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்ட போது, சாதகமான பதில் கிடைத்துள்ளதாக இ.தொ.காவின் பொதுச் செயலாளரான ஆறுமுகன் தொண்டமான் கூறுகின்றார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக கொட்டகலை இ.தொ.கா. தலைமையகத்தில் கட்சி உறுப்பினர்களுக்கும் ஆறுமுகன் தொண்டமானால் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் ஒரு பல்கலைக் கழகம் தொடங்குதல், ஊவா மாகாணத்தில் ஆசிரியர் கல்வியியல் கல்லூரி ஆரம்பித்தல், மேலும் தோட்டப் பாடசாலைகளுக்கு மூவாயிரம் ஆசிரிய உதவியாளர் களை நியமனம் செய்தல், தோட்ட இளைஞர், யுவதிகளை கிராம சேவை அலுவலர்களாக நியமித்தல் எனக் கல்வி மற்றும் தொழில் சார்ந்த கோரிக்கைளும் இந்த நிபந்தனைகளாக அமைவ தாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

தோட்ட லயன்களை கிராமங்களாக மாற்றியமைத்தல், கைவிடப்பட்டு தரிசு நிலங்களாகக் காணப்படும் தேயிலைத் தோட்டங்களை தேயிலை சிறுதோட்டச் செய்கைக்காக தோட்டத் தொழி லாளர்களுக்குப் பகிர்ந்தளித்தல் போன்ற மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான கோரிக்கைகளும் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இ.தொ.கா.வின் பொதுச் செயலாளரான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்திருக்கின்றார்.

தங்களால் முன்வைக்கப்பட் டுள்ள இந்த நிபந்தனைகள் ஐ.ம.சு. முன்னணியின் தேர்தல் கொள்கை விளக்கத்தில் இடம்பெறலாம் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நிபந்தனையின்றி ஐ. ம. சு. முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியதுபோன்று நாடாளு மன்றத் தேர்தலில் நிபந்தனைகள் இன்றி ஆதரவு வழங்குவது என்பது சாத்தியப்படாது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். (த)

## ஐ.ம. சுதந்திர முன்னணிக்கு வாக்களிப்பது அர்த்தமற்றது


*பிரதமர் ரணில் சாடல்*

கொழும்பு, ஜூலை 21

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிப்பதில் அர்த்தமில்லை எனப் பிரதமர் ரணில் [illegible]க்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

[illegible]திர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிப்பதில் எவ்வித பயனும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். பெத்தேகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி பிழையான வழியில் பயணிப்பதாகத் தெரிவித்துள்ளார். எதிர்காலம் பற்றி எவ்வித திட்டமுமின்றி கூட்டமைப்பு இயங்கிவருவதாகத் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி தெளி வான திட்டமொன்றின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (த)



மாளிகாவத்தை சிறுநீரக வைத்தியசாலைக்கு நேற்று திடீர் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால அங்கு நோயாளர்களுடன் கலந்துரையாடி அவர்களது குறைநிறைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 21

நீர்வேலி ,வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் ஆலய விநாயகர் புகழ் இறுவட்டு வெளியீட்டு விஞ்ஞாபனம் இன்று செவ்வாய்கிழமை காலை 7.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வரம் தரும் அருளோசை என்னும் பெயரில் வெளியிட்டு வைக்கப்படவுள்ள இந்த இறுவட்டு நீர்வேலி, வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் பெருமானின் திருவருள் பற்றி தென்னிந்திய பாடகர்களினால் பாடப்பட்டுள்ளது. (த–ரி)

## குடும்பத்தைக் காக்கவே மஹிந்த மீண்டும் களத்தில்

*சாடுகிறார் அநுர*

கொழும்பு, ஜூலை 21

பல்வேறு குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள தமது குடும்பத்தினரைப் பாதுகாக்கும் நோக்கிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிரிபத்கொடையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ராஜபக்ஷவுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் எதிராக ஏற்கனவே பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இதனைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே அவர் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்றும் அவர் கூறினார். (த)

## தெற்கு அரசியல் கட்சிகளுக்கு வடக்கில் கவனம் வேண்டும்

*ஞானசார தேரர் கோரிக்கை*

கொழும்பு, ஜூலை, 21

வடக்கு சுயாட்சி குறித்த கருத்துக்கள் தொடர்பில் தெற்கு அரசியல் கட்சிகள் கவனம் செலுத்த வேண்டுமென பொதுஜன முன்னணியின் தலைவர் கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு சுயாட்சி குறித்து வெளியிடப்பட்டு வரும் கருத்துக்களை கவனத்திற் கொண்டு தெற்கு அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். சிறுபான்மையினக் கட்சிகள் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுகின்றன.

குறிப்பாக முஸ்லிம் மதத் தலைவர்கள் மத வழிபாட்டுத் தலங்களுக்குள் இறுதித் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்கக் கூடிய வகையிலான கருத்துக்களை வெளியிட்டு மக்களை வழி நடத்துகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்கு முன்னதாக நான் எதிர்வு கூறிய விடயங்கள் நடைபெற்று வருகின்றன. அடுத்ததாக 1818 ஆம் ஆண்டு இடம்பெற்ற விடயங்கள் நாட்டில் இடம்பெறும். 1818 ஆம் ஆண்டில் வெளிநாட்டவர்கள் நாட்டை போரின் மூலம் ஆக்கிரமிக்கவில்லை. மேற்குலக நாடுகளின் காலனித்துவ தலைவர்கள் 1818 ஆம் ஆண்டில் போன்று இரத்த சிந்தாமல் நாட்டை ஆக்கிரமிக்க முயற்சிக்கின்றனர்.

இந்தநிலையில் எவ்வாறான அரசியல் கொள்கைகள் காணப்பட்டாலும் நாட்டையும் இனத்தையும் கருத்திற் கொண்டு பிரதான அரசியல் கட்சிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்–என்றார். (த–10)

## அரசியலை கைவிடேன்

*துமிந்த சில்வா தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 21

அரசியலைக் கைவிடப் போவதில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

வேட்புமனு கிடைக்காத கார[illegible]த்திற்காக நான் அரசியலைக் [illegible]விடப் போவதில்லை. கட்சியை [illegible]டு விலிக்கிக்கொள்ளப் போவதுமி[illegible]ல. நான் இன்னமும் இளைஞனா[illegible]வ இருக்கின்றேன், இன்னமும் [illegible]க ளுக்கு நிறையவே சேவைக[illegible]ச் செய்யமுடியும்.

கொழும்பு மாவட்டத்தில் அதி[illegible]ய விருப்பு வாக்குகளைப் பெ[illegible]க் கொண்டு முதலாம் இடத்[illegible]ப் பெற்றுக்கொள்வேன் என்ற [illegible]ம் கொண்ட சிலரின் சூழ்ச்சியால் [illegible]ட் புமனு கிடைக்கவில்லை.

எனினும், நான் அரசியலை [illegible]டு விலகப்போவதில்லை என்று [illegible]ர் குறிப்பிட்டுள்ளார். [illegible]ந)

## ஓகஸ்ட் 18 க்குப் பிறகு புதிய அரசியல் யாப்பு

*சம்பிக்க கூறுகிறார்*

கொழும்பு, ஜூலை 21

எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஊழல் மோசடியில் ஈடுபட்டிருந்தால் அவர் களுக்குக் கடுமையான தண் டனை வழங்கக்கூடிய அதிகாரம்கொண்ட ஆணைக்குழு அடுத்த அரசில் உருவாக்கப்படும் என கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5 ஆண்டுகள் நாட்டைக் கட்டியெழுப்பும் பொருளாதாரத் திட்டம் முன்வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஓகஸ்ட் 18ஆம் திகதி உருவாக்கப்படும் அதிகாரத்துடன் கூடிய புதிய நாடாளுமன்றில் விருப்பு வாக்கு முறைமையை ஒழித்து, அதிகாரம் கொண்ட சுயாதீன ஆணைக் குழுக்களை ஏற்படுத்தும் அரசியல் யாப்பு திருத்தம் செய்யப்படும் என ரணவக்க கூறினார்.

நாட்டில் 17 பொருளாதார வலயங்களை உருவாக்குவதோடு 10 இலட்சம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார். (த)




## துடுப்பாட்டத்தின் சொதப்பலே தோல்விக்கு காரணம்

இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி–20 ஆட்டத்தில் 146 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்தியா அதனைக்கூட எட்டமுடியாமல் 10 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. இந்தத்தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களின் திறனற்ற செயற்பாடே காரணம் என்று இந்திய அணித்தலைவர் ரஹானே குற்றஞ்சாட்டியுள்ளார்.

தோல்வி தொடர்பாக ரஹானே தெரிவித்ததாவது எங்கள் பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டு அவர்களை கட்டுப்படுத்தினார்கள். முக்கியமாக கடைசி 5 ஓவர்களில் அவர்களின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. ஆனால் எங்கள் துடுப்பாட்டம் சிறப்பாக இல்லை. அணியின் ஓட்டம் நான்காக இருந்தபொழுது எனது இலக்கு பறிபோனமையும் அணிக்குப் பின்னடைவே. பந்துவீச்சில் சிம்பாப்வே சிறப்பாக செயற்பட்டது. அதேசமயம் ஒட்டு மொத்தமாக இந்தத் தொடரில் இந்திய அணியின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. என்றார். (ம)

# சொந்த மண்ணில் சுருண்டது இலங்கை

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் 135 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தி 2–1 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியிலும் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் செஜுட்டுடன் அஜுர் அலி. பந்துகளை வீணடிக்கவும் இல்லை எடுத்த வேகத்தில் விளாசித்தள்ளி அவசரப்படவும் இல்லை. ஒருநாள் ஆட்டங்களுக்கே உரிய பாணியில் நிதானமாகப் பாகிஸ்தானின் ஓட்டங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. இணைப்பாட்டத்துடன் இணைந்த முறையில் தனிநபர் ஓட்டங்களும் விரைந்துகொண்டிருக்க இருவரும் அரைச்சதத்தை அண்மித்துக் கொண்டிருந்தனர். அணியின் ஓட்டம் 93 ஆக இருந்தபொழுது 6 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டு பவிலியன் திரும்பினார் செஜுட். அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் ஓர் ஓட்டத்தினால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் அஜுர். ஆரம்பவீரர்கள் இல்லாமையை அப்படியே நிவர்த்தி செய்தார்கள் ஹபீஸிம் அஹமட்டும். மீண்டும் ஒரு வலுவான இணைப்பாட்டம்




அரங்கேறியது. பாகிஸ்தானின் மொத்த ஓட்டங்கள் முன்னூறினை எட்டப்போகிறதென்பது முப்பதாவது பந்துப்பரிமாற்றத்திலேயே விமர்சகர்களால் எதிர்வுகூறப்பட்டது. எதிர்வுகூறலை நிஜமாக்கும் முனைப்பில் வெளுத்துவாங்க ஆரம்பித்தார் அஹமட். ஆரம்பவீரர்கள் செய்த தவறை தவறில்லாமல் செய்து அரைச்சதம் எட்டினார்கள் ஹபீஸிம் அஹமட்டும். பின்வரிசையில் நூற்றைம்பது என்ற சராசரியில் வேடிக்கை காட்டினார் மலிக். முடிவில் பாகிஸ்தான் 316–4.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக மலிங்க, பதிரண இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

317 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இமாலய இலக்குடன் பயணத்தை ஆரம்பித்த இலங்கைக்கு ஆரம்ப வீரர்களின் செயற்பாடு எதுவித திருப்தியையோ அல்லது சாதகமான தாக்கத்தையோ கொடுக்கவில்லை. அணியின் ஓட்டம் 42ஆக இருந்தபொழுது ஆரம்ப வீரர்கள் இருவரும் பவிலியன் திரும்பிவிட்டனர். ஒருமுனையில் திரிமன்னே நிலைத்துநின்றாலும் 300 ஓட்டங்களை எட்டக்கூடிய அதிரடி அவரது ஆட்டத்தில் இல்லை. பின்வரிசை வீரர்கள் எவரும் முழுமையாக 20 ஓட்டங்களைத் தொடவில்லை. தலைமை இன்னிங்ஸிற்காக களமிறங்கிய மத்தியூஸ் வெறும் 4 ஓட்டங்களுடன் வந்த இடத்துக்கு திரும்பினார். முடிவில் இலங்கை 181 ஓட்டங்களில் சுருண்டு 135 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக சாஜ் 4 இலக்குகளையும் அன்வர் அலி, இமட் வசிம் இருவரும் தலா 2 இலக்குகளையும் ரஹற் அலி ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். (ம)




## பியாஞ்சியின் மரணம் ஏமாற்றம் தருகிறது


9 மாதங்களுக்கு முன்னர் கார்பந்தயத்தில் ஈடுபட்டிருந்தவேளையில் விபத்துக்குள்ளாகி கடந்த 9 மாதங்களாக கோமாவில் இருந்து கடந்த சனிக்கிழமை சாவடைந்த ஜீல்ஸின் மரணத்துக்கு கார்பந்தயத்தில் முடிசூடா மன்னனாக திகழும் ஹமில்டன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் பிரதான கார்பந்தய வீரரான ஜீல்ஸ் பியாஞ்சியின் மரணம் ஏமாற்றத்தைத் தருகிறது. கார்பந்தய உலகம் தனது பிரதானமான வீரர்களில் ஒருவரை இழந்துள்ளது. எனக்குச் சவாலாக நான் நினைத்த வீரர்களில் பியாஞ்சியும் ஒருவர். 24வயதில் அவர் ஏராளமாகச் சாதித்துள்ளார். உலக கார்பந்தயத் தொடரையும் ஒருமுறை கைப்பற்றியுள்ளார். மொத்தத்தில் பியாஞ்சியையும் அவரது சாதனையையும் நினைத்து பெருமைப்படுகிறேன். என்றார். (ம)

## இலங்கை – பாகிஸ்தான் ஆட்டத்தில் ரசிகர்கள் கைகலப்பு








இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் ரசிகர்களுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டதால் ஆட்டம் சில நிமிடங்கள் தடைப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

317 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு இலங்கை துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த பொழுது பாகிஸ்தானின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகியிருந்த நிலையிலேயே இந்தக் கைகலப்பு ஏற்பட்டது. பின்னர் ஆட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக நடுவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து மைதானத்தின் மத்திய பகுதிக்கு பாகிஸ்தான் வீரர்கள் வரவழைக்கப்பட்டு விசேட அதிரடிப்படையின் உதவியுடன் அவர்களுக்கு மைதானத்துக்குள்ளேயே பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டது. கலகம் விளைவித்தவர்கள் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆட்டம் நடைபெற்றது. (ம)

## 409 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஆஸ்திரேலியா தக்க பதிலடி

இங்கிலாந்து– ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 5 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் ஆஸ்திரேலியாவின் இமாலய வெற்றியுடன் நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது.

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா எதிர்பார்த்ததைப் போல் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க 566–8 என்ற நிலையை எட்டியபொழுது ஆட்டத்தை இடை நிறுத்துவதாக அறிவித்தார் கிளார்க். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 4 இலக்குகளையும் ரூட் 2 இலக்குகளையும் வூட் மற்றும் அலி



இருவரும் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

567 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெறலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இங்கிலாந்து 312 ஓட்டங்களில் சுருண்டு 254 ஓட்டங்களால் பின்தங்கியது. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஹசில் வூட், ஜோன்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும் மார் 2 இலக்குகளையும் லையன், ஸ்ராக் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப் பற்றினர்.

254 ஓட்டங்கள் முன்னிலையுடன் மேற்கொண்டு அணியைப் பலப்படுத்த களத்தில் வோர்ணர் மற்றும் றோயேர்ஸ்.

அடித்தாடி விரைவாக ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்த வேண்டும் என்பதே வியூகம். அதற்கு ஏற்றால்போல் விளாசித்தள்ளினார் வோர்ணர். 30 என்ற சராசரியை விட்டுத்தாண்டாத றோயேர்ஸ் நேற்றுமுன்தினம் 60 என்ற சராசரிக்கு குறையாமல் ஆடிக்கொண்டிருந்தார். இலக்குகள் இழப்பில்லாமல் இணைப்பாட்டம் நூறினை எட்டியது அரைச்சதத்தைப் பதிவுசெய்தார் வோர்ணர். 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் தலையில் பந்து தாக்கியதால் ஆட்டமிழப்பற்ற ஓய்வினை அறிவித்தார் றோயேர்ஸ். வெளுத்துவாங்கியசிமித் 40 பந்துகளில் அரைச்சதத்தையும் பதிவுசெய்ய 254–2 என்ற நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்துவதாக அறிவித்தார் கிளார்க்.

509 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்தின் ஆட்டத்தில் வெற்றிபெறுவதுக்கான அல்லது குறைந்தபட்சம் ஆட்டத்தை சமநிலையில் முடிப்பதற்கான எந்த முயற்சியும் இல்லை. முழுவதுமாக 20 ஓட்டங்களை எட்டுவதே எவருக்கும் எட்டாக்கனியாக இருந்தது. லைத் 7, குக் 11, பலன்ஸ் 14, பெல் 11, ரூட் 17 தற்பொழுது இங்கிலாந்து 52–5. புரொட் மட்டும் அதிகபட்சமாக 25 ஓட்டங்களைப் பெற்றார். ஸ்ரோக்ஸ் 0, மொயீன் அலி 0, அண்டர்சன் 0, பட்லர் 11 முடிவில் இங்கிலாந்து 103 ஓட்டங்களில் சுருண்டது. மொத்தத்தில் கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து லோட்ஸில் 405 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக சிமித் தெரிவானார். (ம)

# கோட்டை விடப்பட்ட கோல் வாய்ப்புக்கள்
# சமநிலைத் தவிர்ப்பில் சம்பியனானது அன்ரனிஸ்

கரணவாய், ஜூலை 21

கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் நவீவன்ஸை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.



அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.



நவீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

எதிர்பார்ப்புக்கள், பரபரப்புக்கள் ஆட்டத்தின் அழையா விருந்தாளிகளாக இடம்பெற்றிருக்க கிண்ணக் கனவின் நனவாகும் கணங்கள் ஆரம்பமாகியது. அடுத்த நிமிடமே நவஜீவன்ஸை தேடிவந்தது வாய்ப்பு திரிலாக தடுத்து நிறுத்தினார் அன்ரனீஸின் பினகளவீரர் திலீபன். அன்ரனிஸுக்கு அமைந்த சந்தர்ப்பத்தை தடுத்து நிறுத்தி தமது வாய்ப்பு வீணடிக்கப்பட்டதற்கு பழி தீர்த்தனர் நவஜீவன்ஸ். இதே நிலைமை ஆட்டத்தின் முதல்பாதி வரை நீடிக்கவே செய்தது. ஒன்றல்ல இரண்டல்ல மொத்தம் 7 வாய்ப்புக்கள் நவஜீவன்ஸை தேடி வந்தது. ஒன்றைத்தன்னும் கோலாக்க முடியவில்லை அவர்களால். வாங்கிக் கட்டிக்கொண்டனர் வசை மொழிகளை ரசிகர்களிடம். வீட்டுக்குவீடு வாசல்படி என்பதைப்போல அன்ரனிஸ்ஸிம் சொதப்பாமல் இல்லை. ஐந்து வாய்ப்புக்களை அவர்களும் வீணடித்தனர். இதுக்கேடா பாஷையூரில இருந்து வந்தனியள் இது அன்ரனிஸுற்கு விழுந்த வசைகளிலொன்று. இவ்வாறான பதட்டமான சூழ்நிலைகளில் நிறைவடைந்தது ஆட்டத்தின் முதல்பாதி.

இனியாவது ஒரு எமது அணியால் பதியப்படுமா என்ற இரு அணியின் ரசிகர்களது பொதுவான எதிர்பார்ப்புக்கும் மத்தியில் ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. ஒரு மாதகால உழைப்பின் கனவை அடைய இன்னும் இருப்பது 45 நிமிடங்கள் மட்டுமே. அல்லாடியது பந்து அங்கும் இங்குமாய். ஆனபோதும் முதலாவது கோல் எந்த அணியாலும் பதியப்படவில்லை. ஆட்டம் முடிவதற்கு இரண்டே நிமிடங்கள் இருந்தவேளையில் நவஜீவன்ஸ் அணியினால் கோல்கம்பங்களுக்கு அண்மையில் வைத்து உதைத்த பந்து கோலாகப்போகிறது என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் பந்துக்கு நிகராக உயர எழும்பி தடுத்து நிறுத்தினார் அன்ரனிஸின் கோல்காப்பாளர் குயின்டர்ஸ். ஆட்டம் சமநலையில் முடிவடைய வெற்றி தோல்வி முடிவு சமநிலைத் தவிர்ப்பு உதைகளிடம் தஞ்சமானது. அதிலும் போராட்டம் இழுபறியாக நீடித்தது. தட்டுத்தடுமாறி 4:3 என்ற கோல் கணக்கில் திரில்வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்.அன்ரனிஸ்.

தொடரின் சிறந்த நன்னடத்தை அணியாக வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகமும் வளர்ந்து வரும் அணியாக உடுப்பட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் தெரிவாகியதுடன் நன்னடத்தை வீரராக வதிரி டைமன்ஸ் அணியின் அரவிந்தனும், வளர்ந்து வரும் வீரராக நவிண்டில் கலைமதி அணியின் விதுசனும் மக்களைக் கவர்ந்த வீரராக நவஜீவன்ஸ் அணியின் கௌதமனும் சிறந்த பின்கள வீரராக அன்ரனீஸ் அணியின் திலீபனும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த குயின்டர்ஸும் சிறந்த அனுபவ வீரராக மனோகரா விள்ளையாட்டுக்கழகத் தைச் சேர்ந்த கருனாணந்தனும் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகனாக நவஜீவன்ஸ் வீரர் பிரியங்கனும் தொடர் ஆட்ட நாயகனாக அன்ரனிஸின் திலீபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

குறித்த இறுதியாட்டங்களுக்கு பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்துகொண்ட அதேநேரம் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி சிறி சற்குணராஜா, மத்திகை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் உமாசங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-108)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

வலிகாம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய அணி மோத வுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நக்கீரன் அணி மோதவுள்ளது. (23)

## இறுதிக்குப் பறந்தது பாடுமீன் வி.கழகம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணி மோதிக்கொண்டது இந்த இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## ஞானமுருகன், றோயல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 21

வலிகாம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து கரவைச்சுடர் அணி மோதிக்கொண்டது. இதில் ஞானமுருகன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில்ஊரெழுறோயல்அணியை எதிர்த்து செஞ்சுடர் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத் தொடர்
# கிண்ணம் வென்றது சென்.யூட்

யாழ்ப்பாணம், ஜூலை 21

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் அமரர் யோன் கில்லறி ஞாபகார்த்தமாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சுப்பர் றாங் அணியை இலகுவாக வீழ்த்தி கிண்ணம் வென்றது சென்.யூட்.



நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் அணியை எதிர்த்து சுப்பர் றாங் அணி மோதிக் கொண்டது. இதில் முல்லைத்தீவு சென்.யூட் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

ஆட்டநாயகனாக முல்லைத்தீவு சென்.யூட் அணி வீரன் சிறியும் தொடராட்ட நாயகனாக சுப்பர் றாங் அணியின் ஜெகனும் அதிக கோல்களை அடித்த வீரனாக உதய சூரியன் அணியின் மோகனும் (10 கோல்கள்) சிறந்த அணியாக வற்றாப்பளை செந்தமிழ் அணியும் தெரிவானார்கள்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினாரக இரணைப்பாலை பங்குத் தந்தை அருட் செல்வன் அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாக இரணைப் பாலை உதவிப் பங்குத் தந்தை சுமன் அடிகளாரும், முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜேபாகுவும், சட்டத்தரணி புனிதநாயகமும் கலந்து கொண்டனர். (ம-23)



## சம்பியனானது கில்லறி

யாழ்ப்பாணம், ஜூலை 21

வேரவில் கலைமகள் விளையாட்டுக்கழகம் மறைந்த கழக வீரர்களின் நினைவாக வடமாகாண ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது.

சங்கானை இளைஞர் அணியை எதிர்த்து மன்னார் சாவற்கட்டு கில்லறி அணி மோதிக்கொண்ட இந்த இறுதியாட்டத்தில் மன்னார் சாவற்கட்டு கில்லறி அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

தொடரின் சிறந்த வீரனாக மன்னார் சவற்கட்டு கில்லறி அணியின் அன்ரன் ரஞ்சனும் சிறந்த கோல் காப்பாளராக மன்னார் சாவற் கட்டு கில்லறி அணியின் கோல் காப்பாளர் சரத்பாபுவும் தொடராட்ட நாயகனாக மன்னார் சாவற்கட்டு கில்லறி அணியின் டிலக்சனும் தெரிவான அதேநேரம் சிறந்த அணியாகப் பூநகரி கலையொளி அணி தெரிவானது. (ம-23)

# சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

அருட் தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் குருத்துவத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம், சென்.ஜேம்ஸ் சனசமூக நிலையமும் இணைந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு– சாவற்கட்டு மாகத்மா அணிக்கும் புங்குடுதீவு நண்பர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சவற்கட்டு மாகத்மா 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தம்பாட்டி காந்திஜீ அணிக்கும் புங்குடுதீவு நசேரத்து அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் வெற்றி தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சம நிலைத் தவிர்ப்பு உதைகளை கச்சிதமாகப் பயன்படுத்திய தம்பாட்டி காந்திஜி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

புங்குடுதீவு சணிஸ்ரார் அணிக்கும் ஊர்காவற்றுறை ஞானவொளி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் ஏதுவித கோல்களையும் பெறாதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. வெற்றி தோல்விகளை நிச்சயப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதைகளை சரிவரப் பயன்படுத்திய ஊர்காவற்றுறை ஞானவொளி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# ஆர்.எப்.சி. பந்தயத்தில் கோடிகள் குவியுமாம்

காடுகளை ஊடுருவி கார் பந்தயம் என்ற தொனிப்பொருளில் கோவாவில் நடைபெறும் பிரபல ஆர்.எப்.சி. கார் பந்தயத்தின் இரண்டாவது சீசன் நாளை மறுதினம் வெள்ளிகிழமை நடைபெறவுள்ளது.

ஜூலை 24ஆம் திகதி தொடங்கி 31ஆம் திகிதி வரை சவாலான மலைப்பாதையில் நடைபெறும் இந்த தொடர் மொத்தம் 24 நிலைகளாக நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுகளில் கிடைத்த வருமானங்களைக் காட்டிலும் இந்த வருட ஆர்.எப்.சி. பந்தயத்தின்மூலம் கிடைக்கும் வருமானம் 20 சதவீதத்தால் அதிகரிக்கும் என்று ஆர்.எப்.சி. நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம)


தேவை
அசைவ உணவகத்துக்கு சமையலாளர், உதவியாளர் தேவை.
தொடர்பு : 077 125 8072

A/L 2015 கருத்தரங்கு
அரசியல் - N.பாபு
காலம் :- 24.07.2015
வெள்ளி 8.00 am - 4.00 pm
* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
* கையேடுகள் வழங்கப்படும்.
யூனிவேர்சல்
(யாழ்/இந்து மகளிர் அருகில்)

NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna.
க.பொ.த(உ/த) 2015 இறுதிப் பரீட்சை
பௌதிகவியல் II
காலம்:- 22.07.2015 புதன்கிழமை
நேரம்:- காலை 09.00 - 12.00மணி
(தொடர்ந்து 12.30 - 3.30மணிவரை பௌதிகவியல் கருத்தரங்கும் இடம்பெறும்)
R.குமரன் & R.குகன்

European Language Training Centrel
வெளிநாடு செல்வோருக்கான ஜேர்மன், பிரெஞ் மற்றும் சிங்கள மொழிகளும் கற்பிக்கப்படும். ஐரோப்பியன் யூனியனின் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு கல்வி நிறுவனம் .
கற்பிக்கப்படும் மொழிகள் :-
French-French(பிரான்ஸ், கனடா, சுவிஸ்செல்வோருக்கான பரீட்சை(DELF) A1 அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
German-ஜேர்மனி, சுவிஸ் செல்வோருக்கான(Goethe Zertifikat A1)German Swiss Deutsh A1) அவசியமான பரீட்சை
English- (Speaking, A1 , IELTS)
Sinhala-(அரச உத்தியோகத்தர்களுக்காக )
ஆகிய வகுப்புக்கள்ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அனுமதிக்கு முந்துங்கள்
கிளிநொச்சி
T.P :- 021 228 3690
075 077 3160
இல 07, பழைய கச்சேரி அருகில், கிளிநொச்சி.
வவுனியா
T.P :- 024 561 6556
072 613 4725
சிவன்கோவிலடி, கோவில்குளம், வவுனியா.




கிரிக்கெட், உதைபந்தாட்டம், ரென்னிஸ் இவ்வாறாக இருந்து கார்பந்தயம், ஆர்.எப்.சி. பந்தயம், மோட்டார் சைக்கிள் பந்தயம் என்றவாறாக விளையாட்டுலகத்தின் பார்வை தற்பொழுது திரும்பியுள்ளது. அதிலும் குறிப்பாக மோட்டார் சைக்கிள் பந்தயத்துக்குரிய ரசிகர்களின் எண்ணிக்கையை கேட்கவே வேண்டாம். இவ்வாறாக மோட்டார் பந்தயத்தில் ஆர்வம் கொண்ட சில சிறுவர்கள் தமது துவிச்சக்கர வண்டியை மோட்டார் சைக்கிளைப்போல் உருவகம் செய்தும் தம்மை வீரர்கள் போல் பாவனை செய்தும் முகப்புத்தகத்தில் நகைச்சுவையாக இந்தப்படத்தை பதிவுசெய்துள்ளனர். இந்தப்படத்துக்கு தமது விருப்புக்களைத் தெரிவித்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியுள்ளது. (ம)

# தொடரில் கலந்துகொண்டால் கிண்ணம் வெல்வேன்




அடுத்த மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள யு.எஸ். ரென்னிஸ் தொடரில் நான் கலந்துகொள்ளும் பட்சத்தில் கிண்ணத்தைக் கைப்பற்றுவதை எவராலும் தடுக்க முடியாது. இவ்வாறு தெரிவித்துள்ளார் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ்.

முழங்கால் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக சுவீடன் ரென்னிஸ் தொடரிலிருந்து விலகிய செரீனா உபாதையில் இருந்து மீளமுடியாமல் தொடர்ந்து அவதியுற்று வருகிறார். இந்த நிலையில் எதிர்வரும் யு.எஸ். தொடரில் செரீனாவை வீழ்த்துவேன் என்று செரபோவா தெரிவித்திருந்தார் இவையெல்லாவற்றையும் வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே செரீனா இவ்வாறு தெரிவித்துள்ளார். யு.எஸ். தொடர் தொடர்பாக செரீனா தெரிவித்ததாவது ரென்னிஸ் உலகில் மிகவும் கௌரவமாகப் பார்க்கப்படும் தொடர்களில் யு.எஸ். தொடரும் ஒன்று. விம்பிள்டன் தொடரைப் போன்று யு.எஸ். தொடரையும் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் எனது உடல் அதற்கு ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை. உடல் நலம் மீண்டும் சிறப்பாக இருக்கும் பட்சத்தில் யு.எஸ். கிண்ணத்தை எவரிடமும் கொடுக்க மாட்டேன் என்றார். (ம)

# நடாலின் ஆட்டம் விரைவில் ஆரம்பமாகும்

ஸ்பெயினின் முன்னணி ரென்னிஸ் வீரரான ரபேல் நடால் தொடர்ந்து சொதப்பி வரும் நிலையில் எதிர்வரும் யு.எஸ்.தொடரில் அவர் கிண்ணம் வெல்வார் என்று ஸ்பெயின் ஊடகமொன்று கட்டுரையொன்றைப் பிரசுரித்துள்ளது.

நடால் தொடர்பாக குறித்த ஊடகம் குறிப்பிட்டிருக்கும் கட்டுரையில் வெற்றியும் தோல்வியும் ஒரு வீரனுடன் இரண்டறக் கலந்தவை. தனியே வெற்றிபெற்ற வீரர் என்றோ அல்லது தனியே தோல்விகளைச் சந்தித்த வீரனென்றோ குறிப்பிட்டு ஒருவரைச் சொல்லிக்கொள்ள முடியாது. நடாலின் பாதையில் தற்பொழுது முட்செடிகள் நிறைந்துள்ளன. அவற்றிலிருந்து மீண்டு வருவதற்கு எத்தனிக்கும் அவர் விரைவில் தனது பசுமையான பாதைக்குத் திரும்புவார். சாதிக்கத் தொடங்குவார். இன்று உலகின் முன்னணி வீரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் நடாலின் ஆட்டம் ஆரம்பித்ததும் வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலாதவர்களாக இருப்பார்கள் என்றுள்ளது (ம)




31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்
அமரர் செல்வராசா ரவீந்திரன்
தோற்றம் 17.08.1963
மறைவு 21.06.2015

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (21.07.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
21.06.2015 அன்று அன்னாரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த அயலவர்கள், உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்களுக்கும் தபால் மூலமும், தொலைபேசி மூலமும், இணையத்தளம் மூலமும் துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் குடும்பத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
சிவபூதராயர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
குடும்பத்தினர்.
021 300 2016

A/L தமிழ்
மாபெரும் கருத்தரங்கு
(யா,கொ)
2014 இல் 3A (3) பெற்ற செல்வி செ.இமாஜினியை வாழ்த்தி
எ.பா.வினா விடைகளுடன்
★ நீர்வேலியில்-வியா
★ யாழில்-வெள்ளி 9.30
★ ... 3.00-5.00
(MA)
077 54 78 159
072 6015 230 (Only SMS)
200/=
300/=
SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.